N 426
Pages : 216
Price Rs. 40/-
Paper Used : 11.6 kg SPB/C.W.

□ Naalai Varuvaan Naayagan - A Social Novel in Tamil by Anuradha Ramanan ©  □ First Edition : 1987 □ Second Edition : May 1999 □ Published by T. S. Ramalingam, Narmadha Pathipagam, Chennai - 600 017 □ Printed at M/s Kanna Palani Achagam, Chennai - 600 005

6 - FEB 2001

# நாளை வருவான் நாயகன்

அனுராதா ரமணன்

நர்மதா பதிப்பகம்
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
16/7, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார்
தியாகராய நகர்       சென்னை 600 017

567/2001
78

523410

894.8113
ANU

**வாசித்தீர்களா?**

| | | |
|---|---|---|
| ● சின்னஞ் சிறுசுகள் | அநுராதா ரமணன் | 25 00 |
| ● பட்டாபி கதைகள் | திலகவதி | 37 00 |
| ● அரசிகள் அழுவதில்லை | ,, | 40 00 |
| ● எல்லாமே சரி | அசோகமித்திரன் | 41 00 |
| ● ஒற்றன் | ,, | 40 00 |
| ● இன்னொரு மனிதன் | சா. கந்தசாமி | 50 00 |
| ● மீண்டும் கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் | ஜெயந்தன் | 32 00 |
| ● காம்ரேடுகள் | விட்டல்ராவ் | 45 00 |
| ● யுகதர்மம் | வண்ணநிலவன் | 45 00 |
| ● முதல் ஆட்டம் | இரா. முருகன் | 37 00 |
| ● ஆசை அறுபது வருஷம் | தேவிபாலா | 43 00 |

நர்மதா பதிப்பகம்
சென்னை - 600 017

0,53NA,N
N9

CONNEMARA PUBLIC LIBRARY
6 - FEB 2001
MADRAS-600 008.

# நாளை வருவான் நாயகன்

## 1

'வெற்றிலை பாக்கு, சந்தனம், பூ... இன்னும் என்ன...' இந்துஜா, தன் கையிலிருந்த முழு நீளப் பட்டியலைப் பார்க்கிறாள்.

'தூத்பேடா ஒரு கிலோ... மிக்சர் ஒரு கிலோ...' பட்டியல் அத்துடன் முடியவில்லை. காகிதத்தின் ஓரத்தில் கோணலும் மாணலுமாய், அம்மா இன்னும் எதையோ நுணுக்கி நுணுக்கி எழுதியிருந்தாள்.

காப்பிப் பொடி— பீபெரி— ஒரு கிலோ...

அத்தனை பரபரப்பிலும் இந்துஜாவுக்குச் சிரிப்புத் தான் வருகிறது.

ஒரு பெண் பார்க்கும் படலத்துக்கு இத்தனைத் தடபுடலா...

ஏதுடா, மாசக் கடைசியில் இத்தனையையும் வாங்கப் பெண் எங்கே போவாள் என்று தோன்ற வேண்டாமோ...

இதுகூடப் புரியாத அம்மா— என்ன அம்மா...

அத்தனை சாமான்களையும் ஒருத்தியாய்ச் சுமப்பதால் கை மட்டுமல்ல... நெஞ்சுமே வலிக்கிறது.

காலையில், ஆபீசுக்குக் கிளம்பும் பொழுதே அம்மா சொல்லிவிட்டாள்.

"மத்தியானம் லஞ்சுக்கு மேல வீட்டுக்கு வந்துடு..."

"ஏன்?"

"நேத்து ராத்திரி நானும் அப்பாவும் பேசிட்டிருந்தோமே அதைக் கேட்டுட்டுத்தானே இருந்தே... அப்புறம், 'ஏன்'னு என்ன கேள்வி. இன்னிக்கு சாயந்தரம் உன்னைப் பெண் பார்க்க அந்த சேலத்து வரன் வரான்."

"ராத்திரி ஏழு மணிக்கு வரச் சொல்லு. எனக்கு இன்னிக்கு முழுக்க அசைய முடியாது. செமை வேலை."

"நல்லாயிருக்கே... அவங்களா வர்றேன்னு சொல்றப்போ நாம முறுக்கிக்கிறதா? நேத்திக்கே உங்க மாமாகிட்டச் சொல்லிட்டேன். 'என்னைக் கேக்கவே வேண்டாம். எப்ப இளம்பி வரணுமோ அப்ப கிளம்பிடச் சொல்லு'ன்னு அவனும் சொல்லிட்டான்."

உறவுக்காரர்களிடமே — அதுவும் — சொந்தத் தாய் மாமாவின் நிறுவனத்திலேயே வேலை பார்ப்பதில் உள்ள கஷ்ட நஷ்டங்களையும், லாப வசதிகளையும் இந்துஜா அறிவாள்.



ஆனால், அவளது குடும்பத்தினருக்கு இதிலுள்ள வசதிகள் மட்டுமே கண்ணுக்குத் தெரியும்.

சங்கரிக்கு, தன் அண்ணா சொந்தமாக ஒரு கம்பெனி வைத்து நடத்துவதில் அலாதிப் பெருமை.

"எங்கக் குடும்பத்தை நிலை நிறுத்தினதே அவன்தான்... அவனில்லாவிட்டால் இந்த வீட்டிலே ஒரு துரும்புகூட அசையாது."

அம்மாவின் இந்த வார்த்தைகளை முழுக்க ஆமோதிக்க அப்பாவுக்கு மனசு வராது. வாழ்ந்து கெட்டவரல்லவா... இருந்தாலும், மனைவியின் பேச்சில் உண்மை இருப்பதை அவர் அறிவார்.

எப்பேர்ப்பட்ட குடும்பம் அது... மாயாபஜார் சினிமாவில் திடீரென்று விண்ணளாவிய மாளிகை அடியோடு காணாமல் போவது மாதிரி.

எல்லாமே ஒரு நாளில் அடியோடு மறைந்து விட்டதே...

இந்துஜா, முகத்தில் வழிந்த வியர்வையைக் கைக்குட்டையால் ஒற்றிக் கொள்கிறாள்.

அம்மாவின் லிஸ்ட்டில் இன்னும் இரண்டு டஜன் மலைவாழைப் பழம் பாக்கி.

சங்கரிக்கு எதையுமே குறைத்துச் செய்ய முடியாது. இன்னமும் பழைய நினைப்பிலேயே, இரண்டு கைகளையும் தாராளமாய் வீசித்தான் செலவழிப்பாள்.

ஒருத்தியின் சம்பாத்தியத்தில் இத்தனையும் என்னமாய்த்தான் நடக்கிறது என்று கொஞ்சம்— ரொம்பவும் வேண்டாம் ஒரு துளியளவாவது— இவள் சிந்தித்துப் பார்த்திருப்பாளோ...

எங்கே... அவளைப் பொறுத்தவரையில் அண்ணன் காரன் குபேரன்; பாரிவள்ளல்; சொந்தத்தில் ரூபாய் நோட்டு அச்சடிக்கும் யந்திரம் வைத்திருக்கிறான் என்றுதான் நினைப்பு.

அன்று காலையில் கூடச் சொன்னாளே...

"இந்து, எது ஒண்ணுன்னாலும் நமக்கு சபேசன் மாமா பக்கத்திலே இருந்தாத்தான் தெம்பு. அவன் கிட்ட முன்னாடியே சொல்லு, இந்த மாதிரி சேலத்துப் பையன் இன்னிக்குப் பொண்ணு பார்க்க வரான்னு. அவன் பார்த்து, நாலு பேர்கிட்ட சொல்லி வச்சு, கிடைச்சிருக்கிற வரன்... அவன் வந்தாத்தான் சரிப் படும்."

"உம்..."

"இந்த லிஸ்டைக்கூட நீ அவன் கிட்டக் கொடுத் துடலாம்... அவனுக்குத்தான் எந்த சாமான், எங்கே உசத்தியாய்க் கிடைக்கும்னு தெரியும். பணம் போத லைன்னா கூச்சப்படாமே அவன் கிட்டக் கேளு... அன்னியமா அசலா, மாமாதானே...?"

இந்துஜாவிற்கு அம்மாவின் குழந்தைத்தனமான வார்த்தைகள்... வேதனையளிப்பதாய்...

பாவம் அம்மா... இன்னமும் தன் அண்ணாவை, பாசமலர் சிவாஜிகணேசனாகவே நினைத்துக் கொண் டிருக்கிறாள்.

ஐயோ, அசட்டு அம்மாவே... இந்தக் காலத்தில் பணம்தான் முக்கியம். என்னை ஒங்க அண்ணா— சும்மாவாவது, பரிதாபப்பட்டு வேலைக்கு எடுத்துக் கொள்ளலை. என்னாலே அவருக்கு எத்தனை லாபம்னு கணக்குப் போட்டுத்தான் வேலையிலே வச்சிருக்கார்...



ஒண்ணு மாத்திரம் தெரிஞ்சுக்கோ. ஒருத்தியாலே தான் உயர முடியும்னாத்தான் எவனுமே, தன் பர்ஸைத் திறந்து ஐந்து காசு எடுப்பான். இதுதான் உலகம்...

மனசுக்குள் நினைத்ததையெல்லாம் வெளியே சொல்ல முடிகிறதா...

அப்படிச் சொல்வதென்றால் எத்தனை எத்தனை விஷயங்கள் இருக்கிறது.

ஒரு பெண்ணுக்குத் தன்னைப் பெற்ற தாயிடம் கூட வெளியிட முடியாத அளவுக்கு ரகசியங்கள் இருக்க முடியுமா...

முடியும். முடிந்துதானாக வேண்டும். இல்லாவிட் டால் குடும்பம் நகராது. படுத்துவிடும்.

இப்படி இந்த வீட்டின் ஒரே சுமைதாங்கியாக இருக்கும் இந்துஜாவையும் மணமுடித்துக் கொடுத்து விட்டால் அப்புறம் குடும்பம் நடப்பது எப்படியென் பதைப்பற்றி இவர்கள் சிந்தித்துப் பார்த்திருக்கிறார் களோ...

அப்பாவுக்கு, வீட்டுக்கு வரும் மாப்பிள்ளைகள் எல்லோரும் வீட்டோடு தங்கிவிட வேண்டும், பிள்ளை இல்லாத குறை நீங்கும்படியாக...

அம்மாவுமே அப்படித்தான்.

"ஏதோ வர்றவன்... நம்ம குடும்ப நிலைமையைப் பார்த்து, இரக்கப்பட்டு, ரெண்டு பேரும் இங்கேயே இருந்துடுவோம்னு சொல்லிட்டாத் தேவலை. அந்த மாதிரி அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போற பிள்ளைதான் நமக்கு வேணும்னு நான் அண்ணாகிட்டச் சொல்லிட் டேன்."

எங்கே... அவளைப் பொறுத்தவரையில் அண்ணன் காரன் குபேரன்; பாரிவள்ளல்; சொந்தத்தில் ரூபாய் நோட்டு அச்சடிக்கும் யந்திரம் வைத்திருக்கிறான் என்றுதான் நினைப்பு.

அன்று காலையில் கூடச் சொன்னாளே...

"இந்து, எது ஒண்ணுன்னாலும் நமக்கு சபேசன் மாமா பக்கத்திலே இருந்தாத்தான் தெம்பு. அவன் கிட்ட முன்னாடியே சொல்லு, இந்த மாதிரி சேலத்துப் பையன் இன்னிக்குப் பொண்ணு பார்க்க வரான்னு. அவன் பார்த்து, நாலு பேர்கிட்ட சொல்லி வச்சு, கிடைச்சிருக்கிற வரன்... அவன் வந்தாத்தான் சரிப் படும்."

"உம்..."

"இந்த லிஸ்டைக்கூட நீ அவன் கிட்டக் கொடுத் துடலாம்... அவனுக்குத்தான் எந்த சாமான், எங்கே உசத்தியாய்க் கிடைக்கும்னு தெரியும். பணம் போத லைன்னா கூச்சப்படாமே அவன் கிட்டக் கேளு... அன்னியமா அசலா, மாமா தானே...?"

இந்துஜாவிற்கு அம்மாவின் குழந்தைத்தனமான வார்த்தைகள்... வேதனையளிப்பதாய்...

பாவம் அம்மா... இன்னமும் தன் அண்ணாவை, பாசமலர் சிவாஜிகணேசனாகவே நினைத்துக் கொண் டிருக்கிறாள்.

ஐயோ, அசட்டு அம்மாவே... இந்தக் காலத்தில் பணம்தான் முக்கியம். என்னை ஒங்க அண்ணா— சும்மாவாவது, பரிதாபப்பட்டு வேலைக்கு எடுத்துக் கொள்ளலை. என்னாலே அவருக்கு எத்தனை லாபம்னு கணக்குப் போட்டுத்தான் வேலையிலே வச்சிருக்கார்...



ஒண்ணு மாத்திரம் தெரிஞ்சுக்கோ. ஒருத்தியாலே தான் உயர முடியும்னாத்தான் எவனுமே, தன் பர்ஸைத் திறந்து ஐந்து காசு எடுப்பான். இதுதான் உலகம்...

மனசுக்குள் நினைத்ததையெல்லாம் வெளியே சொல்ல முடிகிறதா...

அப்படிச் சொல்வதென்றால் எத்தனை எத்தனை விஷயங்கள் இருக்கிறது.

ஒரு பெண்ணுக்குத் தன்னைப் பெற்ற தாயிடம் கூட வெளியிட முடியாத அளவுக்கு ரகசியங்கள் இருக்க முடியுமா...

முடியும். முடிந்துதானாக வேண்டும். இல்லாவிட் டால் குடும்பம் நகராது. படுத்துவிடும்.

இப்படி இந்த வீட்டின் ஒரே சுமைதாங்கியாக இருக்கும் இந்துஜாவையும் மணமுடித்துக் கொடுத்து விட்டால் அப்புறம் குடும்பம் நடப்பது எப்படியென் பதைப்பற்றி இவர்கள் சிந்தித்துப் பார்த்திருக்கிறார் களோ...

அப்பாவுக்கு, வீட்டுக்கு வரும் மாப்பிள்ளைகள் எல்லோரும் வீட்டோடு தங்கிவிட வேண்டும், பிள்ளை இல்லாத குறை நீங்கும்படியாக...

அம்மாவுமே அப்படித்தான்.

"ஏதோ வர்றவன்... நம்ம குடும்ப நிலைமையைப் பார்த்து, இரக்கப்பட்டு, ரெண்டு பேரும் இங்கேயே இருந்துடுவோம்னு சொல்லிட்டாத் தேவலை. அந்த மாதிரி அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போற பிள்ளைதான் நமக்கு வேணும்னு நான் அண்ணாகிட்டச் சொல்லிட் டேன்."

இப்படிச் சொல்லிச் சொல்லித்தான் - பவித்ராவுக்குச் சல்லடை போட்டுச் சலித்து, பிரபாகரைத் தேர்ந்தெடுத்து மண முடித்தார்கள்.

"பையன் ரொம்பவும் நல்ல மாதிரி. மாயவரத்துக்குப் பக்கத்திலே அம்பது ஏக்கர் நஞ்சை நிலம் இருக்காம்... அம்மா... அப்பா இல்லே... தூரத்து உறவுலே ஒரு அத்தை இருக்கா. பிக்குப்பிடுங்கல் இல்லே..."

"அந்த அத்தைகூட, இவன்கூட இல்லே. ஜபல்பூர்லே தன் பிள்ளையோட இருக்கா. பையனைப் பத்திப் பேச ஆரம்பிச்சா வாய் ஓய மாட்டேங்காற."

"ஐம்பது ஏக்கரும் இவன் ஒருத்தனுக்கேதானாம். அதைத் தவிர, ஒரு தென்னந் தோப்பு, புளியந் தோப்பு எல்லாம் உண்டு. இத்தனையையும் கிராமத்துல கணக்குப்பிள்ளை கவனிச்சுக்கிறார்."

"அப்படியும் கிராமமே கதியின்னு உட்கார்ற பிள்ளையில்லே... இங்கே, மெட்ராஸ்லேதான் ஏதோ பத்திரிகையிலே வேலையா இருக்கான். தினமும் ஆபீசுக்குப் போக வேண்டியதில்லே... நாலு சினிமா பார்க்கணும்; நாலு ஷூட்டிங்குக்குப் போகணும் ஒரு தாளிலே விமரிசனத்தைக் கிறுக்கித் தள்ளிட்டு, காலரைத் தூக்கி விட்டுண்டே வெளியே வந்துடலாம். அது என்னமோ ஃப்ரீ லான்ஸ் ஜர்னலிஸ்ட்டாமே... வாயிலேயே நுழைய மாட்டேங்குது... அவன் அந்த வேலை பார்க்கிறானாம்."

"எழுதிச் சம்பாதிச்சுத்தான் ஆகணும்னு இல்லே... கிராமத்துலேயிருந்து மூட்டை மூட்டையா நெல்லு வரும், தேங்கா வரும், புளி வரும்... குத்தகைப் பணம் வரும். நம்ம பவித்ரா அதிருஷ்டசாலி..."



"வரதட்சிணை, சீர் எதுவும் வேண்டாம்னுட்டான் பையன். 'எங்க பத்திரிகையிலேயே இதைப் பத்தி கண்டிச்சு எழுதறோம். நானே எழுதறேன். அப்படி இருக்கிறப்போ வாங்கிப்பேனா?'ன்னு ஒரு அதட்டல் போட்டான் பாரு, கூடமே அதிர்ந்து விட்டது."

"கல்யாணத்தை ஸிம்பிளா முடிச்சிட்டு, ரிஸப்ஷனைப் பெரிய ஹோட்டல்லே வச்சிட்டாப் போதும்னு சொல்லிட்டான். ஏன்னு கேட்டா சினிமாக்காரங்க சம்பந்தப்பட்ட தொழிலாச்சே... ரஜினி, கமல், பிரபு எல்லோரும் வருவாங்களாம்."

பவித்ரா - இந்துஜாவைவிட மூன்று வயது மூத்தவள். இதையெல்லாம் கேட்டுக் கன்னம் சிவக்கச் சிரித்த காட்சி...

மடையர்கள். இந்தக் குடும்பத்திலுள்ள அத்தனை பேருமே வடிகட்டின மடையர்கள்...

தங்களது குடும்பத்தை தாங்களேதான் காப்பாற்ற வேண்டும் என்கிற சுய கௌரவம் இல்லாத பாவிகள்...

வாழைப் பழத்தை வாங்கிப் பிளாஸ்டிக் கூடைக்குள் போட்டுக் கொண்டே இந்து, மனசார இவர்களைச் சபிக்கிறாள்.

எத்தனைதான் பாவம், பரிதாபம் பார்த்தாலும், ஓரிரு சமயங்களில் இவர்களைச் சபிக்கத்தான் தோன்றுகிறது.

குருவி தலையில் பனங்காயைத் தூக்கி வைக்கலாம்... ஆனால் பாறையையே தூக்கி வைக்கலாமோ... அப்படியே நசுங்கி, கூழாகி விடாதோ...

ஆனால்...

இந்துஜாகூட, பிரபாகரனின் வரவை ஒரு காலத்தில் ஆவலுடன் எதிர்பார்த்தவள்தான்.

தன் சுமைக்குத் தோள் கொடுக்க அல்ல... அந்தச் சுமையிலிருந்து ஒரு பங்கைக் குறைக்க மாட்டானா என்கிற நைப்பாசைதான்.

ஒரு வயிறென்றால் ஒரு வயிறு... பவித்ரா என்கிற பெண் ஜென்மத்தையாவது, அவன் தன் பாதுகாப்புக்குள் இழுத்துக்கொள்ள மாட்டானா என்கிற தவிப்பில்...

கல்யாணமாகி, நாலைந்து மாதங்கள் உருண்ட பிறகுதான் தெரிந்தது...

பிரபாகரன் அந்த வீட்டின் நிரந்தரப் பிரஜை மட்டுமல்ல— தரித்திர பிரஜையும்கூட என்று...

ஐம்பது ஏக்கர் வெறும் ஐந்து ஏக்கர்தான் என்றும், தென்னந்தோப்போ, புளியந்தோப்போ கிடையாது. அதற்குப் பதில் ஓரிரண்டு தென்னை, புளிய மரங்கள் அவனது நிலத்துக்குப் பக்கத்தில் இருக்கிறது என்பதும், அதுவும்கூட இவனுடையதா இல்லை, அடுத்த நிலத்துச் சொந்தக்காரனுடையதா என்று இன்னும் தீர்மானிக்கப்படவில்லையென்றும் புரிந்தபோது...

சங்கரியும், அவள் கணவர் சுவாமிநாதனும் வாயடைத்துப் போய் விட்டார்கள்.

இந்துஜாவுக்கு அக்காவின் திருமண வரவேற்பின் போதே விஷயம் தெரிந்துவிட்டது...

ரிஸப்ஷனுக்கு மட்டும் ஐந்தாயிரம் ரூபாய் செலவழிந்தது. எல்லாம் அவள் பணம். குலோப்ஜாமூனும்,



காரசோமாசியும், ஐஸ்கிரீமுமாக மிதிபட்டது... எல்லாம்... அவள் வியர்வைத் துளிகளின் மணத்தைச் சுமந்திருக்கும் பணம்.

ரஜினியும் வரவில்லை கமலும் வரவில்லை... ஆனால்— வேறு ஏதேதோ மூன்றாம் தர, நாலாம் தரப் பெண்களும், அதற்கு முன் இது போன்ற பார்ட்டியையே கண்ணால் பார்த்திராத ஆண்களும் வந்திருந்தனர்.

''இவங்க எல்லாம் யாரு... பத்திரிகையைச் சேர்ந்தவங்களா, சினிமாவைச் சேர்ந்தவங்களா...''

இந்துவின் கேள்விக்கு, வரிசைப் பற்கள் தெரியச் சிரித்தான் மாப்பிள்ளை...

''இவன் வந்து... சினிமாவுக்குக் கதை எழுதிட்டிருக்கான். இனிமேத்தான் ஷைன் பண்ணனும்... இவனோட அருமை டைரக்டர்ஸுக்குத் தெரியலை... இதோ இவ இருக்காளே... பெரிய டான்ஸர். நம்ம பாக்யராஜ் படத்திலே குரூப் டான்ஸ் ஒண்ணு வருதில்லே... அதுலே வருகிற பொண்ணு... அந்தப் பாட்டு... என்ன... ஞாபகம் வரலே... சொல்லேன் சுஜி...''

அவள், அனாவசியமாய் நாணிக் கோணினாள்.

''பாவாடைத் தாவணியோ, பூவாடை மேனியோ தங்கத் தட்டு, சின்னச் சிட்டு...''

அவள் மெள்ளச் சொல்ல, அவன் புளகித்துப் போனான்.

''அருமையான பாட்டு... இது துரதிருஷ்டம் பாரு... பாக்யராஜ் படத்திலே ஹீரோயினா நடிக்க

வேண்டியவ குருப் டான்ஸ்ஆடிட்டிருக்கா. இவளைப் பத்தி ஒரு கட்டுரை கலர் டிரான்ஸ்பரன்ஸியோட ஒரு பத்திரிகைக்கு அனுப்பியிருக்கேன்... இன்னும் பிரசுர மாகல்லே...''

இந்துஜா, தொண்டைக்குள் கசப்பாய் எதுவோ ஊர்வதைப் போல் உணர்ந்தாள்.

இதற்குப் பின்— பிரபாகரன் இந்த வீட்டின் ஒன்பதாவது நபராகிவிட்டான்...

ஆமாம்... ஒன்பது பேர்கள்... அம்மா சங்கரி, அப்பா சுவாமிநாதன், சங்கரியைப் பெற்ற என்பது வயதுக் கிழவி செல்லம்மாவும், திருமணமான மூன்றாவது வருடத்திலேயே விதவையாகிப் போன மூத்த மகள் கமலாவும், அவளின் இரண்டு பிள்ளை களான கோபுவும், சீனுவும், புதுசாய்த் திருமணமான இரண்டாவது மகள் பவித்ராவும், இதோ— தன்னைப் பெண் பார்க்க வருபவனுக்காகத் தானே ஓடி ஓடி வெற்றிலையையும், ஸ்வீட்டுமாய் வாங்கிக் கொண் டிருக்கும் இந்துஜாவுடன்— புது மாப்பிள்ளையான பிரபாகரனையும் சேர்த்து எண்ணினால்...

அந்த வீட்டின் ஜனத்தொகை மொத்தம் ஒன்பது. இந்த லட்சணத்தில் இவளுக்கென்று ஒருவனைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

யார் கண்டது? வருபவனும் இந்துஜாவின் சம்பளத்திலேயே வாழ்ந்து விடலாம் என்கிற நினைப் புடன் வந்தால்?

அவளுக்கு, இந்த நினைப்பே தலையைச் சுற்றச் செய்யப் போதுமானதாய்...



வீட்டுக்குள் நுழைந்ததும் சங்கரியின் குரல்தான் வெண்கலக் கடையில் யானை புகுந்தாற் போல ஒலிக் கிறது...

''வந்தியாடியம்மா... அடுப்பிலே வெந்நீர் கொதிக் கிறது. டிகாக்ஷன் போடணும்னா காப்பிப் பொடி யில்லே... வாங்கிட்டு வந்தியா இல்லே... மறந் துட்டியா?''

இந்து, தன் கையிலிருந்த பையைத் தாயிடம் நீட்டுகிறாள்.

பையில் இருக்கும் பட்சணங்களை கோபு, சீனு கண்களில் படாமல் எடுத்துவை யென்று சொல்ல வேண்டும் போல உதடு துடிக்கிறது. முடியவில்லை. சொன்னால் கமலா மட்டுமல்ல சங்கரியே தன் பேரன் களுக்குப் பரிந்து கொண்டு வருவாள்.

''குழந்தைகளுக்கு இல்லாமே என்னடீ...''

இந்துவிற்குத் தன் அக்காள் குழந்தைகளிடம் பாசம் இல்லாமல் இல்லை. இரண்டு குழந்தைகளை யுமே நெஞ்சிலும், தோளிலும் போட்டு வளர்த்தவள் அவள்தான்.

இன்று கோபுவிற்குப் பதினைந்து வயது. சீனு வுக்குப் பதின்மூன்று.

கோபு பிறந்த போது — இந்துஜாவிற்குப் பன்னிரண்டு வயது. குழந்தைகள் பிறந்ததெல்லாம் அப்பா செல்வாக்குடன் இருந்த காலத்தில்...

வெல்வெட்டில் சின்ன மல்லிகைப் பூக்களால் அலங்கரித்த தொட்டிலும் குழந்தையின் பத்து விரல் களுக்கும் மோதிரங்களும், தங்கக்காப்பும்...

கமலா அந்த வகையில் அதிருஷ்டக்காரிதான். அவளுக்கு எல்லாமே சிறப்பாகத்தான் நடந்தது. புருஷனுக்கு மட்டும் அல்பாயுசாக இல்லாமல் இருந்திருந்தால்... அவளை விடவும் பாக்கியவதி இல்லை.

கொடுத்து வைக்கவில்லையே...

இதே கமலா, கணவனைப் பறி கொடுத்துவிட்டு அழுத போது, பதினைந்து வயது இந்து, தமக்கையைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

''அக்கா... அக்கா... அழாதேயேன்... நீ அழுதா, எனக்கும் அழுகை வரும்...''

அந்தப் பாசமும், பரிவும் இன்னமும் இந்துவின் நெஞ்சில் இருக்கிறதுதான்.

ஆனால் — அன்று பரிதாபத்துக்குரியவளாகக் காட்சியளித்த கமலாதான் இன்று எப்படி மாறிவிட்டாள்... எந்தப் பொருளானாலும், தனக்கும் தன் குழந்தைகளுக்கும்தான் முதலில் பங்கு எனப் பிடிவாதம் பிடிப்பதும், ஏறுமாறானால், 'எனக்குத்தான் இந்த வீட்டிலே எல்லாமே கடைசி. நானே ஒதுக்கப்பட்டவள்தானே?' என்று ஒப்பாரி வைப்பதும்...

அப்பப்பா...

இந்து, அவசர அவசரமாய்ப் பின்புறம் போய், முகத்தைக் கழுவிக் கொண்டு வருகிறாள். சோப்பு நுரை பட்டு, கண்கள் எரிச்சலெடுக்கிறது.

கண்ணாடியின் முன், முகத்தைத் துடைத்தபடி நின்றவள்— முன் நெற்றியில் மின்னலாய் தெளிந்த



ஒற்றை நரையை, இரண்டு விரல்களால் வெடுக்கெனப் பிடித்திழுக்கிறாள்.

நரை வரும்படியாகவா வயசாகி விட்டது.

உண்மைதான். இந்த வயசெல்லாம் பிரமாதமான வயசில்லைதான். ஆனால் இந்த இருபத்தியேழு வயசுக்குள் நாற்பதாண்டு அனுபவம் அவளுக்குக் கிடைத்திருக்கிறதே...

இத்தனை அனுபவங்களுக்குப் பிறகு எதற்காகக் கல்யாணம்...

அவளின் பெரிய கண்களில் நீர் திரையிடுகிறது... துரிதமாக அதைத் துடைத்தவள் இதற்கு மேலும் கண்ணீர் கரை கடந்து, கன்னத்தில் வழிந்துவிடக் கூடாது என்பது போல, சுட்டு விரலில் மையைத் தோய்த்து, இமை விளிம்புக்குள் கரையிழுத்தாள்.

''அவங்க வந்தாச்சு...''

சீனு, உள்ளே ஓடி வந்து ஒலிபரப்ப, அவள் மின்னல் வேகத்தில் சமையலறைக்குள் புகுந்து கொள்கிறாள்.

கூடத்தில் சம்பிரதாயத்துக்காக எழுந்த வரவேற்புக் குரல்கள்...

''வரணும்... வரணும்''

இந்து, சமையலறையில் அடுப்பு மேடை மீது பரத்தி வைக்கப்பட்டிருந்த ஸ்வீட், காரப் பொட்டலத்தைப் பார்க்கிறாள்... முகம் ஜிவ்வெனச் சிவக்கிறது...

அட்டைப் பெட்டியில் நான்கே நான்கு தூத் பேடாவும், மிக்சர் பொட்டலத்தில் கையளவு மிக்சருமே மீதியிருந்தன.

நல்ல வேளை... வாழைப் பழங்கள் இவர்களின் கண்களில் படாததால் தப்பித்தது. வெற்றிலையில் கூடப் பாதிக்கு மேல் காலி...

அப்பாவும் அக்காள் புருஷனும், கூடத்தில் வாய் சிவக்க, வெற்றிலைச் சாறு உதட்டோரத்தில் வழிய வழியப் பேசிக் கொண்டிருப்பது சமையலறையின் கதவிடுக்கு வழியே தெரிந்தது...

அம்மா, தன் பெருத்த உடம்பைத் தூக்கமாட்டா மல் தூக்கிக்கொண்டு உள்ளே ஓடி வருகிறாள்.

''வாடீ... வந்து நமஸ்காரம் பண்ணு...''

''அது இருக்கட்டும். எத்தனை பேர் வந்திருக்கா?''

''ஏன்... அஞ்சு பேர்...''

''ஸ்வீட் நாலுதான் இருக்கு. மிக்சரும் காலி... இந்தா, அந்த வாழைப்பழத்தை, ஒரு தட்டுக்கு இரண்டு பழமா எடுத்து வை. கொண்டு கொடுத்துட்டு நமஸ் காரம் பண்றேன்.''

முகத்தில் எந்தவிதச் சலனமுமில்லாமல் கூறும் மகளையே பார்த்துக்கொண்டு நிற்கிறாள் சங்கரி.

கிழவி செல்லம்மாள் மாத்திரம், சடபடவென்று கை விரல்களை முறிக்கிறாள்.

''இதுங்க வயித்துலே கடப்பாரையை வைக்க... பாவம், குழந்தை. இத்தனை சிரமப்பட்டு வாங்கிட்டு வந்ததை, இப்படியா ஒரே நிமிஷத்திலே தீர்த்துக் கட்டும்...''



இந்துஜா, பாட்டியைப் பார்த்து மெள்ள முறுவ லித்துவிட்டுக் கூடத்தை நோக்கி அடியெடுத்து வைக் கிறாள்.

காப்பி டம்ளரைக் கொடுத்துவிட்டு மாப்பிள் ளைப் பையனை வணங்கி எழுந்தவளின் கண்களில் தெரிந்த யாசிப்பு...

'என்னை ஏற்றுக் கொள்வாயா... எனக்கு நீ மனைவி ஸ்தானத்தைக் கூடத் தர வேண்டாம். இங்கேயிருந்து விடுதலை வாங்கிக் கொடு... போதும். எனக்கு அலுத்துவிட்டது... உழைத்து... உழைத்துச் சலித்துவிட்டது. என்னைப் பாரேன்...'

அவள், சடக்கென எழுந்து உள்ளே போகிறாள்.

கூடத்தின் பேச்சுக் குரல்கள்— இவளது வரவி னால் சற்று நேரம் ஸ்தம்பித்து, தடை பட்டு, மீண்டும் மெள்ள எழுகிறது...

## 2

சேலத்துக்காரர்களிடம், சுவாமிநாதன் கொட்டி அளந்து கொண்டிருக்கிறார்.

அந்தக் காலத்திலேயே அவர் இரண்டு வெளி நாட்டுக் கார்கள் வைத்துக் கொண்டிருந்ததைப் பற்றி ...ராஜா அண்ணாமலைபுரத்தில் ஆறு கிரௌண்டில் பங்களா இருந்தது பற்றி... தன்னிடம் ஆயிரம் பேருக்குக் குறையாமல் வேலை பார்த்ததுபற்றி... இப்

பொழுதும் தனக்கு எல்லாமே தாராளமாக இருக்க வேண்டும் என்பது பற்றி... தினமும் பச்சடி, பொரியல், கூட்டு, பொரித்த அப்பளம் இவைகள் இல்லாமல் சாப்பாடே இறங்காது என்பது பற்றி... தனது சர்க்கரை வியாதிக்கும், ரத்த அழுத்தத்துக்கும் டாக்டர் சொல்லியிருக்கிற 'டயட் சார்ட்' பற்றி...

போதாக் குறைக்கு உட்பக்கம் பார்த்து ஒரு அதட்டல் வேறு...

''ஏய்... என்ன இது... ஸ்வீட் காரம் எதுவுமில்லாம எடுத்த எடுப்புல வாழைப் பழத்தைக் கொண்டு வந்து வச்சிருக்கே... இந்த லேடீஸுக்கெல்லாம் விதரணையே தெரியலை சார். எப்பவுமே டிபன் இல்லாட்டி டின்னர் முடிஞ்சதுக்கு அப்புறம்தான் 'ஃப்ரூட்ஸ்' கொண்டு வைக்கணும்னு படிச்சுப் படிச்சு சொல்லுங்க... கேட்கவே மாட்டாங்களே... என் கம்பெனியிலே ஷேர் ஹோல்டர் மீட்டிங்ஸ்லே இது மாதிரி நடந்தா- அடுத்த நிமிஷமே டின்னர் ஏற்பாடு பண்ணின பி.ஏ.வைக் கல்தா கொடுத்து வெளியில தள்ளிடுவேன்... இந்தா... அம்மா இந்துஜா... ஸ்வீட் எடுத்துட்டு வாம்மா...''

இந்துஜா, சமையலறையின் சுவரோடு சுவராய் சாய்ந்து உட்கார்ந்து விட்டாள். எழுந்திருக்கும் உத்தேசமில்லை. எழுந்து போய்த்தான் என்ன செய்யப் போகிறாள்.

'அம்மாவாச்சு, அப்பாவாச்சு... என்னவோ சொல்லிக் கொள்ளட்டும்... எப்படியோ சமாளிக்கட்டும்... எப்படியிருந்தாலும் இந்தப் பையனோ, பையனைச் சேர்ந்தவங்களோ, 'பெண்ணைப் பிடித்திருக்கிறது' என்று சொல்லப் போவதில்லை...'



ஏன் இப்படி நினைக்கிறாள் இவள்... இவளுக்கு என்ன குறைச்சல்... அழகில்லையா, படிப்பில்லையா...

எல்லாம் இருக்கிறது. கூடவே கழுதைப் பொதியாய் இந்தக் குடும்பச் சுமையும் இருக்கிறதே...

இத்தனை பேரையும் எங்கே கொண்டு தள்ளுவாள்...

அது சரி. இவர்களுக்காக இவள் எத்தனை நாள்தான் உழைத்துக் கொட்டுவாள்... ஒரு வரம்பில்லையா...

கூடத்தில் அம்மா எதையோ சொல்லி, சிரித்து மழுப்பிக் கொண்டிருக்கிறாள்.

''அண்ணா வரப்போ, ஸ்வீட் காரம் வாங்கிட்டு வரேன்னு சொல்லியிருந்தான். இன்னும் வரக் காணோம். நான் வீட்டுலயே பண்றதாத்தான் சொன்னேன். அவன்தான், எதுக்கு வீணா சிரமப்படறே... அப்புறம் வந்தவங்களோட வாய் வார்த்தைகூடப் பேச முடியாதுன்னு சொல்லி அடக்கிட்டான்... அவன் வழக்கமா வாங்கற ஸ்டார் ஹோட்டல்லேயிருந்து வரவழைச்சாத்தான் அவனுக்குத் திருப்தி...''

வந்திருந்தவர்களில் யாருமே, இவளது வார்த்தையை ஆட்சேபித்தோ, ஆமோதித்தோ மரியாதைக்குக்கூட ஒரு வார்த்தை சொல்லவில்லை. 'கம்'மென்றிருந்தார்கள்.

கூடத்தில் பரவியிருந்த இறுக்கம், இந்துஜாவுக்குப் புரிந்தது.

அவர்கள் கிளம்பத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்... அவர்களுக்கு இந்துஜாவின் வாளிப்பான

தேகமோ, பளீரென்ற நிறமோ லட்சியமில்லை. நீள் வட்ட முகமும் குவிந்த நாசியும் ஒரு பொருட்டே யில்லை.

ஸ்வீட்டும், காரமும்தான் முக்கியம். அது எந்தக் கடையின் எத்தனை வருடங்களுக்கு முந்திய சரக்கா யிருந்தாலும்... அதுதான் முக்கியம். அப்புறம் பெண் வீட்டாரின் குழைவும், மரியாதையும், அதற்குப் பிறகு தான் பெண், அவள் அழகு, பதவிசு எல்லாம்..

இந்துஜா, சிவந்த உதடுகளை அழுந்தக் கடித்துக் கொள்கிறாள்.

அனாவசிய சம்பிரதாயங்களிலும் போலி கௌரவங்களிலுமே அவளது இளமை கரைந்து, தண்ணீராய் நீர்த்துப் போகிறதே... இதைக் கவனிப்பாரே இல்லையா...

அவ்வப்பொழுது ஏதோ நினைவு வந்தாற்போல ஓரிரண்டு ஜாதகங்களை வாங்கிப் பார்த்தால் போல இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடுமா...

இதோ—

இந்த நிமிஷத்தில்கூட அவளது மனசில், மண வாழ்க்கையைப் பற்றிய சுகந்தமான கற்பனைகள் இல்லை. தன்னை மணக்கப்போகும் மனிதனின் முகம் இப்படியிப்படி இருக்க வேண்டும் என்றோ, அவனது உயர, அகல, கனபரிமாணங்களைப் பற்றியோ அவள் நினைத்தே பார்க்கவில்லை.

அவளுக்குத் தேவை ஒரு மனிதன். ஆபீசுக்குப் போயோ, அல்லது வீட்டிலிருந்தபடியோ சம்பாதித்துப் போடக்கூடிய மனிதன்... அவன் படித்த பட்டதாரி யாக இருக்கலாம். இல்லை படிப்பு வாசனையே இல்லாத பாமரனாக இருக்கலாம். கறுப்பாகவும் இருக்கலாம், சிவப்பாகவும் இருக்கலாம். உயரமாக உடம்பில் கிள்ளியெடுக்க சதையே இல்லாமலும் இருக்கலாம். கட்டை குட்டையாக, சதைக் குன்றாகவும் இருக்கலாம். வயசுகூடப் பிரதானமில்லை... அவள் அப்பாவைப்போல, மாமாவைப்போல எழுபது வயசுக் கிழவராகவும் இருக்கலாம்.



தேவை ஒரு மனிதன். காலம் முழுக்க— அவனது காலத்துக்குப் பின்னும்— உடுக்க உடையும், உண்ண உணவும் இவளுக்கு என்றென்றும் கிடைக்க வசதி செய்து தரும்படியான மனிதன்.

அப்பேர்ப்பட்டவனுக்காக அவள் காலம் முழுக்க உழைக்கத் தயார். அவனுக்கு மட்டுமல்லாது அவன் குடும்பத்துக்கும் தனது உடம்பைச் செருப்பாய்த் தைத்துப் போடத் தயார்.

ஆனால்— அவளை வேலைக்கு மட்டும் போகச் சொல்லக் கூடாது. வீட்டிலேயே எத்தனை காரியங்கள் இருந்தாலும் முகம் கோணாமல் செய்ய அவள் காத்திருக்கிறாள்.

கூடத்தில் சந்தடி ஓய்ந்து விட்டது. அத்தனை நேரமும் கூடத்திலேயே தனது கணவனின் தோளுடன் தோளாய் ஈஷிக்கொண்டிருந்த பவித்ராதான் முதலில் உள்ளே வருகிறாள். பின்னாலேயே கமலா.

"எனக்கென்னமோ இந்த இடம் சரிபட்டு வரும்னு தோணலை. பிள்ளையைப் பெத்தவ ஆனாலும் ராங்கி. மூஞ்சி நம்ம வீட்டு புளிப்பானை கணக்கா இருந்தது."

—இது கமலா.

"அம்மாக்காரிய விடு. பையனைப் பார்த்தாலும் ஒரு அபிப்பிராயமும் சொல்ல முடியல்லே. நல்ல கறுப்பு வேற. நம்ம இந்துவோட சிகப்புக்கும், இவனோட நிறத்துக்கும்... மணையில பக்கத்துப் பக்கத்துல உட்கார்ந்தா அரிசியையும் எள்ளையும் கலந்து வச்சாப்பல இருக்கும்..."

—இது பவித்ரா.

மூத்தவள் இவளுக்கும் மேலேயே ஒரு படி போய்க் கற்பனை செய்து பேசுகிறாள்:

"கல்யாணமானா பொறக்கற குழந்தைகள் நம்ம குடும்ப வாகைக் கொண்டு பொறந்தா— சிகப்பா, மூக்கும் முழியுமா இருக்கும். அப்பாவைக் கொண்டு பொறந்தா சாந்துக் கொட்டாங்கச்சிதான்..."

இந்துஜா, இவர்களை ஒரு கணம் ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் தலை குனிகிறாள்.

இவர்களெல்லாரும் பேசுவார்கள். ஒருத்தி, ஓட்டமும், நடையுமாய், வியர்வையும் விரக்தியுமாய், சம்பாதித்துக் கொண்டு வந்து கொட்டினால்... இதென்ன, இதற்கு மேலும் பேசுவார்கள்.

கமலாவுக்கு, தன் பிள்ளைகள் இரண்டும் கிருஷ்ண விக்கிரகம் மாதிரி இருப்பதில் அலாதி பெருமை. உண்மையிலேயே அவளது குழந்தைகள் அழகுதான். பதினைந்து வயசு கோபு - அப்படியே அம்மாவை உரித்து வைத்துப் பிறந்திருந்தான். அம்மாவைப் போலவே சதைப்பிடிப்பான உடல்வாகு. கமலாவின் பதினேழு வயசில் அவளும் கொடிபோலத்தான் இருந்தாள். இப்பொழுது அவளுக்கு முப்பத்தைந்து வயசு. இந்த வயசிலும் கொடிபோல இருப்பவர்கள் இல்லையா என்ன... புருஷன் இறந்த இரண்



டாவது வருடத்திலிருந்தே உடம்பு சதைபோட ஆரம்பித்து விட்டது.

ஆரம்பத்தில் சீனுவைப் பெற்றெடுத்த பச்சை உடம்பு என்கிற போஷாக்கு. அதற்கு பின் - கணவனை இழந்த சிறு பெண் ஆயிற்றே என்கிற தனி கவனிப்பு. மேலும் அம்மாவுக்கு இந்தப் பெண் மேல் விசேஷப் பிரியம் வேறு...

"இந்தா, கண்டதை நினைச்சுட்டு ஆகாரத்தைக் குறைக்காதே. நீ தெம்பாயிருந்தாத்தானே குழந்தைகளும் சிரிச்சு வளைய வரும். உள்ளங்கையக் குவிச்சுக்கோ. இன்னும் ரெண்டு ஸ்பூன் நெய் விடறேன்."

தாயாருக்கு, வாழ்விழந்த மகளின் மேல் பரிவும், பச்சாதாபமும் இருக்க வேண்டியது நியாயம்தான். ஆனால், அந்தப் பரிவும், பாசமுமே அவளை ஒன்றுக்கும் உதவாதவளாக முடக்கிப் போட்டுவிடக் கூடாதல்லவா...

இந்த கமலாவுக்கு, தன்னையும், தன்னிரு பிள்ளைகளையும் பாதுகாத்துக் கொள்ளக் கூடவா தெரியாது? கமலா, இந்துஜாவைப் போலக் கல்லூரிப் படிப்பு இல்லைதான். அந்தக் காலத்து எஸ்.எஸ்.எல்.சி.

அவள் இப்படியே சோம்பி உட்கார்ந்துவிடக் கூடாது என்பதற்காக இந்துஜா, அவளுக்காக— வீட்டிற்கு வந்து தையல் கற்றுக் கொடுக்க ஒரு டீச்சரை ஏற்பாடு செய்தாள். ஏன், சிரமத்தோடு சிரமமாய் ஒரு தையல் மிஷினையும் வாங்கிப் போட்டாள்.

"என்ன அக்கா, தையல் டீச்சர் நாலு மாச சம்பளம் வாங்கிட்டா. நீ இன்னும் கர்ச்சீப்புக்கு ஓரம் அடிக்கறதுலேயே இருக்கே...

இப்படி ஒரு நாள் அவள் கேட்டுவிட்டதற்காக கமலா அழுத அழுகை இருக்கிறதே...

"எனக்குத் தையல் வரலைங்கறதைக் குத்திக் காமிக்கறயா... கவலைப் படாதே. நான் நாலு வீட்டுல பாத்திரம் தேய்ச்சாவது எனக்கும் என் குழந்தைகளுக்குமான பணத்தைக் கொண்டு வந்து தந்துடறேன்."

"த்சு, என்ன அக்கா இது."

"பின்னே என்னடீ? என் தலையெழுத்து, இப்படி உன் கிட்டயெல்லாம் பேச்சு கேட்க வேண்டியிருக்கு. என் புருஷன் மட்டும் இருந்தார்னா இப்படி நான் தையல் மிஷின்லே கால் தேயத் தைக்கறதைப் பார்த்துட்டு சும்மா இருப்பாரா... வலிக்கப் போறதே வலிக்கப் போறதேன்னு பாதத்துக்குத் தைலம் தடவி நீவி விட்டிருப்பார். நான் இருக்கறப்ப, என் பெண்டாட்டி மிஷினோட போராடறதாவதுன்னு சண்டைக்கு வந்திருப்பார். இப்படி என்னைத் தவிக்க விட்டுட்டுப் போயிட்டாரே... அம்மா, நான் என்ன செய்வேன்..."

அவள் 'ஓ'வென அலற, சங்கரி பாய்ந்து வந்து மகளை மார்புடன் அணைத்துக் கொண்டு, அவளுக்கு மேல் குரல் கொடுக்க...

"நீ ஒன்னுமே செய்ய வேண்டாம்டி, என் தங்கம். உன்னையும், குழந்தைகளையும் பார்த்துக்க நானும், அப்பாவும் இருக்கற வரைக்கும் நீ ஒன்னுமே செய்ய வேண்டாம். அந்த மிஷினை மூடி வை. காலைக் காட்டு. நான் தைலம் தடவி நீவி விடறேன்..."



இவர்களின் அழுகை அடங்க வெகு நேரமாயிற்று. இந்துஜா, அதற்குப்பின் அவளை எதுவுமே சொன்னதில்லை.

தையல் மிஷின் திறக்கப்படாமலேயே அந்த வீட்டின் நிரந்தரமான ஜடவஸ்துவாயிற்று. கோபு, அதன் 'ரப்பர்' வாரைக் கழற்றித் தன் விளையாட்டுக்கு எடுத்துக் கொண்டான். சீனு மிஷினின் நூல் சுற்றும் 'பாபின்'களில் அவ்வப்பொழுது ஒன்றிரண்டை எடுத்துப்போய், தெருக் கோடியிலுள்ள தையல் கடையில் பத்துப் பைசாவுக்கும், இருபது பைசாவுக்கும் விற்றுவிட்டு, நிச்சிந்தையாய்க் கடலை மிட்டாய் வாங்கிச் சாப்பிட்டான்.

இந்துஜாவுக்கு, மறுபடியும் அந்தத் தையல் மிஷினைத் திறந்து பார்க்க பயம். யார் கண்டது. மேலுக்கு முழு சொரூபத்துடன் இருப்பது போல இருக்கும் மிஷினைத் திறந்து பார்த்தால் — உள்ளே இருக்க வேண்டிய முக்கியமான பாகங்களே காணாமல் போயிருக்கலாம். அவளைப் போல.

அவளைப் போல்தான். மாமாவின் நிறுவனத்தில் அவரது முக்கிய காரியதரிசி என்கிற 'பெத்த பெயரில்' ஷிபானும் ஜார்ஜெட்டுமாய் சுருண்ட கூந்தலைப் பின்னலிட்டும், அழகான 'கிளிப்' போட்டு முதுகு முழுக்கப் பரவ விட்டுமாய், தோளில் தொங்கும் 'வானிடி பேக்'குடன் வளைய வரும் அவளுக்கும் என்ன இருக்கிறது?

தையல் மிஷினின் தொலைந்த பாகங்களை விடவும் விலைமதிக்க முடியாத இவளின் அந்தரங்கங்கள் விலை பேசப்பட்டு— அற்பமான பாலுக்கும் தயி

ருக்கும், மளிகைக்கும், அப்பாவின் மருந்துக்கும் விரயமாகிப் போய்விட்டதை இந்த சங்கரி அறிவாளோ...

"என் அண்ணா... அவன்தான் என் குடும்பத்துக்கே தூண்..."— இப்படி வாய்க்கு வாய் சொல்பவள்— அந்தத் தூணினால் இந்தத் துரும்பு பட்ட கஷ்டங்களை அறிவாளோ...

எது எப்படியோ— சங்கரியின் தாய் செல்லம்மாவுக்கு மாத்திரம் தன் பேத்தி இந்துவிடம் தனி பரிவு.

"காலம் கிடக்கிற கிடப்புல - இது ஒண்டியா, இந்தக் குடும்பத்தை தன் தோள்லே தாங்கறதே, சாத்தியமாடி சங்கரி."

"என்னம்மா செய்யறது. இவளை விட்டா இப்போதைக்கு வேற யார் இருக்கா. சொல்லு. ஏதோ வர்றவன் ஒழுங்கா வந்தான்னா கொஞ்சம் நிமிர்ந்து மூச்சு விடலாம். இல்லைன்னா நம்ம கோபு, சீனு தலையெடுக்கிற வரைக்கும் இப்படித்தான்."

"போதும் நீ பேசறது. நாளைக்கே சபேசன் வந்தான்னா உன் சின்ன மாப்பிள்ளைக்கு ஒரு வேலையப் போட்டுக் கொடுக்கச் சொல்லு. போன வருஷத்துக்குப் பார்த்ததுக்கு இப்போ குழந்தை எப்படித் தேய்ஞ்சுப் போயிட்டா பாரு."

கிழவி மாய்ந்து போவாள்.

சங்கரிக்குத் தாயின் வாதம் புரியாது. சொந்த மாமாவிடம் வேலை பார்ப்பதில் அப்படி என்ன சிரமம் இருக்கப் போகிறது என்பாள்; வேளா வேளைக்கு வயிறு நிறையச் சாப்பிட்டால் உடம்பு ஏன் தேய்கிறது என்பாள். வீட்டில் தினசரி, வகை வகையாய்ச் சமைத்



'தும் இவள் அழிச்சாட்டியமாய் வெறும் மோர் சோற்றையே தின்றால் எப்பேர்ப்பட்ட சந்தனக் கட்டைத் தேகமும் தேய்ந்து மூஞ்சூறாகத்தான் போகும் என்று வாதாடுவாள்...

இதோ இப்பொழுது கூட, தன் தாயிடம் அலுத்துக் கொண்டுதான் இருக்கிறாள்.

"முந்தியிருந்த களை போய்விட்டது. போயிட்டுன்னா அதுக்கு நான் என்ன செய்ய முடியும். அஞ்சு விரல்லே எந்த விரல் மேலயும் வஞ்சனையில்லே. நானும் பார்த்துப் பார்த்துத்தான் போடறேன். எனக்கு மூணும் ஒண்ணுதான். அது என்னமோ இவளுக்கு மட்டும் என் கைச் சமையல் பிடிக்கல்லே. நேத்து மணக்க மணக்க வெங்காய சாம்பாரும், உருளைக் கிழங்கு பொடிமாஸும் பண்ணியிருக்கேன். திங்கற வயசுல எல்லாம் ஆசைப்பட்டுத் தின்னாதோ? வெறும் சோத்துல தண்ணி மோரை விட்டுக்கொண்டு காய்ஞ்ச நாரத்தையத் தொட்டுட்டு நாலு கவளம் உருட்டிப் போட்டுட்டு ஓடறா... கல்யாணத்துக்கு இருக்கற பொண் போஷாக்கா இருக்க வேண்டாமோ? யார் சொல்றது..."

இந்துஜா, தான் உடுத்தியிருந்த பட்டுப்புடவையை அவிழ்த்து மடித்து வைத்தபடி, தனக்குள் முனகிக் கொள்கிறாள்,

"உனக்கு உன் வெங்காய சாம்பாரோட அருமையும், பொடிமாஸோட ருசியும்தான் தெரியும்...ஆனா, எனக்குத் தானே அந்த வெங்காயத்தையும், உருளைக் கிழங்கையும் வாங்கறதுக்காக என் உடம்பை எத்தனை வருத்திட்டேன்னு தெரியும்."

"என்ன, உனக்கு நீயே முனகறே இந்து..." பவித்ரா, எஞ்சி நின்ற நாலு பேடாவில் இரண்டை எடுத்துக் கொண்டு, இவள் பக்கம் வர...

"ஒண்ணுமில்லே... இந்தப் பொண்ணு பார்க்கற வைபவத்துக்காக இன்னிக்கு எனக்கு நூத்தியம்பது ரூபா செலவு."

"கிடக்கு விடு. இவனைக் கல்யாணம் பண்ணிட்டு மாலையும் கழுத்துமா ஒரு போட்டோ எடுத்து, நம்ம வீட்டுக் கூடத்துல மாட்டினாக்கூட திருஷ்டி பரிகார மாட்டம் இருக்கும். இந்தக் குடும்பத்துல எந்த மாப்பிள்ளை அழகுல சோடை... சொல்லேன் பார்க்கலாம். ஏதோ கமலாவுக்குத்தான் கொடுப்பினை இல்லையே தவிர அவ புருஷன் எப்படியிருந்தார். ராஜான்னா அசல் ராஜாதான். ஏன், இப்போ இவருக்கு மட்டும் என்ன குறைச்சலாம்? பேட்டி எடுக்கறதுக்காக ஸ்டுடியோ பக்கம் போனா இவரையே ஒரு நடிகரோன்னுதான் எல்லாரும் பார்க்கறாங்களாம். சொல்லுவார். அந்த அளவுக்கு இல்லைன்னாலும் மூஞ்சி பார்க்க லட்சணமாமாவது இருக்க வேண்டாமோ? ஒணான் மூஞ்சி. அசல் ஒணானேதான்."

தமக்கையின் பேச்சைக் கேட்டு, இந்துஜா கலகலவென்று சிரிக்கிறாள். சிரித்த சிரிப்பில் புரையேறுகிறது. கண்களில் நீர் தளும்புகிறது.

"என்ன அத்தனை சிரிப்பு..."

அவர்களிருந்த பக்கம் கமலாவும் எட்டிப் பார்க்கிறாள். அவள் கையில் ஒரு பேடாவும், வாழைப் பழமும்.



"மாப்பிள்ளை மூஞ்சி ஒணான் மாதிரி இருந்ததுன்னு சொன்னேன். அதுக்குத்தான் சிரிக்கறா."

"ஆமாமாம். இந்த அழகுக்கு ஸ்வீட் காரம் எதுவுமே இல்லையேன்னு குறை வேற போலயிருக்கு. இந்து கொண்டு வச்ச வாழைப்பழத்தைக் கூட சீந்தலை. நல்லதாப் போச்சுங்கறேன். யாருக்கு என்ன நஷ்டம்? ஒணான் மூஞ்சிக்கும் ஓடக்கான் மூஞ்சிக்கும் தட்டுத் தட்டா பட்சணத்தைக் கொண்டு வைக்கறதை விட, நம்ம குழந்தைகளாவது திருப்தியா சாப்பிட்டதே... அதைச் சொல்லு..."

"மூஞ்சியில என்ன இருக்கு. நான் பார்க்காத மூஞ்சியா. ரவிவர்மா படத்து ராமர் மாதிரி மீசையே இல்லாத சாத்வீக மூஞ்சி. அதே ரவிவர்மா வரைஞ்ச விசுவாமித்திரர் மாதிரி மீசையும் தாடியுமான மூஞ்சி. கிருதாவுலேருந்து மீசை ஆரம்பமா இல்லே மீசைலேருந்து கிருதா ஆரம்பமான்னு கண்டே பிடிக்கமுடியாத மூஞ்சி. பொம்மனாட்டி மாதிரி வளைஞ்ச புருவமும், கன்னக் கதுப்புமா சிரிச்சுட்டேயிருக்கிற மூஞ்சி. ஒட்டின கன்னமும் தேங்காத் துருவிப் பல்லுமா அசடு வழியற மூஞ்சி, சதுர முகமும் சப்பை மூக்குமா, நசுங்கின அட்டைப்பெட்டி மாதிரி மூஞ்சி... ஐயோ... நினைச்சுப் பார்த்தா என்னைச் சுத்தி எத்தனை மூஞ்சி..."

இந்த வார்த்தைகள் அவளையும் மீறி வாய்விட்டு வெளியே விழ... குத்துவது போலப் பார்க்கும் கமலாவைக் கண்டதும், தன் தவறை 'சட்'டென உணர்கிறாள் இந்து...

"ஆபீசுலேயும், ஆபீசுக்குப் போறப்ப வர்றப்பவும் எத்தனை விதமான மூஞ்சிங்களைப் பார்க்கறேன்..."

அவன் சமாளிக்க... கமலா, கையிலிருந்த இத்திப்பை வாயில் போட்டுக்கொண்டு, உள்ளங்கைகளில் ஒட்டிக் கொண்டிருந்த துணுக்குகளை இரு கைகளையும் ஒரு சேரத் தட்டி உதறுகிறாள்...

இந்து விழிகளை மூடிக் கொள்கிறாள். இத்தனை முகங்களையும் மீறி ஒரு முகம்... இன்று இவளை இந்த நிலைமைக்கு ஆளாக்கின முகம் கண்களுக்குள் வந்து நிற்கிறது.

# 3

இந்த முகம், இந்துஜாவின் இதயத்தில் அழுத்தமாய்ப் பதிந்து போனதற்குக் காரணம் இல்லாமவில்லை.

அவள் இந்த முகத்தை நேசித்தாள். இருபது வயசில் இதே இந்துஜாவிற்கு கல்யாண கற்பனைகள் நிறைய, தன்னை மாலையும் கழுத்துமாய், ரிஸப்ஷனில் நிற்பதாக நினைத்துப் பார்க்கும்பொழுதெல்லாம் தன் பக்கத்தில் இந்த முகத்தைத்தான் கற்பனை செய்து பார்ப்பாள். தனக்குப் பிறக்கப்போகும் குழந்தைகூட இந்த முகத்தின் சிறு பதிப்பாகத்தான் இருக்க வேண்டும் என்று அவள் விரும்பினாள்.

குழந்தை...

சட். அவள் வாழ்க்கையில் எல்லாமே முன்னுக்குப் பின் முரணாகி விட்டது. கெட்டி மேளம், தாலி இவை



களைத் தவிர மற்ற 'எல்லா'வற்றையும் அனுபவித்தாகிவிட்டது.

அத்தனை அனுபவங்களுக்கும் அடிகோலிட்டவன் ரவி. அவளது நெஞ்சில் நிரந்தரமாய்ப் பழகிப்போன முகத்துக்குச் சொந்தக்காரன்.

இன்று வேறொருத்திக்குச் சொந்தக்காரன்.

ஏழு வருடங்களுக்கு முன், எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ் வாசலில் அறிமுகம். பரஸ்பரம் சின்னப் புன்னகை. பேனா பரிமாற்றம்.

''கொஞ்சம் பேனா தர்ரீங்களா?''

''ஓ... இந்தாங்க. பெஸ்ட் அஃப் லக்.''

இவளது மனப்பூர்வமான வாழ்த்துக்களில் தலை நிமிர்ந்தான் அவன். ''தாங்க் யூ.''

''என் பேனாவுக்கு ஒரு விசேஷம் என்னன்னா, நான் இதை யாருக்கு அப்ளிகேஷன் ஃபாரம் ஃபில்லப் பண்ணக் கொடுத்தாலும் அவங்களுக்கு வேலை கிடைச்சுடும். ஆனா, எனக்குத்தான் வேலை கிடைக்காது!''

இந்து இதைச் சொல்லிவிட்டுச் சிரிக்க, அவன் பரிவுடன் அவளைப் பார்த்த பார்வை...

''பரவாயில்லே. உங்களுக்கு வேலை கிடைச்சுதுன்னா அதுக்கு அப்புறம் ஒரு நாலஞ்சு வருஷம் கழிச்சாவது, உங்க ஆபீஸ்லே எனக்கொரு வேலை போட்டுத் தரச் சிபாரிசு செய்ய மாட்டீங்களா? இந்தக் காலத்துல சொந்த முயற்சியில வேலை கிடைக்கணும்னு காத்திருந்தா, தலை நரைச்சுப் போயிடும். என்ன பார்க்கறீங்க? தலை நரைச்சுப் போயிடும்னு நான் சொன்னது எனக்கில்லே. என் பேத்திக்கு.''

அவள் சிரிப்பை, உள்ளங்கைக்குள் சிறைப்படுத்திய படியே சொல்ல, அவன் அந்தக் காட்சியை மனக்கண்ணால் பார்த்து, அடக்கமாட்டாத சிரிப்புடன் வேலை வாய்ப்பு நிறுவன வாசற் படிக்கட்டிலேயே உட்கார்ந்து விட்டான்.

''ஐயய்யோ, என்ன ஆச்சு சார்?''

''ஒண்ணுமில்லே. நீங்க சொன்னதை நினைச்சுப் பார்த்தேன். சிரிப்பை அடக்க முடியல்லே.''

இப்படி அறிமுகமான சிநேகம்.

இந்துஜா, கல்லூரிப் படிப்பை முடித்தவுடனேயே மாமாவின் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்து விட்டாலும், அது என்னமோ, ஆரம்பக் காலத்திலிருந்தே அவளுக்கு அந்த வேகல பிடிக்கவில்லை. இதற்குக் காரணம் நிறைய

அவள் பி யூ ஸி. படிக்கும் பொழுதே அப்பாவுடன் மாமாவின் நிறுவனத்துக்கு அடிக்கடி போய் வந்திருக்கிறாள். அங்கே வேலை பார்க்கும் பெண்களைப் பற்றிச் சபேசனின் மனைவி—இந்துவின் மாமி- கமலாவிடமும், பவித்ராவிடமும் நிறையச் சொல்லி கேள்விப் பட்டிருக்கிறாள்.

''எல்லாம் மானங்கெட்ட ஜென்மங்கள்...''

''ஏன் மாமி?''

''பின்னே பாரேன். ஒவ்வொண்ணும், ஆபீசுக்கு வேலைக்கு வர்ற மாதிரியாவா டிரஸ் பண்ணிக்கறது. கொஞ்சம் டீஸன்ட்டா வரத் தெரியாது? எல்லாம் உங்க மாமா கொடுக்கற இடம். ஆபீஸ் நேரத்துல,



இந்தப் பொம்பிளைங்களோட மேல் புடவை சரிஞ்சா அம்பது ரூபா ஃபைன் கட்டணும்னு ஒரு சட்டம் கொண்டு வரணும். அப்பத்தான்...''

''யாருக்கு மாமி ஃபைன் போடுவார் மாமா? புடவையை ஒழுங்காகக் கட்டாத பொண்ணுக்கா? இல்லே, அவளாலே தன் வேலைய ஒழுங்கா கவனிக்க முடியாத மத்த ஆம்பிளைங்களுக்கா?''

இந்துஜாவின் கேள்வி, அத்தனை பேரையுமே வாய்விட்டுச் சிரிக்க வைக்கும்.

மாமிகூடத் தன் பொருமலை மறந்து சிரிப்பாள்.

அதெல்லாம் ஒரு காலம். சபேசனும், அவர் மனைவி நீலாயதாட்சியும் அடிக்கடி இவர்கள் வீட்டுக்கு வருவார்கள்.

சபேசன், தன் தங்கை வீட்டோடு தங்கியுள்ள தாய் செல்லம்மாவைப் பார்க்க வருவார். நீலாயதாட்சி, 'எங்கே புருஷனைத் தனியே விட்டால், திரும்பும்பொழுது அம்மாவையும் அழைத்துக்கொண்டு வந்துவிடப் போகிறானோ,' என்கிற பயத்தில், அவருடன் இணைபிரியாமல் வந்துவிட்டுப் போவாள்.

தவிரவும், அந்தக் காலத்திய சங்கரி புதுசு புதுசாய் வாங்கும் நகையையும், புடவைகளையும் பார்ப்பதற்காகவே ஒரு கும்பல் வந்து போய்க் கொண்டிருக்கும். நீலாயதாட்சியும் இதில் சேர்த்தி.

''எந்தப் புது மோஸ்தர் நகையானாலும், எங்க நாத்தனார்கிட்ட முதல்லே பார்த்துடலாம்.''

இப்படிப் பெருமையாகச் சொல்லிக் கொள்வாள். நகையெல்லாம் போய், நாத்தனார் எண்ணெய்க்

காப்பு சாற்றின எல்லைக் காளி மாதிரி நின்றபோது. நீலாயதாட்சிக்கு இந்த நாத்தியை நேரில் வந்து பார்க்கக்கூட முடியாதவாறு தலைச்சுற்றலும் மயக்கமும் வந்துவிட்டது. அவர்கள் வீடிருந்த திசையிலேயே திரும்பிப் பார்க்க முடியாதவாறு கழுத்தில் நிரந்தரமாய்ச் சுளுக்கு ஏற்பட்டுவிட்டது.

இப்பேர்ப்பட்ட மாமா, மாமியின் தயவில்தான் இந்துஜா தன் கல்லூரிப் படிப்பை முடித்தாள்.

அதுகூட மாமா விருப்பப்பட்டு ஏற்றுக்கொண்ட சுமையில்லை.

"சபேசா, இந்த ஒரு குழந்தை படிச்சு, ஒரு வேலைக்கு வர்ற வரைக்கும் அதும் படிப்புச் செலவையாவது நீ கவனிச்சுத்தான் ஆகணும். இல்லைன்னா, நான் உன்னோட வந்துடறேன். ஒரு வயித்துப் பாடாவது மிஞ்சும். முன்னே மாதிரி மூட்டை மூட்டையா அரிசி வாங்கி, தினமும் கல்யாணச் சாப்பாடா நடந்த வீடில்லை இது. பையில அரிசி வாங்க வேண்டியிருக்கு மாப்பிள்ளைக்குத் தொழில்லே நஷ்டம் வந்ததைக்கூட என்னால தாங்க முடிஞ்சது... ஆனா இந்தக் குழந்தைகள் மோர் சாதத்துல தண்ணியவிட்டு, வயித்தை ரொப்பறதைத்தான் சகிக்க முடியல்லே..."

சபேசன் அரை மனசுடன் இந்துஜாவுக்குச் சம்பளம் கட்டினார். அந்தத் தொகையை நீலாயதாட்சி, இவளை வேலை வாங்கிச் சரி செய்து கொண்டாள்.

"இந்தூ, சாயந்திரம் காலேஜ் விட்டதும் நேரே இங்கே நம்ம வீட்டுக்கு வந்துடேன்."

"எதுக்கு மாமி?"



"நான் எங்க அம்மாவைப் பார்க்கக் கும்பகோணம் போகலாம்னு இருக்கேன். பாவம், வயசானவ, வாய்க்கு ருசியா ஏதாவது திங்க ஆசைப்படுவா. அதுவும், என் கையாலே ரவா லாடு பண்ணித் தந்து சாப்பிடறதுன்னா கொள்ளை இஷ்டம். நீ வந்தியானா, ரவையையும், சர்க்கரையையும் பேசிட்டே எந்திரத்துல சுத்தி எடுத்துடலாம். மிக்ஸியில சர்க்கரையை அரைக்க முடியாது."

"சரி மாமி."

இந்துஜா போவாள். நீலாயதாட்சி சொன்னபடி பேச்சும் வேலையும் துரிதமாகத்தான் நடக்கும். ஆனால் ஒரேயொரு சின்ன வித்தியாசம். பேசிக்கொண்டே சும்மா உட்கார்ந்திருப்பது நீலாயதாட்சி. 'உம்' 'உம்' என்று கேட்டுக் கொண்டே அத்தனை ரவை, சர்க்கரையையும் கை கொப்புளிக்க எந்திரத்தில் அரைத்து எடுப்பது இந்து.

நீலாயதாட்சியின் பேச்சு ரவா லாடை விடவும் மிக இனிப்பாக இருக்கும்.

"இந்தூ, உன்னை மாதிரி நறுவிசா, எனக்குப் பட்டுப் புடவைகளைத் துவைக்கத் தெரியல்லேடி..."

"இந்தும்மா, இன்னிக்கு மாமாவோட ஃபிரண்ட்ஸ் சாப்பிட வர்றதா போன் பண்ணியிருக்கார். நீயும் வந்துடு. உனக்காகவே அவியல் பண்ணப் போறேன். வந்துடறயா? உன் தலையக் கண்டதும்தான் அவியலுக்குத் தேங்கா உடைக்கப் போறேன்..."

"அது என்னமோ, சின்னவன் சங்கர் பொறந்ததுக்கு அப்புறம் இடுப்பை அப்படியிப்படி வளைக்கவே முடியாமப் போயிட்டதுடீ..."

இந்துஜா, புன்னகையுடன் எல்லாவற்றையும் கேட்டுக் கொள்வாள். கேட்டுத்தானாக வேண்டும். மாசா மாசம் இவர்களிடம் கை நீட்டிப் பணம் வாங்கும் தோஷத்துக்காக.

சங்கரிக்குப் பெண் படும் சிரமம் தெரியாது. எப்படித் தெரியும். இன்னமும் தன்னை, மற்றவர்கள் பழையபடியே பங்களாவாசி சங்கரியாகவே நினைக்கிறார்கள் என்பதல்லவா அவளின் எண்ணம்!

கல்லூரிப் படிப்பு முடிந்தவுடனேயே சபேசன், தனது நிறுவனத்தில் இந்துஜாவுக்கு வேலை கொடுத்தது மட்டுமின்றி கொடுக்கிற சம்பளத்தில் கணிசமாக இருநூறு ரூபாய் பிடித்துக்கொண்டு, மீதியைத்தான் தர முடியும் என்பதையும் சொல்லிவிட்டார்.

''இதுவரைக்கும் உங்க அப்பாவுக்கு இருபதாயிரம் வரைக்கும் கடன் கொடுத்திருக்கேன். தவிர, உன் படிப்புக்காகப் பத்தாயிரம். சமுத்திரத்துலே கொட்டினாலும் அளந்துதான் கொட்டணும்கறது பெரியவர்கள் வாக்கு.''

''மீதி எப்படி மாமா போதும்?''

இதற்கு மாத்திரம் பதில் சொல்லாத மாமா, புன்னகைத்தார். ''நீ புத்திசாலி. உன்னால கம்பெனிக்கு நிறைய லாபம் கிடைக்கும்படி செய். சம்பளமும் உசரும். தனியா பேட்டா, அலவன்ஸ் எல்லாமும் கிடைக்கும்.''

அவர் பூடகமாய்ச் சொன்னது முதலில் புரியத்தான் இல்லை. புரிந்த போதோ...



அந்தக் கணமே, வேலையை உதறிவிட வேண்டுமெனத் துடித்துப் போனாள் அவள்.

வேலையை விடுவது பெரிய விஷயமில்லை. ஆனால் அடுத்த வேளைச் சோறு? அதுவும் அத்தனை பெரிய குடும்பத்துக்கு...

இதற்காகவே ரகசியமாய், வேறு வேலைக்கு முயற்சி செய்யத் தொடங்கினாள் அவள்.

அப்பாவித்தனமாய் இதுபற்றி ரவியிடமும் மனம் விட்டுப் பேசினாள்.

''மாமா கம்பெனியில வேலை கிடைச்சிருக்கறப்ப அதைப்போய் ஒருத்தி விடுவாளோ? நீ வேலைய ரிஸைன் பண்றதா இருந்தாச் சொல்லேன். நான் அந்த வேலைக்கு ஒரு அப்ளிகேஷன் போட்டு வைக்கறேன்.''

ஆரம்ப காலத்தில் அவனுமே குழந்தைத்தனமாகத்தான் பேசினான். சிரித்தான். இவளுடன் சேர்ந்து வேர்க்கடலையைக் கொறித்துக்கொண்டே இந்துஜாவின் ஆபீஸ் இருக்கும் தெருவிலிருந்து, பஸ் ஸ்டாண்ட் வரையில் வருவான். இந்துஜா, ஆபீசிலிருந்து கொண்டு வரும் ஆங்கிலத் தினசரியைப் பார்த்து, இருவருக்குமாகச் சேர்த்து வேலைக்கு மறுநாள் டைப் அடித்துக் கொண்டு வருவான் தனக்கு வேலை கிடைத்தால் எப்படியெல்லாம் வாழ்க்கையை அனுபவிப்பது என்பதைப்பற்றி, இவளிடம் பட்டியல் போட்டு ஒப்பிப்பான்...

''ஏதோ, பத்தோட பதினொண்ணு—நானும் வாழறேன்னு ஒப்புக்கு வாழற வாழ்க்கை எனக்குப்

பிடிக்காது இந்து. நான் எதிர்பார்க்கறதெல்லாம் வசதியான வாழ்க்கை. அதுலேயும் சின்ன வயசுலேயே வசதிகளை அனுபவிக்கணும். நான் முந்நூறு ரூபாய் சம்பளத்துல என் வாழ்க்கையைத் தொடங்கி, கஷ்டப்பட்டு, மிச்சம் பிடித்து, பல சந்தோஷங்களைத் தியாகம் பண்ணி, படிப்படியா உசர்ந்து—கடைசியில நாலாயிரம் ரூபா சம்பளமும், பெரிய பங்களாவும், காருமா எல்லாத்தையும் வாங்கிப் போட்டுட்டு, நான் அனுபவிக்காம, என் பேரக் குழந்தைகள் அனுபவிக்கறதுதான் வாழ்க்கைன்னா அந்த வாழ்க்கை எனக்கு வேண்டாம்."

"அப்போ எங்கேயாவதுப் போய்க் கொள்ளையடிங்க. போங்க. இல்லைன்னா உங்க லட்சியம் இந்த ஜென்மத்துல ஈடேறாது," இந்துஜா, குறும்பாய்க் கண்களைச் சிமிட்டியபடி சிரிப்பாள்.

"ஏன் ஈடேறாது இந்து? நான் டபுள் டிகிரி. இதைத் தவிர டைப்ரைட்டிங், ஷார்ட் ஹாண்ட் ஹையர், அதுவும் ஃபர்ஸ்ட் கிளாஸ்லே. ஸ்பீட் எவ்வளவு தெரியுமா? ஷார்ட் ஹாண்ட்ல ஒன் மினிட்டுக்கு ஒன் ட்வெண்டி வோர்ட்ஸ். டைப் ரைட்டிங்லே ஒன் மினிட்டுக்கு ஸிக்ஸ்டி வோர்ட்ஸ். இதைத் தவிர ஃபிரெஞ்ச் தெரியும்; மலையாளம் தெரியும். நம்ம இன்டியன் லாங்வேஜ் எல்லாமே தலைகீழ்ப் பாடம். ஸ்போர்ட்ஸ்லே ஐயாதான் எப்பவும் ஃபஸ்ட். வருஷத்துக்கு நாலு வெள்ளி கப், ரெண்டு தங்கமெடல், ஏழெட்டு வெண்கல மெடல். எங்க அம்மாவுக்கு என்னால ரொம்ப சௌகரியம். இதுவரைக்கும் என்னோட நாலு அக்காக்களோட கல்யாணத்துக்கும் நான் வாங்கின வெள்ளி கப்பை அழிச்சுத்தான் தட்டு, சந்தனப்பேலா எல்லாம் பண்ணினா. தங்க மெடலெல்



லாம், அக்காக்களோட திருமாங்கல்யமா மாறிட்டுது. வெண்கலத்தை ஒண்ணும் செய்ய முடியல்லே. எங்க வீட்டு அலமாரியிலே மேல் தட்டுல இருக்கு."

"இருங்க. இருங்க. எங்க அக்கா பையன் சீனுவை அனுப்பி வைக்கறேன்; எல்லாத்தையும் ஒரே நிமிஷத்துல காலி பண்ணிடுவான்."

"எப்படி, எப்படி?"

"வித்து, கடலை மிட்டாய், பேரீச்சம் பழம் வாங்கி சாப்பிட்டுடுவான்னு சொல்ல வரேன்."

"நான் ரொம்ப சீரியஸாப் பேசறேன். நீ ஜோக் அடிக்கறியே. உனக்கு எப்படி என்னோட ஃபீலிங்ஸ் தெரியும்? சின்ன வயசுலேயிருந்து நீ பணத்துல மெத்தை தச்சுப்போட்டு, அதுல படுத்து வளர்ந்தது."

இதைச் சொல்லும்போதும், அவன் முகத்தில் சுடர்விடும் கோபச் செம்மையை ஓரக்கண்ணால் ரசித்தபடியே பளிச்சென்று பதிலளிப்பாள் இந்து.

"எப்பவுமே குழந்தையில வசதியில்லாத வாழ்க்கையில் அடிபட்டு, மிதிபட்டு மேல வந்தா அதுல இருக்கற சுகம் தனிதான் ரவி. ஆனா, வசதியா வாழ்ந்துட்டுக் கீழே போயிடக் கூடாது. அதைவிடக் கொடுமை வேற எதுவுமே இல்லை. பார்க்கப் போனா, என்னைவிட நீங்க அதிருஷ்டசாலி. சின்ன வயசுலேயிருந்தே ஏழ்மைய பழக்கப்படுத்திட்டீங்க."

அவன் இதற்குக் பதிலளிக்கமாட்டான். கண்கள் கனவில் மிதக்க, எங்கேயோ மனசை அலைய விட்டபடி இவளுடன் நடப்பான்.

''இந்து, எனக்குப் பெரிய வேலை கிடைச்ச உடனேதான் நம்ம கல்யாணம்.''

''ஆகட்டும்.''

''நம்ம கல்யாணம் ஆபட்ஸ்பரியிலதான் நடக்க ணும்.''

''எனக்கு அப்ஜக்ஷன் இல்லை. செலவு பண்ணப் போறது நீங்கதானே தவிர, எங்க அப்பா இல்லே. எங்க அப்பாவாலே முடிஞ்சதெல்லாம் கல்யாணமண்ட பத்து வாசல்லே சில்க் ஜிப்பாவும், பன்னீர் புகையிலை யும், அத்தர் வாசனையுமா நின்னுட்டு, வந்தவங்களை வாய் நிறைய வரவேற்கறதுதான், சொல்ல மறந்துட் டேனே. எங்க அப்பாவுக்காக நீங்க சில்க்ஜிப்பா எதுவும் புதுசா வாங்க வேண்டாம் நிறைய இருக்கு. இதோ பாருங்க. இப்ப நான் போட்டிருக்கிற பட்டு ரவிக்கை கூட, அவரோட கிழிஞ்ச ஜிப்பாவுலேருந்து தச்சது தான்.''

''ஹனிமூனுக்கு ஸ்விட்சர்லாந்துதான்.''

''ஏன், நம்ம காஷ்மீர் என்னாச்சு?''

''வேண்டாம், ஸ்விட்சர்லாந்துதான்.''

''சரி, உங்க இஷ்டம். நீங்க சொல்லி, நான் வேண் டாம்னு சொல்வேனா? ஆனா ஒரு சந்தேகம்.''

''என்ன?''

''நீங்க, உங்க அக்கா, தங்கை— இவங்களுக்குப் பொறக்கப் போற குழந்தைங்க— எல்லாருக்கும் கல் யாணம், கார்த்திகை, வளைகாப்பு, சீமந்தம் எல்லாத் தையும் முடிச்சுட்டுத்தான நம்ம கல்யாணத்தை வச்



சுக்கப் போறீங்க? அதுக்குள்ளே நானும் கோபு, சீனு, அப்புறம் பவித்ராவுக்குப் பொறக்கப் போற குழந் தைங்க... எல்லாத்துக்கும் ஒரு வழி பண்ணிட்டு வந்துடறேன்.''

அவள் இவைச் சொல்லி முடிப்பதற்குள், சிரிப்பை அடக்க மாட்டாமல் திணறுவாள். உள்ளங்கையால் சிவந்த உதடுகளை அழுந்தப் பொத்திக் கொண் டாலும், சிறகாய்ப் படபடக்கும் விழி இமைகளின் ஓரங்களில் சிரிப்பு கசியும். கன்னக் கதுப்பில் வெய்யில் பட்டு மினுமினுக்கும் நுண்ணிய பொன்னிற ரோமங் கள் கூடச் சிரிப்பைப் பிரதிபலிக்கும்... ஏன், அவள் நடைக்கேற்பத் துவண்டு குதிக்கும் நீண்டப் பின்னல் கூடச் சிரிப்பில் குலுங்கும்.

ரவியின் ஆசைகள் நியாயமானவை. ஒவ்வொரு இருபத்தைந்து வயசு வாலிபனுள்ளும் பொங்கும் சராசரி ஏக்கங்கள். தன் சக நண்பர்கள் மோட்டார் சைக்கிள்களில் பறக்கும் நேரத்தில், தானும் அது போல ஒரு மோட்டார் சைக்கிளில் பறக்க வேண்டும் என்று ஆசைப்படாமல் சொந்தமாய் ஒரு பிளேன் வாங்கி, அதில் பறக்க வேண்டும் என்று ஆசைப்பட்டது மட்டும்தான் கொஞ்சம் அதிகம்.

இந்து எல்லாவற்றையுமே விளையாட்டுப் பேச் சாகத்தான் நினைத்தாள்— அன்று அந்தச் செய்தி யுடன் அவன், அவளைச் சந்திக்கும் வரையில்.

''ஹேய்... ஒரு சந்தோஷ சமாசாரம்...''

''என்னது? நம்ம கல்யாணத்துக்கு ஆபட்ஸ்பரியில புக் பண்ணிட்டீங்களா?''

"அதைவிட முக்கியமானது. எனக்கு ஃபாரின் கன்ஸர்ன் ஒண்ணுல வேலை கிடைக்கும் போல இருக்கு. ஆறு மாசம் இந்தியா. ஆறு மாசம் ஐயா உலகம் சுற்றும் வாலிபன். ஜாய்ஃபுல் சிங்கப்பூர்... கலர்ஃபுல் மலேஷியா..."

அவன் எலியட்ஸ் பீச் கரையோரமாய், அவளது இடுப்பைப் பிடித்து, கைகளைக் கோத்து விளையாட்டாய் ஆடிக்காட்ட, அவள் ஆர்ப்பரிக்கும் கடலே கேட்கும்படியாக ஆரவாரித்தாள்.

"ஹேய்... நிஜமாவா?"

"உம். ஆனா ஒண்ணு. ஐயாயிரம் ரூபா டெபாஸிட் கேட்கறான், அம்மா வளையல் ரெண்டாயிரம் தேறும். மீதி மூவாயிரம்?"

அவன் கேள்விக் குறியோடு அவளைப் பார்க்க, அவள் அந்தக் கணத்தில் தன் கழுத்தில் கிடந்த மூன்று பவுன் சங்கிலியையும், அன்றுதான் சபேசன் எண்ணி யெண்ணிக் கொடுத்த சம்பளத்தையும் அப்படியே அவன் கையில் கொடுத்தாள்.

"இந்து..."

"சீக்கிரம்... பாதி ராத்திரியானாலும் சரி, அந்த ஆபீஸ் கதவைத் தட்டி, டெபாஸிட் பணத்தைக் கட்டிட்டு வாங்க"

அப்பாவிப் பெண். அவனுக்காக அவள் செய்த முதல் தியாகம் இது.

# 4

தனக்காக, தன்னை மட்டும் காதலிக்கும் ஓர் ஆண் மகனுக்காக, இந்தப் பெண்கள் என்னவெல்லாம் துணிகிறார்கள்!

கழுத்தில் கிடந்த சங்கிலியையும், சம்பளப் பணத்தையும் தூக்கிக் கொடுத்தபோது இந்துஜாவுக்கு இருந்த ஆத்ம திருப்தி, முதலிரவில் தன்னையே அவனிடம் ஒப்படைத்திருந்தால் கூடக் கிடைத்திருக்காது.

அன்றிரவு வீடு திரும்புகையில் மணி எட்டு. பஸ்ஸில் போகும் பொழுது அம்மா, அப்பாவின் கேள்விக் கணைகளிலிருந்து எப்படித் தப்பிப்பது என்கிற யோசனை உண்டாகிவிட்டது.

சம்பளத்தைப் பற்றி உடனே கேள்வி எழாது. சபேசன் சம்பளப் பணத்தைப் பட்டுவாடா செய்வதில் ஒரு நியதி எதுவும் வைத்துக் கொள்வதில்லை. முதல் தேதியிலிருந்து ஐந்தாறு தேதிக்குள் எப்பொழுது வேண்டுமானாலும் கொடுப்பார். சில சமயங்களில் முழுச் சம்பளம் பல சமயங்களில் தன் வீட்டுக்கு மளிகைச் சாமான்கள் வாங்கும்பொழுது அப்படியே அவர்கள் வீட்டுக்கும் அரிசி, பருப்பு, மிளகாய் என்று. இதற்கும் ஒரு கணக்குக் கிடையாது. 'இந்த மாசம் மளிகைக்கு மாத்திரம் முன்னூறு ரூபா ஆச்சு' என்று அவர் சொன்னால் 'ஓஹோ அப்படியா?' என்று தலையாட்டிக் கேட்டுக் கொள்ள வேண்டிய நிலைமைதான் இந்துஜாவுக்கு.

'இத்தனூண்டு சாமான், மூந்நூறு ரூபாயா...?'—நெஞ்சுக்குள் மாத்திரம் இப்படியொரு வினா ரகசியமாய் எழும்பி அடங்கும்.

மாமா தரும் சம்பளம்தான் இப்படி இழுபறியாக இருக்குமே தவிர, ஆபீஸில் ஆடிட்டருக்குக் கணக்குக் காட்டுவதற்காக இவளிடமிருந்து வாங்கிக் கொள்ளும் ரசீதில் குறிக்கப்பட்டிருக்கும் தொகை என்னவோ பிரமாதமாகத்தான் இருக்கும்.

ரூபாய் ஆயிரத்து முந்நூற்று ஐம்பது. இதைத் தவிர அலவன்ஸ், போனஸ், அது இது என்று ஏகப்பட்ட ஜிகினா வார்த்தைகள்.

அதுவும் மாமா சபேசன் சொல்லும் பொழுது 'அடடா, தங்கையின் குடும்பத்துக்காக இவர் எப்படி உருகுகிறார்', என்றுதான் நினைக்கத் தோன்றும். ஏன், ஆரம்ப காலத்தில் இந்துஜாவே அவரின் வார்த்தை ஜாலங்களில் வாய் பிளந்து நின்றவள் தானே?

''இந்தா, நேத்து என் ஃபிரண்ட் ஒருத்தன் ஜப்பான்லேயிருந்து ஸாரீஸ் கொண்டு வந்திருக்கான். பியூட்டிஃபுல் கலர்ஸ். உங்க மாமிக்கு எல்லாத்தையும் தானே வச்சுக்கணும்னு ஆசை. நான்தான் சொன்னேன். 'நீ ரெண்டு எடுத்துக்கோ. மீதியிலே சங்கரி பெண்களுக்குத் தலைக்கு ஒண்ணாக் கொடுத்துடு'ன்னேன். நீ ஆபீஸ் விட்டதும் நேரே நம்ம வீட்டுக்கு வா. உனக்குப் பிடிச்சதா மூணு செலக்ட் பண்ணிக்கோ. ஆச்சு. தீபாவளி வர்றதே. எல்லோருக்கும் துணிமணி செலவு கொஞ்சமாகவா இருக்கும். என்ன, வர்றயா?''

''சரி மாமா.''



''புடவை ஓரமெல்லாம் லேசா அழுக்காத்தானிருக்கும். புதுப்புடவைன்னா ஏகமா டியூட்டி கட்டணுமாம். அதனாலே அழுக்குப் பண்ணி, சொந்த உபயோகத்துக்காகத்தான்னு ஏகப்பட்ட பொய் சொல்லி எடுத்துட்டு வந்திருக்கான். ஒரு புடவை விலை முந்நூறு ரூபாயாம்.''

''ஐயோ, அப்ப மூணு புடவையே கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாயாகுமே, மாமா?''

''டோண்ட் ஒர்ரி. எனக்காக ஒரு புடவை நூத்தியம்பதுக்குத் தர்றான். இதே புடவை காசி செட்டித் தெருவுல ரெண்டு மடங்கு விலை. நீ நம்ம வீட்டுக் குழந்தை. உனக்கொரு விலை, எனக்கொரு விலையா?''

அவர் வார்த்தைகளை நம்பி, புடவைகளை வாங்கி வந்த பிறகுதான் இந்துஜாவுக்கு அதன் சரித்திரமே தெரிய வந்தது.

ஜப்பான் புடவையுமில்லை, ஒன்றுமில்லை. எல்லாம் உள்ளூர் சரக்குதான். விலையும் எழுபது ரூபாய்க்கு மேல் இருக்காது. இருந்தாலும் சங்கரி, தன் தமையனை விட்டுக் கொடுக்காமல் மகளிடம் பரிந்து பேசுவாள்.

''எங்க அண்ணா பரம சாது. பாவம், யார் கிட்டயோ நல்லா ஏமாந்திருக்கான்.''

''அவர் ஏமாறல்லைம்மா. நாமதான் ஏமாந்துட்டோம்.''

''போதும்டி. இதே விலை கொடுத்து அவனும்தான் அவன் பெண்டாட்டிக்கு வாங்கியிருக்கான். நான் நினைக்கிறேன் இது பாரின் ஸ்டப்ஃதான். அதே

டிசைனை அப்படியே நம்ம உள்ளூர்க்காரங்ரளும் காப்பியடிச்சிருக்காங்க. அந்தத் துணிக்கும் இந்தத் துணிக்கும் தொட்டுப் பார்த்தாலே வித்தியாசம் தெரியும். பாரு.''

இப்பேர்ப்பட்ட அம்மாவிடம் மாமா இன்னமும் சம்பளம் கொடுக்கவில்லை என்று சொன்னால் நம்புவாள். குறைந்தது இன்னும் ஒரு வாரத்துக்காவது நம்புவாள். நம்ப வைக்கலாம். ஆனால், கழுத்தில் கிடந்த சங்கிலி எங்கேயென்று கேட்டால் என்ன பதிலைச் சொல்லுவாள் இந்து.

முன்பு மாதிரி இருந்தால் இந்த மூன்று பவுன் சங்கிலி ஒரு பொருட்டேயில்லைதான். அந்தக் குடும்பத்துக்கு பார்க்கப் போனால் இந்துஜாவிற்குப் பதினாலு வயசு பூர்த்தியாவதற்கு முன்பே வைரத் தோடும், ஜிமிக்கியும், கல் அட்டிகையும், காசுமாலையும் தயாராகத்தான் இருந்தன. இன்று எஞ்சியது மூன்று பவுன் சங்கிலி மட்டும்தான். கமலாவுக்குப் போட்ட நகைகளை அவள் புருஷன் அழித்தான். பவித்ரா அளவில் பதினைந்து பவுன் நகைகளாவது தேறியது. இந்துஜாவிற்கு...

'மகளே உன் சமர்த்து.'

தாயின் கண்ணீர் மல்கும் ஆசீர்வாதம்தான் எஞ்சியது. சமர்த்து மகள். இருந்ததையும் தொலைத்து விட்டு வந்து நிற்பதை அறிந்தால், அந்தத் தாய்தான் எப்படிப் பதறிப் போவாள்!

இவள் வீட்டு வாசற்படியேறும்போதே சங்கரி அடுத்த வீட்டு அம்மாளிடம் பேசிக் கொண்டிருக்கும் வார்த்தைகள் எதிர் வந்து மோத—



''எங்க அம்மா, அவரோட அப்பா காலத்துலேயெல்லாம் எட்டாம் எட்வர்டு முத்திரைப் பவுன் கிடைக்கும். தோட்டக்காரன் பொண்ணு கல்யாணம் பண்ணிட்டு வந்து நின்னப்ப எங்க பாட்டி அந்த முத்திரைப் பவுன்லே ஒண்ணை எடுத்து வெத்தலைப் பாக்குத் தட்டுலே வச்சு, அவகிட்ட கொடுத்திருக்கா. அவ்வளவு தூரம் போவானேன். ஏம்மா, உனக்கு ஞாபகமிருக்கா... வீட்டுல அவயம் அவயம்னு ஒரு சமையற்காரி இருந்தாளே. அவ பொண்ணு கல்யாணம் ஆறு பவுன் சங்கிலியாலே தடைப்பட்டுதே. அவ ஹோன்னு அழுதுட்டு வந்து நின்னப்போ, ஆறு பவுன் சங்கிலி ஒண்ணை நான், அந்த சம்பந்தி மனுஷா முன்னாடி எடுத்து விசியெறிஞ்சேனே, ஞாபகமிருக்கா இல்லையா?''

''உம்...உம்... ஞாபகமில்லாமே என்ன? இன்னிக்கு அதே அவயத்தின் மாப்பிள்ளை சவுதி அரேபியாவுல போய் லட்சம் லட்சமாச் சம்பாதிச்சுட்டு வந்து, மாம்பலத்திலே பெரிய பங்களா கட்டியிருக்கான். அவயம் ஏர் கண்டிஷன் கார்லே கதை கேட்கக் கோவிலுக்கு தினமும் வர்றா. நானும் பார்க்கிறேன். அவதான் மறந்துட்டா.''

—செல்லம்மாவின் ஈனமான குரல்.

வாசற்புற இரும்புக் கேட் திறக்கப்படும் சத்தத்தைக் கேட்டு. முதலில் வெளியே வந்தவள் கமலாதான்.

''ஏண்டி இவ்வளவு லேட்?''

''த்சு... வேலை.''

''அதுக்காக இத்தனை நேரமா? நாளைக்குப் பண்ணிக்கிறேன் மாமா'ன்னு சொல்லிட்டு வர மாட்டியோ. மாமா தானேடி. என்ன சொல்லிடப் போறான்?''

சங்கரி, பக்கத்து வீட்டு காம்பவுண்டுச் சுவரை விட்டுப் பிரிய மனமில்லாததால் அங்கிருந்தபடியே மகளைப் பார்த்து இரைந்தாள்.

அவளுக்கு எப்பொழுதுமே அந்த நாளைய நினைவுகளை அசை போடுவது என்றால் சோறு தண்ணீர் வேண்டாம். அடுத்த வீட்டுக்காரிதான் இவளது பிரதாபங்களை அதிசயத்துடன் கேட்கும் ஒரே ஜீவன். எத்தனை தரம் கேட்டாலும் அவளுக்கும் அலுக்காது. சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்ல இவளுக்கும் சலிக்காது.

இன்று இவளிடம் எட்டாம் எட்வர்டு முத்திரைப் பவுனைப் பற்றி வாய் கிழியப் பேசிவிட்டு, நாளைக்கே ஒரு எவர்சில்வர் கரண்டியைத் தூக்கிக் கொண்டு காப்பிப் பொடி கடன் கேட்க சங்கரி ஓடுவாள். அவளும் அதைத் தந்துவிட்டுத் தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் இந்த மாஜி லட்சாதிபதிக்குக் காப்பித் பொடி கடன் கொடுத்ததை, கழுத்தில் தம்பட்டம் கட்டிக் கொண்டு அறிவிக்காத குறையாக அறிவிக்க ஓடுவாள்.

இவர்களின் விவஸ்தையில்லாத பேச்சு, வழக்கமாய் எரிச்சலை உண்டு பண்ணி, இந்துஜாவின் உதட்டுக்குள் முணுமுணுப்பாய் வடிவெடுக்கும். ஆனால் இன்றோ?

நெஞ்சுக்குள் ரகசியமானதொரு பரவசம்.



CPL523410

'ஐயோ, இது என்ன, பறிகொடுப்பதையும் பறிகொடுத்துவிட்டு. துளிகூட வருத்தமோ, கவலையோ இல்லாமல் மனசு இப்படிப் பரவசப்படுமோ? அலைகளின் கிசுகிசுப்பாய் ரகசியம் பேசி கெக்கலி கொட்டுமோ?

காதல் வயப்பட்ட நெஞ்சம் என்ன வேண்டுமானாலும் செய்யும். எதை வேண்டுமானாலும் பறிகொடுத்துவிட்டு இப்படி 'நானாகயிருக்கக் கொண்டு இந்த மாதிரியொரு காரியம் செய்தேன்' என்று நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு, அசட்டுத் துணிச்சலுடன் எல்லாவற்றையும் எதிர் கொள்ளும்.

523410

இந்துஜா, தன் கைப்பையைப் பீரோவின் மேல் தட்டில் வைத்துவிட்டுத் திரும்பும்போதே கமலா அதட்டும் குரலில் வினவினாள்.

894.8113
ANU

''சங்கிலி எங்கேடி?''

''என்னது — சங்கிலியா?''

இந்துஜா, வேண்டுமென்றே குரலில் அதிர்ச்சியை ஏற்றியபடி தன் கழுத்தை தொட்டுப் பார்த்துக் கொள்ள...

''இப்ப, கொஞ்ச நேரம் முன்னாலே கூட இருந்ததே''

அவள், சடாரென தான் வந்த வழியே, இரும்பு கேட் வரையில் குனிந்து, தரையில் தேடுவது போலப் பாவனை செய்தபடி விரைய...

''ஐயய்யோ, தொலைச்சிட்டியா? முண்டம்... முண்டம்... எந்த வேளையிலே பொறந்தியோ. உனக்

குன்னு ஒரு குந்து மணிப் பொன் சேர்த்து வைக்க முடியலையேன்னு நான் அழுதிட்டிருக்கேன். இருக்கற தையும் தொலைச்சிட்டு இப்ப நான் என்ன பண்ணு வேன். எங்கேன்னு போய்த் தேடுவேன்.''

அம்மா, காம்பவுண்டு சுவரிலிருந்து தன்னைப் பிய்த்துக் கொண்டு இவளிருந்த பக்கம் ஓடி வந்தாள். அடுத்த வீட்டுக்காரி டார்ச் லைட்டைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தாள். அடுத்த வீட்டுப் பெண்களிடம் வாய் வார்த்தைகூடப் பேசியறியாத சுவாமிநாதன், அவன் கையிலிருந்த டார்ச் லைட்டைப் பிடுங்கிக் கொண்டு தெருவுக்கே ஓடினார். பவித்ரா, நீண்ட பின்னலை உயரத் தூக்கி முடிந்தபடி, கையில் கிடைத்த குச்சியால் தோட்டத்து மண்ணைக் கிளறிப் பார்த் தாள். செல்லம்மா மட்டும் ஆடாது அசையாது இருந்த இடத்திலிருந்தபடியே தன் பேத்தியின் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''கிழங்கு மாதிரி இருந்தது. மூணு பவுனுக்குக் குறையாது.''

—இது சங்கரி.

''ஏம்மா டாலரை விட்டுட்டே. அதையும் சேர்ந்தா நாலு பவுன்கூட இருக்கும்.''

—இது கமலா.

''ஹூம், யார் கைக்குப் போச்சோ?''

—இது அப்பா.

''பார்க்கப் போனால் அது என்னோட சங்கிலி யாக்கும். என்கிட்டயே இருந்திருந்தா அது பத்திரமா இருந்திருக்கும்.''



—இது பவித்ரா.

''ஏண்டி எல்லாருமா சேர்ந்து இதுக்காக அந்தப் பொண்ணை இப்படிக் கரிக்கணுமா? ஒரு சாமான்னு இருந்தா தொலையவும் செய்யும். திருடும் போகும். பறி கொடுத்திட்டுப் புலம்பவும் செய்யறோம். அதுவே வழியில் நாம கண்டெடுத்தால் அதிருஷ்டம், அதிருஷ் டம்னு தலைமேல தூக்கி வச்சிட்டுக் குதிக்கவும் செய் வோம் அதுக்காக இப்படியா? போதும்... இந்தா, உள்ளே போய் மூஞ்சிய அலம்பிட்டுச் சாப்பிட வா. பொருள் நம்மைச் சேர்ந்ததாயிருந்தா தானாக் கிடைக்கும். இல்லைன்னா அவயத்துப் பொண்ணுக்கு நீ தானமாகக் கொடுத்த ஆறு பவுனோட இந்த மூணு பவுனையும் சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான்.''

செல்லம்மா பேத்தியைப் பார்த்தும், மகளைப் பார்த்தும் ஒரு சேரச் சொன்னாள்.

இந்து சாப்பிட்டு முடியும் வரையில் சங்கரி வாய் ஓயாமல் புலம்பித் தீர்த்தாள்.

''இன்னும் என்ன இருக்கு? எல்லாமே போயாச்சு ஒட்டு மொத்தமா துடைச்சு, தலை முழுகியாச்சு.''

கிழவி மாத்திரம், தன் இடுங்கிய கண்களை மேலும் இடுக்கியபடி, பார்வையாலேயே பேத்தியை விசாரித்தாள்.

'உங்கம்மாவை மாதிரி மூணு சவரன் சங்கிலியோட எல்லாம் பறிபோயிட்டதா நான் நினைக்கலே குழந்தே. இதைவிடவும் பத்திரமானதும், பவித்திர மானதும் உன்கிட்ட ஒரு பொருள் இருக்கு. அதை யார் கிட்டேயும் நீ பறிகொடுக்கலையே?'

இந்துஜா, மூளியான கழுத்தை மெள்ள நீவிய படியே தட்டைப் பார்க்கத் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

மனசுக்குள், அவளே இழுத்துப் போர்த்திக்கொண்டுள்ள பெரிய மனுஷித்தனத்தையும் மீறி குழந்தைத் தனமான சபலங்கள்.

'ராத்திரி எல்லாரும் தூங்கினதுக்கு அப்புறமா பாட்டிகிட்ட மாத்திரம், சங்கிலி தொலைஞ்சு போகலை. இது மாதிரி ஒருத்தருக்காக நானே கழட்டி கொடுத்தேன்னு சொன்னா?'

'யாருடி அவன்னு பாட்டி கேட்டா?'

'எல்லாம் உங்க பேத்தியக் கல்யாணம் பண்ணிக்கப் போறவர்தான்னு சொல்லிட்டா என்ன...'

'என்னவா? துடைப்பக் கட்டையை எடுத்துட்டு அடிக்க வருவா. இன்னும் பவித்ராவுக்கே வரன் தேட ஆரம்பிக்கலே. உனக்கு அதுக்குள்ளே என்னடி அவசரம்னு கேட்டா?'

'அச்சு பிச்சு மாதிரி எதையும் உளறி வைக்காதே. முதல்லே அவருக்கு அந்த வேலை கிடைக்கட்டும். அவர் நினைச்ச மாதிரி எல்லா வசதிகளும் வரட்டும். அதுக்குள்ளே பவித்ரா கல்யாணமும் ஆகட்டும். அப்புறம் நிதானமா சொல்லிக்கலாம்.'

அசட்டு இந்து. பாட்டியிடமாவது இது பற்றி ஓரிரு வார்த்தைகள் கோடிட்டுக் காட்டியிருக்கலாம். குறைந்தது - அந்த மாதச் செலவைச் சரிகட்டவாவது ஏதாவது நல்ல யோசனை சொல்லியிருப்பாள்.



அடுத்து வந்த நாலைந்து தினங்களில் ரவியிடமிருந்து தொற்றிக்கொண்ட உற்சாகத்தில் அவள் வீட்டுச் செலவையே அடியோடு மறக்க...

அன்று—

ஏதோ போகிற போக்கில், தங்கை வீட்டுப் பக்கம் எட்டிப் பார்த்த சபேசனிடம், வெட்கத்தை விட்டுச் சங்கரி கேட்டே விட்டாள்.

''என்ன அண்ணா. இந்த மாசம் மளிகை சாமான் அனுப்பறப்போ நாலு கிலோ துவரம் பருப்பு சேர்த்து அனுப்பு. எப்படியும் நாளைக்குள்ளேயே அனுப்பிட்டாத் தேவலை. அஞ்சாறு நாளாப் பருப்பு, எண்ணெயில்லாமே என்னை மாதிரியே ஒரு ரெண்டுங்கெட்டான் சமையல். உன் மாப்பிள்ளை மூஞ்சியைப் பார்க்க சகிக்கலே.''

''என்னது?''

சபேசன், நிமிர்ந்து இந்துஜா இருந்த பக்கம் திரும்பிப் பார்க்கிறார்.

அன்றைய ஞாயிறு விடுமுறையை ஓர் எண்ணெய்க் குளியல் மூலமாக, தன் வரையில் சுகமானதொரு ஓய்வாக மாற்றிக் கொண்ட இந்து—

சுருண்டு, நீண்டு, முதுகையே போர்வையாய் கவித்திருந்த கூந்தலை, அவசரமாய் ஒரு தட்டுத் தட்டி நுனி முடிச்சிட்டவாறு, மாமாவின் எதிரில் வர...

''மளிகைச் சாமானோட இவனுக்கு ஒரு குயர் ரூல்டு நோட்டு ரெண்டு அனுப்பிடுங்கோ மாமா.''

அதே கூடத்தின் மறு முனையிலிருந்து கமலா, தன் மகனுக்காகப் பரிந்து எழுப்பிய குரல்.

'என்ன இந்து இது...'

மாமாவின் பார்வையே இவளை விசாரணை மன்றத்தில் நிறுத்தி வைக்க...

அந்தக் கணத்தில் 'குப்'பென்று படர்ந்த பயமும், பதற்றமும், விழிகளில் நீரைச் சேர்க்க, அவள் சபேசனைப் பார்த்த பார்வை—

'சம்பளத்தைக் கொடுத்துட்டதாகச் சொல்லிடாதிங்க மாமா ப்ளீஸ்.'

இவளது விழிகளில் தொனித்த கெஞ்சலைப் புரிந்து கொண்டவராக— அன்று மாமா கொடுத்த அபயச் சொற்கள்...

''நாளைக்கு அனுப்பிட்டாப் போறது...''

தங்கையைப் பார்த்துக் கூறியவர், மருமகளைப் பார்த்து மிருதுவாய்ச் சொன்னார்,

''என் கூட வர்றியா இந்து... கொஞ்சம் வேலை இருக்கு.''

''இதோ வர்றேன் மாமா...''

அவளும் கிளம்பிவிட்டாள்.

## 5

மாற்றுப் புடவையை உடுத்திய இந்து, அப்படியே கட்டிலில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த மெத்தை, தலையணைகளோடு, தன் உடம்பையும் சுருட்டி மடக்கிக் கொண்டாள்



அன்று மாமாவுடன் போயிருக்கக் கூடாது...

காலம் கடந்து, மனசுக்குள் தன் பேதமையை நினைந்து அழுந்துக் கொண்டாள்.

இந்த ஏழு வருடங்களில் அவள் கற்ற பாடத்திலேயே அதி முக்கியமானது— 'யாரையும் நம்பாதே' என்பதுதான்.

பழசை நினைந்தால் எதுவுமே செய்யத் தோன்றாது இந்துவுக்கு. நினைக்காமல் இருக்க முடியவில்லையே? ஆரம்பத்தில் வாழ்க்கையின் நிஜங்கள் இவளைச் சுட்டது போல இப்பொழுது சுடவில்லை. சூடுபட்ட பிறகு மனசும் உடம்பும் காய்த்துத் தழும் பேறிவிட்டன.

இப்படிக் காய்த்துத் தழும்பேறிய உடம்புக்குக் கல்யாணம் என்ன பெரிய சுகத்தைத் தந்துவிடப் போகிறது?

அப்படிக் காலா காலத்தில் கல்யாணம் நடந்திருந்தால், அவளுக்கும் மணி மணியாய் இரண்டு குழந்தைகள் இப்பொழுது இருக்கும்.

குழந்தைகள்... ரவி மாதிரி அலை பாயும் கண்களும், செதுக்கின மோவாயுமாக...

அவன்தான் இன்னொருத்தியை மணந்து கொண்டு இதோ— இதே மாம்பலத்தில் வசதி மிகுந்த ஃபிளாட்டில் இருக்கிறானே. ஒரு பெண் குழந்தைகூட இருக்கிறது நாலு வயசில்.

□

''இந்து...''

பக்கத்தில் குரல் கேட்க, தலையை மட்டும் திருப்பிப் பார்த்தாள் அவள். பவித்திராதான்.

''உம்?''

''இன்னிக்கு வந்த வாரப் பத்திரிக்கையில், புதுசா ரிலீஸான ஒரு படத்துக்கு இவர் எழுதின விமரிசனம் வந்திருக்கு. ருபா இருந்தால் கொடேன். பத்திரிகை வாங்கிப் பார்க்கணும். இவர் கிட்ட சில்லறை இல்லே...''

''ஏன், காம்ப்ளிமெண்ட்ரி காப்பி வராதா?''

''வரும். அதுவரைக்கும் யாருக்குப் பொறுமை இருக்கு?''

இந்து மௌனமாய் எழுந்து, தன் கைப் பையைத் திறந்து அதைக் குடைந்து பணம் எடுத்து நீட்ட—

''டேய் சீனு...''

பவித்ரா பத்திரிகை வாங்க அக்காள் மகனை விரட்ட, பிரபாகரன் மட்டும் அங்கேயே சிரித்தபடி நின்றான்.

ஒரு விமரிசனம் வெளியாகிவிட்ட பூரிப்பு அந்த முகத்தில்.

''நல்லா விளாசியிருக்கேன். பழைய அரங்கேற்றம் கதையை உல்டா பண்ணி, அங்கே கொஞ்சம், இங்கே கொஞ்சம் டச்சப் பண்ணிட்டாப்பால ஆச்சா? ரசிகர் கள் என்ன ஏமாந்த சோணகிரிகளா? அரங்கேற்றத் துக்கு அப்புறம் எத்தனை அரங்கேற்றம் நான் பார்த் திருக்கேன்? பெரிசா கதை வசனம்னு கொட்டை எழுத்துலே தன் பெயரை வேறு போட்டிட்டிருக்கான் டைரக்டர். வெட்கமாயில்லை? என் ஆத்திரத்தை யெல்லாம் விமரிசனத்துல கொட்டியிருக்கேன்.''



அவன் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, சங்கரி காப்பி டம்ளருடன் வாய் கொள்ளாத சிரிப்புடன் வருகிறாள்.

''பவித்ரா சொன்னாள். விமரிசனம் வந்திருக் காமே?''

''ஹிஹ்ஹி... ஆமா...''

''கூடத்துல பத்திரிகையை வச்சிட்டு எல்லோருமா படிச்சிட்டிருக்காங்க. இதோ, மாமாகூட வந்துட்டார். அப்பவே கிளம்பினானாம். கம்பெனியைப் பார்க்க எவனோ வடக்கத்திக்காரன் வந்துட்டானாம். அவனை ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்லே தங்க வச்சிட்டு வர்ற துக்குள்ளே நேரமாயிட்டுதாம். அப்பலேருந்து 'இந்து எங்கே, இந்து எங்கே?'ன்னு கேட்டிட்டிருக்கான்.''

இந்து, படுத்துக் கிடந்ததினால் கலைந்திருந்த முன் நெற்றிக் கூந்தலை உள்ளங் கையால் நீவியபடி எழுந்திருந்தாள். இதற்குள் சபேசனின் குரல்.

''இந்து...''

''இதோ வந்தேன்.''

பதில் குரல் கொடுத்துக்கொண்டே கிளம்பியவ ளின் மனத்தில் மறுபடியும் பழைய நாட்கள்.

இப்படித்தானே அன்றும் ஓடினாள்?

எத்தனை நம்பிக்கையோடு போனாள்...

காரில் போகும்பொழுது, அவர் கேட்டுவிட்டார்.

''சம்பளப் பணத்தை என்ன செஞ்சே இந்து?''

''அது வந்து... வந்து...''

"தொலைச்சுட்டேன்னு பொய் சொல்லாதே. சங்கிலி, பணம் எல்லாத்தையும் தொலைக்க நீ ஒண்ணும் சின்னக் குழந்தையில்லே."

அவள் அதற்கு மேலும் மறைக்க முடியாமல், உண்மையை ஒப்புக்கொள்ள...

"இதுதான் மாமா நடந்தது. இந்த மாசத்துக்கு மாத்திரம் எப்படியாவது நீங்கதான் மாமா ஹெல்ப் பண்ணணும்."

"என்னது, நானா? ஒரு ரிஸப்ஷனிஸ்ட்டுக்கு ரெண்டு சம்பளம் தர்ற அளவுக்கு எங்கிட்ட வசதி கிடையாது இந்து."

"ப்ளீஸ் மாமா!"

சபேன், மருமகளைப் பார்த்துச் சிரித்தார்.

"நீ குழந்தைதான் இந்து. ஆன வயசுக்குக் கொஞ்சம்கூட வெளி உலகமே தெரியல்லே. இந்த மாசம் அந்த ரவிக்கு முன் பணம் கட்ட பணம் வேண்டியிருந்தது. அடுத்த மாசம் அவன் ஃபாரின் போக டிரெஸ் தைக்கணும்னு சொல்லுவே. நீ உன் குடும்பத்தைக் கவனிப்பியா, உன் லவர் குடும்பத்தைக் கவனிப்பியா?"

"மாமா..."

"இதப் பாரு. இப்ப, இந்த மாச செலவுக்கு என்ன செய்யப் போறே? எனக்கு இந்த மாசம் ஏகச் செலவு. நீலாவை ஹாஸ்பிடல்லே சேர்க்கணும். மெனோபாஸ் டிரபிள்.' அவளைக் கவனிச்சுக்க, கும்பகோணத்திலேர்ந்து அவ அம்மா, அப்பா, அத்தை, சித்தின்னு ஒரு பட்டாளமே வீட்டுல வந்து உட்கார்ந்திட்டிருக்கு..."



"......"

சபேசன் அவளது கூம்பிய முகத்தையே உற்றுப் பார்த்தார்.

"ஒண்ணு செய்யறயா?"

"என்ன?"

"அமெரிக்காவிலேர்ந்து ஒரு பிஸினஸ்மேன் வந்திருக்கான். நம்ம கம்பெனி சரக்கை அவன் தலையிலே கட்டலாம்னு இருக்கேன். மனுஷன், ஆர்டர் எடுக்க ஆயிரம் யோசனை செய்யறான். என் செலவுல ஹோட்டல்லே ரூம், மகாபலிபுரம், காஞ்சிபுரம் எல்லாம் டூர்... ஒரு நாளைக்கு ரெண்டாயிரம் ரூபா செலவாறது. இன்னும் எத்தனை நாள் தங்கப் போறானோ? ஆர்டர் எடுக்கிறானோ இல்லையோ... நீ அவனுக்குக் கொஞ்சம் கம்பெனி கொடேன்."

"மாமா!"

தன்னை மீறி இரைந்தவளின் தோளில் மிருதுவாய்த் தட்டிச் சாந்தப்படுத்தினார் சபேசன்.

"இதுல என்ன தப்பு? உம்? இதுல என்ன தப்புன்னு கேட்கறேன். ஒரு லிமிட்டைந் தாண்டாத வரைக்கும் இதெல்லாம் ஒரு ஃபன்தான். இப்ப நம்ம ஆபீஸ் ஸ்டெனோ ஷீலா, ரேகா எல்லோரும் எக்ஸ்டிரா இன்கம்மிற்கு என்ன பண்றாங்கன்னு நினைக்கிறே? ஆர்டர் எடுத்தான்னா நானே உனக்குக் கமிஷன் தருவேன். அவன் கிட்டயிருந்து நீ முடிஞ்ச வரைக்கும் இருநூறு, முந்நூறுன்னு வாங்கிக்கலாம். அதெல்லாம் உன்னோட சமர்த்து..."

குன்றிப்போய்விட்டாள் இந்து. அந்தக் கணமே காரைவிட்டு கீழே குதித்துவிட வேண்டும்போல பரபரத்துப் போனாள்.

சொந்தத் தாய் மாமன் பேசும் வார்த்தைகளா இவை?

அவள் எண்ண ஓட்டத்தைப் புரிந்துகொண்டாற் போல் சபேசன் மேலும் பேசினார்.

''யாரும், யாருக்கும் சும்மா பணத்தை அள்ளிக் கொடுத்துவிட முடியாது, இந்து. ஏதுடா, சொந்த மாமா தானே, கொடுத்தா என்னன்னு நீ நினைக்கலாம். எனக்குன்னு குடும்பம் இருக்கு. நானும் மாசா மாசம் மளிகைக்கு ஆயிரம் ரூபா செலவழிக்கிறேன். பால், தயிர் வகையறாவுக்கு ஐந்நூறு. சொந்த வீடு தான்னாலும் வீட்டு வரி, எலெக்ட்ரிக் சார்ஜ், குழந்தைகள் படிப்புச் செலவு, காருக்குப் பெட்ரோல், பெண்டாட்டிக்கு டாக்டர் செலவு எல்லாம் உண்டு. என் தங்கை பெண்ணுக்குப் பணம் கொடுக்கணும், அதனால இந்தச் செலவுல எதையாவது ஒன்னைக் குறைன்னு நான் யார் கிட்டப் போய்ச் சொல்ல முடியும்? சொல்லு...''

அவள் மௌனமாய், பாறையாய் இறுகிப் போய் அமர்ந்திருந்தாள். அவமானம் தாளாமல் காது நுனி ஜிவுஜிவுவென்று எரிந்தது.

'யார் கிட்டப் போய் இந்த வெட்கக் கேட்டைச் சொல்றது?'

அன்று மாலையே ரவியிடம்தான் சொன்னாள்.

''நான் வேலையை விட்டுவிடப் போறேன் ரவி.''

அவள் முகத்தை மூடிக்கொண்டு அழுத போது, அவன் அவளையே வெறித்தபடி அமர்ந்திருந்தான்.

''வேலைய விட்டுட்டு?''



''உங்க கூட வந்துடறேன். இனிமே உங்க சம்பளத்துலே நாம வாழ முடியாதா என்ன? உங்க அப்பாவைத் தெய்வமா நினைச்சு, உட்கார்த்தி வச்சு சமைச்சுப் போடுவேன் ரவி. உங்க தங்கைகளுக்குக் கல்யாணம் ஆகிற வரைக்கும், நான் உங்க பக்கத்திலே கூடப் படுத்துக்க மாட்டேன் ரவி... ப்ளீஸ்!''

''குழந்தை மாதிரி பேசாதே இந்து!''

''நான் குழந்தை இல்லே. இருபத்தியொரு வயசாகிறது.''

''த்சு! அதைச் சொல்லலே. வயசானாப் போதுமா, எதிர்காலத்தைப் பற்றி பிளான் எதுவும் வேண்டாமா?''

''ஒரு எழவும் வேண்டாம். உங்ககூட ஒரு குடிசையிலே தங்கக் கூட நான் தயார்.''

''ஆனா நான் தயாரா இல்லை, இந்து. எனக்குன்னு ஒரு பங்களா, அட்லீஸ்ட் ஒரு அல்ட்ரா மாடர்ன் ஃப்ளாட். ஒரு அம்பாஸிடர், கோட், ஸூட், டை... என் பக்கத்திலே ஃபாரின் பர்ஃப்யூம் மணக்க மணக்க நீ...''

''நான் அப்படி மணக்க மணக்க வாழற காலம் வர்றதுக்குள்ளே சாக்கடைப் புழுவா நாறிப் போயிடுவேன் போல இருக்கு ரவி.''

''இந்தா, இதெல்லாம் நாமா நினைச்சுக் குழப்பிக்கிறதுதான். ஒழுங்கா சம்பாதிக்க ஒரு பொம்பளையால் முடியாதா என்ன? நாலு டியூஷன் எடுக்கலாம். ஒயர் பேக் பின்னலாம். ஜாப் டைப் அடிக்கலாம். அக்கம் பக்கத்து வீட்டுப் பொம்பளைகளுக்கு பிளவுஸ் தச்சுக் கொடுக்கலாம்.''

"சொல்றப்போ இதெல்லாம் சுலபமாகச் சொல் விடலாம் ரவி. வாழ்க்கையிலே— அதுவும் என்னை மாதிரி வேலைக்குப் போற பெண்ணு— நீங்க சொன்ன இத்தனையையும் செஞ்சாக்கூடக் குடும்பத்தைக் காப்பாத்த முடியாது ரவி."

அவன் வெடித்தான். "சட்! என்ன குடும்பம், குடும்பம்னு... குடும்பத்தைத் தூக்கி எறி. உங்க அம்மா கிட்ட 'மாமா இந்த மாதிரி 'மாமா வேலை' செய்ய றான்னு' பளிச்சுன்னு சொல்லு. நான் உனக்கு வேணும்னா, இத்தனையையும் உதறிட்டு ஏதாவது ஒரு ஹாஸ்டல்லே இருந்துகொண்டு வேற வேலை தேடு. இன்னும் அஞ்சு வருஷத்துக்குக் கல்யாணம் கார்த்திகை எதுவும் கிடையாது எனக்கு."

அவள், அவனையே உறுத்துப் பார்த்துவிட்டு எழுந்தாள்.

"இந்து, என்ன முடிவு பண்ணினே?"

"இதுல முடிவு எடுக்க என்ன இருக்கு? கல்யாண மும் இல்லாம, கையிலே இருக்கிற வேலையையும் விட்டுட்டு, பெத்தவங்களையும் தூக்கியெறிஞ்சிட்டு, மாங்காட்டுக் காமாட்சி அம்மன் மாதிரி, உங்களுக் காக ஊசி முனையிலே தபஸ் பண்ற அளவுக்கு... ஸாரி, நான் அம்பாளும் இல்லை. நீங்க ஈஸ்வரனும் இல்லை. மனுஷர்கள். வெறும் ரத்தமும் சதையுமா, அடுத்த வேளைச் சோத்துக்காகவே ஆயுசு முழுக்க அல்லாடற மனுஷர்கள். நான் வரேன்."

இதுதான் அவனுடன் அவள் பேசிய கடைசி வாக்கியங்கள்.



இன்று மாமாவின் தயவில் எத்தனை எத்தனை ஆண்களைச் சந்தித்து விட்டாள்!

கூடத்தில் பவித்ரா, மாமாவிடம் தன் புருஷன் எழுதிய விமரிசனத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அவளைச் சுற்றிச் சுவாமிநாதன், கோபு, சீனு, கமலா. இதோ இப்பொழுது பிரபாகரனும் சங்கரியும் வேறு.

"இந்த மாதிரிப் பெண்மையை விலை பேசும் கேவலமான பாத்திரங்களை இன்னும் எத்தனை முறை தான் நமது தமிழ் சினிமா உலகம் படைக்குமோ. வேலையில்லாத பெண்களும், ஏழ்மையில் தவிக்கும் பெண்களும் மான ரோஷமில்லாமல் சதைச் சந்தை தான் கூட்டுவார்கள் என்கிற முடிவுக்கு ஆசிரியர் ஏன் போக வேண்டும்? அவளுக்காக அழுவது மாதிரி அழுத படி, அவளின் சாக்கடை வாழ்க்கையைக் கிளறி, அந்த நாற்றத்தை விலை பேசும் சமூகத் துரோகிகளை..."

பவித்ராவுக்கு மேல் மூச்சு வாங்கிற்று. சற்று நிறுத்திவிட்டுத் தன் கணவனைக் காதலுடன் ஒரு பார்வை பார்க்கிறாள்.

இந்துஜாவோ, கூடத்து நாற்காலியொன்றில் புன்னகை மாறாமல் அமர்ந்திருக்கும் சபேசனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந் தாள்.

"பிய்ச்சு உதறிட்டீங்க மாப்பிள்ளை."

சுவாமிநாதனின் மனம் திறந்த பாராட்டுதல். மாமனாரின் வார்த்தைகளில் குளிர்ந்துபோன மரு மகன், சபேசனைப் பார்த்து, மிதப்பாய்ச் சிரித் தான்.

''இது ரொம்பக் கொடுமையான விஷயம் மாமா. வேலை கிடைக்காத பெண்ணுங்க எல்லாம் உடம்பைத் தான் விக்கறாங்களா? ஏன், சுய வேலை வாய்ப்புத் திட்டம் இல்லே?''

''இதுகூட ஒருவித சுய வேலை வாய்ப்புத் திட்டம் தான்.'' நாக்கு நுனிவரையில் வந்த வார்த்தைகளை, சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள் இந்து. பிரபாகரன் பொரிந்தான்—

''இந்த நாட்டுல பொண்ணுங்க வீட்டுல இருந்த படியே ரெண்டு மாவரைக்கிற மிஷினை வாங்கிப் போட்டுட்டுத் தொழில் நடத்த முடியாதா? ரெடிமேட் துணி தச்சுப் பொழைக்க முடியாதா? ஆன்னா ஊன்னா வாசல்லே ரெட் லைட்டைத்தான் தொங்க விடணுமா? வெட்கமாயில்லே?''

இதற்கு மேலும் பொறுத்துக் கொண்டிருக்க இந்துஜாவினால் முடியவில்லை. வெடித்தே விட்டாள்.

''வீட்டு ஆம்பிளைங்க வேலை வெட்டியில்லாமே உட்கார்ந்திருந்தா, குழந்தைங்க 'பசி பசி'ன்னு அலறினா, ஒருத்திய நம்பி ஒன்பது பேர் பொறுப்பில்லாமே இருந்தா அவ வேற என்ன செய்வா? 'இருங்க... பாங்கிலே லோன் கிடைச்சு, ரெண்டு மிஷின் வாங்கி மாவாட்டி, அதுல கிடைக்கிற பணத்திலே அரிசி வாங்கிட்டு வரேன். அது வரைக்கும் பொறுங்க'ன்னு சொல்லுவாளா? இல்லே, 'ரெடிமேட் துணி தச்சுக் கொடுத்துக் கூலிவாங்கிட்டு வர்ற வரைக்கும் எல்லோரும் பாயில படுத்துத் தூங்குங்க'ன்னு சொல்லுவாளா?''

''இந்து... என்னம்மா இது!''



சங்கரி மகளை அதட்டினாள். அவள் சட்டை செய்தால்தானே?

''பின்னே என்னம்மா? உடம்பை விக்கலாமா விக்கலாமான்னு இவரைப் போல இருக்கிற ஒயிட் காலர்ஸ் கேட்டுட்டா ஆச்சா? நான் கேட்கிறேன்— பொம்பளைங்க கிட்ட வித்து காசாக்க அதுவாவது இருக்கு. இவங்ககிட்ட என்ன இருக்கு?''

கூடமே ஒரு கணம் ஸ்தம்பித்து நிற்கிறது. பவித்ரா, முகத்தை நொடித்து, இவளுக்குப் பழிப்புக் காட்டிவிட்டுச் சடாரென உட்பக்கம் விரைந்தாள். கமலா, கன்னத்தில் கைவைத்தபடி தங்கையையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

''நல்லாத்தான் இருக்குடீ. அவர் ஏதோ படத்துக்கு விமரிசனம் எழுதியிருந்தார். அதைப் படிச்சு நல்லாயிருக்குன்னு நாலு வார்த்தை சொல்லாமே, படம் எடுத்தவனுக்கு வக்காலத்து வாங்கிட்டு வர்றியே...''

சங்கரி கடுப்புடன் சொல்ல, இந்து படபடத்தாள்.

''புரியாமப் பேசாதேம்மா. நான் படம் எடுத்தவனுக்குப் பரிஞ்சிட்டு வரலே. அந்தப் பொண்ணு— அந்த ஹீரோயின்— அவளுக்காகப் பரிஞ்சிட்டுப் பேசினேன்.''

இதைக் கேட்டுச் சுவாமிநாதன் பெரிதாய்ச் சிரித்தார்.

''அடி அசடு. அந்த ஹீரோயின்— இந்தப் படம் சம்பந்தப்பட்ட வரையிலே 'ப்ராஸ்.' இதுவே அடுத்த படத்திலே கண்ணகியா வேஷம் போட்டுட்டு சிலம்

யைத் தூக்கிட்டு வருவா. அவ கொடுக்கிற பணத்துக்கு நடிக்கிறவ."

"ஸாரி... நான் கொடுக்கிற பணத்துக்குப் படுக்கிறவளைப்பத்தி... ஒருவிதத்துலே அந்த நடிகை பாடு தேவலை. அட்லீஸ்ட் சினிமாவுக்காகவாவது கன்னிகை வேஷம் போட முடிகிறது..."

-இதற்கு மேல் இவளைப் பேசவிடக் கூடாது என்பதுபோல, சபேசன் எழுந்து நின்று சோம்பல் முறித்தார்.

"என்ன இந்தா, பெண் பார்த்துட்டுப் போனதுல மூட் அவுட்டா?"

அவள் எரிச்சலை உள்ளடக்கியபடி சிரித்தாள்.

"இதுமாதிரிப் பெண் பார்க்கிற விஷயத்துக்காக எல்லாம் மூட் அவுட்டாறதா இருந்தா நான் நாள் முழுக்க உம்மணா மூஞ்சியாத்தான் இருக்கணும்."

சபேசன், மருமகளின் தலையைப் பாசத்துடன் வருட, சங்கரி தமையனின் அந்த ஒரு செயலிலேயே திருப்தியுற்றவளாய்ச் சிரிக்க...

"இவ பேச்சுல, எனக்கு எல்லாமே மறந்துட்டது. அண்ணா... இரு சாக்லேட் கொண்டு வர்றேன்."

சபேசன் கேட்க, இந்துவுமே தாயை அதிசயமாகப் பார்த்தாள்.

"எதுக்காக சாக்லேட்?"

அவர்களை வெகு நேரம் குழம்பவிடவில்லை கமலா. பட்டென விஷயத்தைப் போட்டு உடைத்தாள்.



"பவித்ராவுக்கு இது ரெண்டு மாசம். அம்மா மறுபடி பாட்டியாகப் போறாள்."

இந்துஜா, அதிர்ந்துபோய்த் தாயைப் பார்த்தாள். இன்னும் பவித்ராவின் கல்யாணத்துக்காக அவள் மாமாவிடம் வாங்கியக் கடனே அடைந்தபாடில்லை. சங்கரி என்னமோ, தன் பெண் கல்யாணத்துக்காக அண்ணன் பாச மிகுதியில் பணத்தை வாரியிறைத்ததாக நினைத்துக் கொண்டிருக்கிறாள்.

இந்துஜாவுக்கு அல்லவா இந்தக் கடனை அடைக்க தான் படும் பாடு தெரியும்.

அவள் சட்டெனச் சுவரில் மாட்டியிருந்த காலண்டரைப் பார்த்தாள். முகத்தில் பீதி பரவிற்று.

'நான்கூட ஐம்பது நாளா...'

அவள், தன்னைச் சுதாரித்துக் கொண்டு மாமாவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"மாமா! பொமரேனியனை, வெடரினரி ஹாஸ்பிடலுக்கு அழைச்சிட்டுப் போகணும்னு மாமி சொன்னாள். இன்னிக்குப் போயிட்டு வந்துடலாமா?"

சபேசன் புருவங்கள் முடிச்சிட அவளைப் பார்த்தார்.

# 6

சபேசன், இந்துஜாவை இதே இடத்திற்கு இதற்கு முன் மூன்று முறை அழைத்து வந்திருக்கிறார். இது நாலாவது தடவை.

பாவம், அவள். எத்தனையோ ஜாக்கிரதையாகத் தான் இருந்தாள். இருந்தாலும் சில சமயங்களில் இது போல விதி அவளை ஏமாற்றி விடுவதும் உண்டு.

"வாங்க மிஸ்டர் சபேசன்."

டாக்டர் குமரேசன், தன் முன் நான்கு கால்களையும் பரப்பிக் கொண்டு, அரை மயக்கத்தில் கிடந்த உயர் ரக நாய்க்கு ஊசி போட்டபடியே இவர்களை வரவேற்றார்.

அவரது வேலையை முடித்துவிட்டு வரும் வரையில் எதுவும் பேசவில்லை சபேசன். இந்துஜாவோ, புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்தியபடி, மாமாவின் அருகில் அடக்க ஒடுக்கமாய் அமர்ந்தவள், சற்றுத் தூரத்தில் மேஜையில் கிடக்கும் நாயையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நாய்க்கு அருகில் அதன் சொந்தக்காரி. காதிலும் மூக்கிலும் வைரங்கள் மின்ன, பட்டுப்புடவைத் தலைப்பால் முகத்தில் வடியும் வியர்வையைத் துடைத்தபடி, டாக்டர் நாய்க்கு ஊசி குத்தும்பொழுது— என்னவோ, அவளுக்கே வலிப்பது மாதிரி— முகத்தை அஷ்ட கோணலாக்கிக் கொண்டாள்.



"ஜாக்கிரதையாப் பார்த்துக்கங்க மேடம். இந்த மாதிரி ஜாதி நாய்களை வீட்டு வேலைக்காரனை நம்பி விடக்கூடாது. பாருங்க, இப்ப அவதிப்படுது."

"ஐயோ டாக்டர். என் பிங்க்கிய நானேதான் எப்பவும் வாக் அழைச்சிட்டுப் போவேன். என் ஃபிரண்ட் கிட்ட இதே ஜாதி நாய் இருக்கு. மேட்டிங்குக்குக்கூட ஏற்பாடு செஞ்சிருந்தேன். நாலு நாள் எனக்கு உடம்பு முடியல்லே. வாக் போக, பிங்க்கியை வேலைக்காரன் கூட அனுப்பினேன். அவனோட கேர்லஸ்னஸ். தெரு நாயோட சுத்த விட்டுட்டு அரட்டை அடிக்கப் போயிட்டான். விஷயம் தெரிஞ்சவுடனேயே அவனை டிஸ்மிஸ் பண்ணிட்டேன். பாவம், என் பிங்கி. அதுக்கு என்ன தெரியும் டாக்டர்? பிங்கிம்மா, வலிக்கறதாடீ? பொறுத்துக்கோம்மா. இதோ, எல்லாம் முடிஞ்சாச்சே."

அவள், நாயின் முகத்தையும் முதுகையும் தடவியபடி கொஞ்சிக் கொண்டிருந்தாள்.

இந்து, சபேசனைப் பார்த்து மெல்லிசாய்ப் புன்னகைத்தாள். அவரோ, இவளது பார்வையைத் தவிர்க்க விரும்பியவராய், அந்த நாயையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்துஜாவும் இந்த நாய் மாதிரிதான். நன்றியுள்ள மனுஷ நாய். மாமா கொடுக்கும் சம்பளத்துக்காக அவர் ஆட்டுவிக்கிறபடியெல்லாம் ஆடுகிற நாய். அவர் தரும் காசுக்காகக் கண்டவனுடனெல்லாம் படுக்கிற நாய்.

முதல் தடவை இவளது வயிற்றில் சுமை ஏறிய போது பொறிகலங்கிப் போய்விட்டாள். அது நடந்தது மூன்று வருஷங்களுக்கு முன்பு.

முதலில் புரியவில்லை. புரியத்தான் இல்லை.

'ஐயோ, இது எப்படி.'

அவள் மனசுக்குள் கணக்குப் போட்டுப் போட்டுப் பார்த்தாள். மாமா கொடுத்த மாத்திரைகளை ஒழுங்காய்ச் சாப்பிட்டும், எங்கேயோ தவறு நேர்ந்து விட்டதை உணர்ந்து பதறிப் போனாள்.

இதே மாதிரிதான். அறுபது நாள். அடிக்கடி வயிற்றைப் புரட்டுவதும், பயணம் செய்து, இறங்க வேண்டிய இடத்தில் இறங்கும்பொழுது தலை ரங்கராட்டினமாய்ச் சுற்றுவதும், எதுவும் சாப்பிடாமலேயே நாவில் உமிழ் நீர் ஊறுவதும்...

மாமாவிடம் சொல்லப் பயம்.

'மாத்திரையை ஒழுங்காப் போடாம என்ன செஞ்சே?' இப்படி அதட்டினால் என்ன செய்வது என்கிற பயம்

'இப்ப என்னால ஒண்ணும் செய்ய முடியாது.' இப்படிச் சொல்லி, கையை விரித்து விடுவாரோ என்கிற பயம்.

வீட்டில் எப்படி மறைப்பது? யாரை வேண்டுமானாலும் ஏமாற்றலாம். இந்த கமலாவை இதுபோன்ற விஷயங்களில் எல்லாம் யாரும் ஏமாற்ற முடியாதே!

தன் சகோதரிகளின் மூன்று நாள் கணக்கு மட்டுமில்லை; அந்தத் தெருவிலுள்ள அத்தனை பெண்களின் கணக்கும் அவளுக்கு அத்துப்படி. வீட்டுச் செலவுக் கணக்கைச் சரியாய்ப் போடத் துப்புக் கிடையாது. இந்த விஷயத்தில் மாத்திரம் அலாதி சுறுசுறுப்பு.



வீட்டில் உட்கார்ந்து, படுத்து, தூங்கிப் பொழுதைக் கழித்துக் கொண்டிருப்பவளுக்கு இதைவிட்டால் வேறு பொழுதுபோக்குதான் என்ன?

''ஏய், நீ இன்னுமா குளிக்கல்லே?''

இப்படி ஒருநாள் அவள், வெடிகுண்டைத் தூக்கிப் போட்டாற் போல கேட்டபொழுது, என்ன பதிலைச் சொல்வது என்றே தெரியாமல் மலங்க மலங்க விழித்தாள் இந்து.

''அது வந்து... அது வந்து...''

''வந்தாவது போயாவது... வரலையேன்னு தானே கேட்கறேன்?''

நல்ல வேளை. செல்லம்மாதான் பேத்திக்கு உதவ முன் வந்தாள்.

''அவ, என்னைக் கொண்டிருக்கா. நான் இப்படித்தான். கல்யாணம் ஆகிற வரைக்கும் ஒழுங்காவே ஆனதில்லே. இப்பன்னா, அனீமிக், அது, இதுங்கறாங்க. அப்ப என்னத்தைக் கண்டோம் .. அதுவும் நான் இருந்தது சின்னக் கிராமம் வேறயா? நாப்பது நாளாச் சுன்னாலே தலைக்குத் தலை வம்பு பேசக் கிளம்பிடுவாங்க.''

செல்லம்மாவின் வார்த்தை அன்றைய பொழுதுக்கு அவளைக் காப்பாற்றியது. அடுத்த இரண்டு நாட்களில், கமலாவை நம்ப வைக்கவேண்டும் என்பதற்காகவே மூன்று நாள் விலகியிருந்தாள் அவள்.

எல்லாம் சரிதான். எத்தனை நாள் இப்படி ஏமாற்ற முடியும்? வயிறு காட்டிக் கொடுத்து விடாதோ? இரவு பகலாய்த் தூக்கமின்றி அழுதழுது.

குளிப்பதற்காகக் குளியலறைக்குள் புகுந்து கதவைத் தாழிட்ட பிறகு, தனது பிஞ்சு வயிற்றில் மாற்றம் ஏதும் இருக்கிறதா என்று உற்று உற்றுப் பார்த்து, விஷயம் வெளியே தெரிவதற்குள் குளியலறை உத்தரத்திலேயே தூக்கு மாட்டிக்கொண்டு விடலாமா எனப் பலமுறை சிந்தித்து, அப்படியே தூக்கில் தொங்கினாலும் தன் உடம்பைப் போலீஸ் தரப்பு டாக்டர்கள் போஸ்ட்மார்ட்டம் என்கிற பெயரில் அறுத்துப் பார்த்து வயிற்றில் இரண்டு மாதக் கரு இருப்பதாகப் பக்கம் பக்கமாய் எழுதிவிடுவார்கள் என்கிற பயத்தில் அந்த யோசனையைக் கைவிட்டு, கடைசியில் தற்காலிக நிம்மதிக்காக வயிற்றைச் சுற்றி இறுக்கமாய்த் துணியைக் கட்டிக்கொண்டு வளைய வந்து...

அப்பப்பா! என்ன கொடுமை, எப்பேர்ப்பட்ட சித்ரவதை...

மென்று விழுங்கி, கடைசியில் மாமாவே சரண் என்று, அவரிடம் விஷயத்தைச் சொல்லி 'ஓ'வென அழுதாள்.

"என்னம்மா இது, இப்பப் போய் சொல்றே?"

"எனக்கு என்ன பண்றதுன்னே தெரியல்லே, எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு மாமா. செத்துப் போயிடலாம் போலிருக்கு. சாகறதுக்கும் பயமாயிருக்கு. செத்துட்டாலும் விஷயம் வெளியில் தெரியாமப் போகாதே..."

"உஷ்... அனாவசியமாப் பதட்டப்படாதே. இப்பவே கிளம்பு. டாக்டர் கிட்டப் போய் க்ளீன் பண்ணிட்டு வந்துடலாம்."



அவள், பெரிய விழிகளில் மிரட்சியுடன் அவரைப் பார்த்தாள்.

"ரொம்ப வலிக்குமா மாமா?"

என்ன ஒரு குழந்தைத்தனமான கேள்வி!

சபேசனுமே, அவளை ஒரு குழந்தையைப்பார்ப்பது போலத்தான் பார்த்தார். "ஒண்ணுமேயில்லே இந்தா, ஒரேயொரு ஊசி. அது போதும்."

"அப்புறம் எழுந்து வீட்டுக்குப் போயிடலாமா?"

"அது... கொஞ்சம் கஷ்டம் இந்து. எப்படியும் ஒரு நாள், ரெண்டு நாள் ஹாஸ்பிடல்லே தங்கும்படியா இருக்கும்."

'திக்'கென்றாகிவிட்டது அவளுக்கு.

இது எப்படி சாத்தியம்? சாயந்தரம் ஏழு மணிக்கு மேலாகிவிட்டாலே கமலா ஆயிரம் கேள்வி கேட்பாளே! ஒரு இரவு முழுக்க வெளியில், கன்னிப்பெண்—அதாவது, கன்னியென மற்றவர்களால் கருதப்படும்—பெண் தங்குவதென்றால் சாதாரண விஷயமா அது?

மாமா வீட்டில் தங்குவதாகச் சொல்ல முடியாது. என்றைக்காவது ஒரு நாள் மாமியும், அவள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் சந்திக்க நேர்ந்தால் குட்டு உடைபடாமல் போகாது.

சபேசனுக்குமே இதுபற்றிய யோசனை இருந்தது முகத்தில் தெரிந்தது. பலத்த சிந்தனையுடனேயே காரை ஓட்டினார். அவர், அவளது கருவைக் கலைப்பதற்காக அழைத்து வந்த இடமோ, அவர் வீட்டு நாய்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படும் மிருகங்களுக்கான ஆஸ்பத்திரி.

"என்ன மாமா இது?"

'நர்ஸிங்ஹோம்லேன்னா ஆயிரம் கேள்வி கேட்பாங்க இந்து. நீயா போய் வேலைய முடிச்சுட்டு வந்துட முடியாது. நீ யாரு, துணைக்கு யார் வந்திருக்காங்க, கல்யாணமாச்சா, இல்லையா— இதையெல்லாம் துருவித் துருவிக் கேட்பாங்க. ஏதாவது இசகு பிசகா ஆயிடுச்சுன்னா— கேஸ், போலீஸ்னு அவங்களை இல்லே இழுத்தடிப்பாங்க."

இதில் இவ்வளவு சிக்கல்கள் இருக்கிறதா? இந்து, விழிகளில் பயம் படர அவரையே பார்த்தாள்.

"ஏதாவது இசகு பிசகுன்னா... அப்படியெல்லாம் கூட ஆகுமா மாமா?"

"சேச்சே... என்ன நீ, இத்தனை பயந்தாங்கொள்ளியா இருக்கே! அவங்களோட தற்காப்புக்காக அப்படியெல்லாம் கேட்பாங்கன்னு ஒரு பேச்சுக்குச் சொன்னேன். நீ இறங்கு."

சபேசன், டாக்டர் குமரேசனிடம் ஏதோ பேசினார். சில நூறு ரூபாய்களைத் தந்தார். குமரேசன் அவரின் பால்ய சிநேகிதராம். இதுபோன்ற சந்தர்ப்பங்களுக்குப் பயன்படுவார் என்கிற முன் யோசனையுடனேயே இந்த மனிதரின் சினேகிதத்தை விடாமல் இருக்கிறாரோ மாமா என்றுகூட இந்துவுக்குத் தோன்றியது.

"முழுசா மூணு மாசமாயிடுச்சு. இனிமே சலைக்கறது பெரிய ரிஸ்க்."

"அதனாலதானே இங்கே வந்தேன்?"

குமரேசன் அவளை ஏற இறங்கப் பார்த்தார். அவள், கண்ணீர் மல்கத் தலைகுனிந்து நின்றாள்.



"சரி, உள்ளே வா."

அவர், தனது அறைக்குப் போய் ஆயுதங்களைத் தயார் செய்ய, இந்து, அவர் சுட்டிக் காட்டிய மரப் பெஞ்சில் படுக்க, தலைமாட்டில் எமதூதன் மாதிரி சபேசன்.

'மாமா, நீங்க வெளியில போயிடுங்களேன்."

"நோ, நோ... அவர் ஹெல்ப் வேண்டியிருக்கும். என்கிட்ட அனஸ்தீஷியாகூட ரெடியா இல்லே."

டாக்டர் கையிலிருந்த ஆயுதத்தைக் கண்டதும் 'வீல்' என்று அலறினாள் இந்து.

"ஐயோ, என்ன மாமா இது! ஊசி நான்னு சொன்னீங்களே..."

"சத்தம் போடாதேம்மா. அக்கம் பக்கத்துக்காரங்க— ஏதுடா வெடர்னரி ஹாஸ்பிடல்லே பொம்பளைக் குரல் கேட்குதேன்னு ஓடி வந்திருவாங்க."

டாக்டர், அவளது முகத்தைப் பார்க்காமல், தன் காரியத்தில் இறங்கினார்.

"சபேசன், ரெண்டு காலையும் கட்டுங்க. அந்தக் கையையும். இதோ பாரும்மா, இப்பவே இப்படிக் கத்தினா எப்படி..."

"இந்தா... கொஞ்சம் பொறுத்துக்கோ. இதோ ஆச்சு..."

சபேசன் சமாதானமாய்ச் சொல்ல, இந்துஜா எல்லாவற்றையும் மீறிக்கொண்டு அலறினாள்.

"யூ... யூ... ப்ளடி ஸ்கௌண்ட்ரல்! மனுஷனாடா நீ... உன் பெண்டாட்டிக்கு இது மாதிரி செய்வியா? உன் பொண்ணுக்குச் செய்வியா? பாவி, நாச—"

வார்த்தைகளை முடிக்கும் முன், அவளது புடவைத் தலைப்பையே பந்தாகச் சுருட்டி அவளுடைய வாயில் திணித்தார் டாக்டர். உள் நாக்குக்கூட அசைய முடியாத வண்ணம் துணிச் சுருள்.

சுத்தமாய் நினைவிழந்தாள் இந்து.

கண் விழித்துப் பார்க்கையில் பகலா, இரவா என்றே புரியாத நிலை.

சபேசன்தான் எங்கேயிருந்தோ ஒரு கிளாஸ் தம்ளரில் காப்பியைக் கொண்டு வந்து வாயில் ஊற்றினார். துணிச்சுருள் அடைத்துக் கிடந்த நாக்கு ஒட்டி, உலர்ந்துபோய், ஒரு வாய் காப்பியைக்கூட விழுங்க முடியாததாக...

"மாமா..."

"எல்லாம் சரியாயிட்டது இந்து... இப்ப மணி ஏழாகிறது. கிளம்பலாமா?"

"எனக்குக் காலெல்லாம் நடுங்குது மாமா..."

"மெதுவா என்னைப் பிடிச்சுக்க. கார்லதானே போறோம்?"

அன்றிரவு—

சபேசன் கைத்தாங்கலாய் அழைத்துவர, இந்துஜா உள்ளே நுழைந்தபோது குடும்பமே பதறிவிட்டது.

சங்கரிதான் முதலில் குரல் கொடுத்தாள்.

'என்னடீ ஆச்சு?"

"ஒண்ணுமில்லே சங்கரி. அவ ஏற்கனவே ரொம்ப வீக். இன்னிக்கு மதியானம் குளிர் ஜுரம் வேற வந்



துட்டது. அப்பவே கிளம்பி வீட்டுக்குப் போறேன்னா. நான்தான், 'படுத்து ரெஸ்ட் எடு. நான் கார்ல கொண்டு விடறேன்னு சொன்னேன். டாக்டர்கிட்ட காமிச்சு, மருந்து, மாத்திரை எல்லாம் வாங்கியிருக்கு. இந்தா..."

"உம்..."

"மெதுவாப் போய்ப் படு. நாளைக்கே கிளம்பி ஆபீசுக்கு வர வேண்டாம். டாக்டர் குறைஞ்சது ஒரு வாரம், பத்து நாளாவது 'பெட் ரெஸ்ட்'லே இருக்கணும்னு சொல்லியிருக்கார். உடம்பைப் பார்த்துக்கோ."

அத்துடன் அவர் கடமை முடிந்து விட்டது. அதற்குப் பிறகு ஏழெட்டு நாள் படுக்கையில் கிடந்தாள் அவள்.

சங்கரி, தன் கணவரிடம் பெருமை பொங்கக் கூறிக்கொண்டாள். "அண்ணாவுக்கு எப்பவுமே இந்து கிட்ட அலாதிப் பாசம். பாருங்களேன். ஒரு வாரம், பத்து நாளானாலும் ரெஸ்ட் எடுத்துக்கச் சொல்லியிருக்கான். வேற வெளி கம்பெனிகள்லேன்னா இந்தச் சலுகையெல்லாம் கிடைக்குமா?"

"உடம்புல சூடேயில்லே. போர்த்திப் போர்த்திப் படுத்துட்டேயிருந்தா உடம்பு சுடற மாதிரித்தான் இருக்கும். காலம்பற எழுந்து 'ஜில்'லுனு பச்சைத் தண்ணியில குளிச்சுட்டு, 'நறுக்'குனு குழம்பு, ரசம், மோர்னு சாப்பிட்டா எல்லாம் சரியாப் போயிடும். எனக்குக் கூடத்தான் நாலஞ்சு நாளா, சாயந்தரமாச்சுன்னா ஒரே தலைவலி. லேசா ஜுரம்கூட இருக்கு. டாக்டர்கிட்ட போனா அம்பது, அறுபதுன்னு வேட்டு

வைப்பான். அதெல்லாம், வியாதி கொண்டாடறதுக்கும் அதிருஷ்டம் பண்ணியிருக்கணும்கறேன். நான் படுத்தா என்னு கேட்க யார் இருக்காங்க? இருந்த ஒரே மனுஷனும் போயாச்சு. விறகுவெட்டிக்குப் பிளவை வந்தா வைத்தியத்துக்கு எங்கே போவான்? விறகு வெட்டற கோடாலியாலே ஒரு போடு போட்டுக்க வேண்டியதுதான்.''

சமயம் தெரியாத கமலா, தனக்கு இதுபோன்ற ராஜ வைத்தியம் நடக்கவில்லையே என்று குறைபட்டாள்.

கிழவி செல்லம்மாதான் பேத்தியின் அருகிலேயே உட்கார்ந்து, அவளின் கையைப் பிடித்து நீவி விட்டுக் கொண்டிருந்தாள்.

''என்ன பண்றது குழந்தே?''

''ஒண்ணுமில்லே பாட்டி. உடம்பு ரொம்ப வீக்கா இருக்கு.''

''பாத்ரூம் பக்கம் போகணும்னா என்னைப் பிடிச்சுக்கோ. நீ பாட்டுக்கு எழுந்து எழுந்து போயிட்டு வர்றே. உன் நடையையும், மூஞ்சியையும் பார்த்தாலே எனக்கு அடி வயித்தைக் கலக்கறதுடி.''

இந்து, அவளின் நடுங்கும் மெலிந்த விரல்களைப் பிடித்திழுத்துக் கன்னத்தில் பதிய வைத்துக் கொள்வாள். கண்களில் பெருகும் நீரை அவளறியாத வண்ணம் தலையணைக்குச் சமர்ப்பிப்பாள்.

இது முதல். இதற்குப் பின் இரண்டாவது மூன்றாவது, பவித்ராவின் கல்யாணத்துக்கு நாலு நாட்கள் முன்பு. விடு கொள்ளாத உறவுகாரப் படைகள். சங்கரி,



மகளுக்கு ஒரு வாய்க் கஞ்சி வைத்துக் கொடுக்கக்கூட முடியாதபடி பரவாய்ப் பறந்தாள்.

அப்பொழுது பவித்ரா முகத்தைக் காட்டினாள்.

''எனக்கு ஒரு நல்ல காரியம்னாலே இவளுக்கு ஏதாவது வந்துடுமே...''

''அதெல்லாம் இல்லைடீ. வீட்டுல நாலு பேர் கூடினா வேலை கொஞ்சமாவா இருக்கும். எங்கே ஆபீஸ்லேருந்து வந்தவுடனே, 'அதைச் செய், இதைச் செய்'னு வேலை வாங்கப் போறோமேன்னு இப்படி நீட்டிட்டா. நீ கல்யாணப் பொண். காரியம் செய்ய யாரும் விடமாட்டா. அவ ஆபீஸுக்குப் போறா. போதாக் குறைக்கு உடம்பு வேற. அவளைக் காரியம் செய்யச் சொல்லி வற்புறுத்த, இந்த வீட்டுல யாருக்குத் தைரியம் இருக்கு? என்னமும் வந்தா நான்தான் இருக்கேன். பிறந்த வீட்டுல உழைச்சுக் கொட்டறதுக்காகத்தானே, என்னை என் புருஷன் இப்படி அம்போன்னு விட்டுட்டுப் போயிருக்கார்.''

இது கமலாவின் ஆங்காரம் மிகுந்த வார்த்தைகள். அந்த முறை அதிக நாள் படுக்கவில்லை இந்து. மூன்றாம் நாளே எழுந்து, மாங்கு மாங்கென்று இட்லிக்கு மாவரைத்தாள். பவித்ராவுக்கு வேண்டிய ரவிக்கைத் துணிகளை வாங்கக் கடைக்கு ஓடினாள். அம்மாவுடன் மிஷினுக்குப் போய் மிளகாய்ப்பொடி அரைத்து வந்தாள். சத்திரம் தேடி அலைந்தாள். வந்த ஜனங்களுக்கெல்லாம் விழுந்து விழுந்து பரிமாறினாள்...

இன்று...

அதே பவித்ரா - தனது மசக்கையைக் கொண்டாட, அம்மாவிடம் திரட்டுப்பால் கிளறித் தரச் சொல்லி, நாக்கை நொட்டை விட்டுத் தின்று கொண்டிருந்த அதே நேரத்தில், இந்தப் பெண், நாலாவது சிசுவை ஸம்ஹாரம் செய்து கொள்வதற்காக உட்கார்ந்திருக்கிறாள்!

# 7

பவித்ராவுக்கு இது ஆறாம் மாசம். அடுத்த மாசம் வளைகாப்பு, சீமந்தமாம். அம்மா இப்பொழுதிருந்தே இந்துஜாவை நச்சரிக்கத் தொடங்கிவிட்டாள்.

"அவளுக்கு ஒரு புடவை எடுக்கணும்."

"இப்ப என்கிட்ட முழுசா நூறுருபா இல்லேம்மா. நான் ஒண்ணு சொன்னா தப்பா நினைக்க மாட்டியே."

"என்ன?"

"இந்த வளைகாப்பு, சீமந்தம் எல்லாம் பண்ணாம குழந்தை பிறக்காதா? அப்படியேதான் விட்டுப் பாரேன். ஆறாம் மாசத்தோட குழந்தை எங்கேயும் மாயமா மறைஞ்சு போயிடாது. பத்தாவது மாசம் வரைக்கும் வயித்துல சுகமாகத்தான் இருக்கும்."

"நல்லாயிருக்கு. வரவர உன் பேச்சும், போக்கும் சரியே இல்லை. இருந்திருந்து குழந்தை இப்பத்தான் தலைச்சன் உண்டாகியிருக்கா. அது நல்லபடியாப்



பொறக்கணுமேன்னு நான் கவலைப்பட்டுட்டிருக்கேன். நீயானா, இப்படி ஏடாகூடமா பேசறியே?"

அம்மா 'சுள்'ளென்று எரிந்து விழுந்தாள். எல்லாம் இருக்கிறபடி இருந்திருந்தால் - பவித்ராவின் வளைகாப்பை ஒரு கல்யாணம் போலச் செய்திருப்பாளாம். இப்படி, வயிற்றில் பிறந்த பூச்சி, புழுவிடமெல்லாம் பேச்சு வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டுமென்று அவள் தலையில் எழுதியிருக்கிறதாம்.

என்றைக்கு இந்து, பவித்ரா புருஷனின் விமரிசனத்தைப் பற்றிய தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தாளோ அன்று முதலே கடுப்பு.

'ராங்கிக்காரி! அவளுக்குத் தான்தான் வேலைக்குப் போய் இந்தக் குடும்பத்தைத் தாங்கறதா நினைப்பு.'

அந்த விமரிசனத்துக்காக, பிரபாகரனுக்கு ஐம்பது ரூபாய் சன்மானம் பத்திரிகையிலிருந்து வந்தது. அதில் பவித்ராவும் அவனுமாய் இன்னொரு புதிய படத்தைப் பார்த்தார்கள். நல்ல ஓட்டலில் கட்லட்டும் மசால் தோசையும் சாப்பிட்டார்கள். வீடு திரும்பும்பொழுது பவித்ராவின் தலையில் நாலு முழம் ஜாதிப்பூ இருந்தது.

இதற்குப்பின் ஒரு வாரம் வரையில், பவித்ரா தான் பார்த்த படத்தைப் பற்றியும், சாப்பிட்ட டிபனைப் பற்றியும், தன் கணவனுக்குத் தன் மேலுள்ள பிரியத்தைப் பற்றியும் வாய் வலிக்கப் பேசித் தீர்த்தாள்.

அன்று காலையில் இந்துஜா அவசர அவசரமாய்ச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுதே, சங்கரி, தன் அம்மாவின் கையிலிருந்த பாத்திரத்தைத் தான்

வாங்கிக்கொண்டு, மகளின் அருகில் வந்து அமர்கிறாள்.

"இந்து."

"உம்?"

"பவித்ரா உடம்பைப் பார்த்தியோ?"

"ஏன், நல்லாத்தானே இருக்கா."

"போதுமே. நீதான் மெச்சிக்கணும். சரியாச் சாப்பிடறதே இல்லே. மசக்கை ரொம்பப் படுத்தறது. உடம்புல நரம்பு தெரியறது. நல்ல லேடி டாக்டர் கிட்டக் காமிச்சு, டானிக் ஏதாவது வாங்கித் தரணும். ஆறு மாசத்துக்கு - குழந்தை போதுமான வளர்ச்சி இருக்கான்னு பார்க்கணும். மாமாகிட்டே சொல்லு. 'மாமிக்கு வழக்கமாப் பிரசவம் பார்க்கற டாக்டர் சிவகாமியோட நர்ஸிங்ஹோம்லேயே பவித்ராவை டெலிவரிக்குச் சேர்க்கலாம்னு அம்மா நினைக்கறா... ஒரு நாளைக்கு டாக்டரம்மா கிட்ட அப்பாயின்ட்மென்ட் வாங்கித் தர வேண்டியது உங்க பொறுப்பாம்னு."

"ஏன், டாக்டர் குமரேசன் கிட்ட காமிக்கலாமே..."

இந்து, எங்கோ நினைவாய்ச் சொல்லிவிட்டாள்.

"யாருடீ அது குமரேசன்?"

"வெடரினரி டாக்டர்."

அவ்வளவுதான். அது நேரம் வரையில், சமையலறை அலமாரியில் உலர்ந்த திராட்சையைத் தேடி, பாட்டில் பாட்டிலாகக் குடைந்துக் கொண்டிருந்த பவித்ரா சடாரெனத் திரும்பிப் பார்க்கிறாள்.



"என்னடீ சொன்னே?"

குரலில் அழுகை கொப்புளிக்கிறது.

"அம்மா, பார்த்தியாம்மா, என்னையும் என் புருஷனையும் மிருகம்னு சொல்றா. என் குழந்தையை நாய், பூனைக்குட்டிக்குச் சமமா நினைக்கறா. இதுக்குத்தான் நான் அவர்கிட்ட தலைதலையா முட்டிகிட்டேன், தனியாய்ப் போகலாம், தனியாய்ப் போகலாம்னு.. அவர் ஒரு அசடு. அப்பாவி. உங்கப்பா அம்மாவுக்கு வயசாச்சு, ஆம்பிளைத் துணையில்லாம, அவங்களைத் திண்டாட விடக்கூடாதுன்னு பிடிவாதம் பிடிக்கறார்."

"நான் ஏதோ ஞாபகத்துல சொல்லிட்டேண்டி."

இந்து பவித்ராவை சமாதானப்படுத்த முயற்சிக்கிறாள். அந்தக் கணத்தில் அவளது வாயை அடைத்தால் போதும்போல இருக்கிறது இந்துவுக்கு. சண்டை போடத் தெம்பில்லை. நேரமும் இல்லை. ஆனால், பவித்ரா— இதை அத்தனை லகுவாக ஒதுக்கி தள்ளத் தயாராக இல்லை.

இந்துஜா ஆபீசுக்குக் கிளம்பும் வரையில் பவித்ரா அம்மாவின் மடியில் படுத்துக்கொண்டு அழுகிறாள்.

"எங்க மாமியார் வம்சத்துல பூரான் மாதிரி ஒரு தாய்க்கு ஒரு பிள்ளைதான். அதுவும் பொறக்குமா, பொறக்குமான்னு ஏங்கித் தவமிருந்து பெத்துக்கற வம்சம். ஏதோ, கடவுளாய்ப் பார்த்து எனக்கு அந்தக் குறையெல்லாம் வைக்காம..."

"ச்சு. அழாதே கண்ணம்மா. இங்கே பாரு. அவ சின்னவ. ஏதோ விளையாட்டாச் சொல்லிட்டா."

மாமியாரின் மடியில் படுத்து அழும் பெண்டாட்டியை, அருகிலிருந்து தேற்றுகிறான் பிரபாகர்.

இந்துஜா, முன் நெற்றியில் பறக்கும் கேசத்தை, கண்ணாடியைப் பார்த்துச் சரி செய்தபடியே — கண்ணாடி வழியே அவனைப் பார்க்கிறாள்.

இவனால் ரோஷப்பட முடியாது. மாப்பிள்ளையாய் லட்சணமாய், 'ஆகா, என் பெண்டாட்டியை மிருகம் என்று சொன்னாயா' — இப்படிக் கத்தி எகிறிக் குதிக்க முடியாது. இவனது ஆவேசமெல்லாம் பட விமரிசனத்தில்தான். சுறுசுறுப்பெல்லாம் ஸ்டுடியோவுக்கு ஓடுவதில்தான். மூளையெல்லாம் கிசுகிசு எழுதுவதில் தான். வாய்ச் சவடால் எல்லாம் பெண்டாட்டியிடமும், அவளைச் சேர்ந்த மனிதர்களிடமும்தான்...

இந்துவிடம்கூட அவன் அதிகம் பேசமாட்டான். அவள் கூடத்திலிருந்தால்—இவன் சமையலறையில் மாமியாருக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருப்பான். அவள் சாப்பிட்டுக் கொண்டிருந்தால்—சமையலறைப் பக்கம் எட்டிப் பார்த்துவிட்டுச் சத்தம் போடாமல் நழுவி விடுவான்.

"இன்னிக்கு சுலக்ஷணாவைப் பேட்டி காணப் போயிருந்தேன். கல்யாணத்துக்கு அப்புறமா கொடுக்கற முதல் பேட்டி எனக்குத்தான். நீலக் கலர்ல ஷிபான் ஸாரி கட்டிட்டு..."

இந்து இல்லாதபோது அவனது குரல் இப்படி அட்டகாசமாய் உயர்ந்து ஒலிக்கும். இந்து அந்த இடத்தில் திடுதிப்பெனப் பிரவேசித்து விட்டாலோ சுருதி மெள்ள மெள்ள இறங்கி, ரகசியக் குரலாய் அமுங்கி விடும்.



கல்யாணமான புதுசில் அப்படியில்லை. இவனிடமும் தன் பிரதாபத்தை அளந்திருக்கிறான்தான். ஆனால், இப்பொழுது அதெல்லாம் முடியவில்லை. ஒருவித பயம், தாழ்வுணர்ச்சி — எல்லாம் வந்து விட்டது.

இந்து, அவனிடம் அதிகம் பேசமாட்டாள். ஆனால் பார்வையே போதும்.

'அடத் தூ. நீ ஒரு மனுஷன். உனக்கொரு பெண்டாட்டி. தனியாப் படுக்கையறை. உன் பேரைச் சொல்ல ஒரு பிள்ளை. வெட்கமாயில்லே...'

இந்து வாய்விட்டுக் கேட்க வேண்டாம். அவளது கரு விழிகளே—அவனை நார் நாராகக் கிழித்துத் தோரணம் கட்டிவிடும்

இதோ—இப்பொழுது கூட அவன் அவளது விழிகளைச் சந்திக்க முயலவில்லை. மனைவியின் தலையை வருடிக்கொண்டே சொல்கிறான்.

"அழாதேம்மா. இந்த மாதிரி சமயத்துல அழக் கூடாது."

இந்து மெள்ளக் கனைக்கிறாள். அவன், நிமிர்ந்து அவளைப் பார்க்கிறான்.

"என்னோடு பஸ் ஸ்டாண்ட் வரைக்கும் வாங்களேன்..."

"என்னையா?"

அவன் ஆச்சரியத்துடன் வினவ, சங்கரி, குழப்பத்துடன் அவளைப் பார்க்க...

"எதுக்குடி..."

''இந்தா, உன் மாப்பிள்ளைய நான் கடத்திட்டுப் போயிட மாட்டேன். கொஞ்சம் அனுப்பு...''

பிரபாகர், சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்புகிறான்.

தெரு முனை வரையில் மௌனமாய்த் தலை குனிந்து தன்னுடன் நடந்து வருபவனையே ஓரக் கண்ணால் அளந்தபடி நடக்கிறாள் அவள்.

ஆள் அழகாய்த்தான் இருக்கிறான். பவித்ரா பெருமையடித்துக் கொள்வது போல...

அழகு மட்டும் போதுமா. நிரந்தரமாய் ஒரு வேலை வேண்டாமா? இவனெல்லாம் எந்தத் தைரியத்தில் பெண்டாட்டி பக்கத்தில் படுத்துக் கொள்கிறான்?

அத்தனை வேதனையிலும் — உதட்டோரத்தில் சின்னச் சிரிப்பொன்று எட்டிப் பார்க்கிறது.

பெண்டாட்டி அருகில் படுக்க ஓர் ஆண் பிள்ளைக்குத் தைரியம் வேண்டுமா என்ன?

வேண்டும்தான். இவனுக்கே வேலை இல்லாத போது—இவனே மைத்துனி சம்பாதித்துப் போடுவதை சாப்பிடும் பொழுது — இவனுக்குப் பிறக்கப்போகும் பிள்ளையை எப்படிக் காப்பாற்றுவான்? அத்தி பூத்தாற்போல, பத்திரிகைகளிலிருந்து வரும் ஐம்பதும், நூறும் போதுமா?

அந்தப் பணம், இவர்களிருவரும் சினிமாவுக்கும் ஓட்டலுக்கும் போகக்கூடக் காணாதே. பிறக்கிற குழந்தையையும் இது மாதிரி சினிமாப் பார்க்க அழைத்துப்போய், ஒரு பொழுது மசால் தோசையையும், கோன் ஐஸ் கிரீமையும் சாப்பிட வைத்து, மிச்ச நேர



மெல்லாம் இதுபற்றியே பேசிப் பொழுதைக் கழிக்கப் பழக்கப்படுத்தி விடுவார்களோ?

'உக்கும்...''

அவள் தொண்டையைச் செருமுகிறாள். அவனுக்குப் புரியும்படியாக, அதே நேரத்தில் அவன் மனசை அதிகம் புண்படுத்திவிடாதபடி பேச, தன்னை தயார்ப் படுத்திக் கொள்கிறாள்.

''அம்மா எப்போ வளைகாப்பு, சீமந்தத்துக்கு நாள் பார்த்திருக்கா?''

''இந்த மாசம் இருபதாம் தேதி.''

''அதுக்கு எவ்வளவு செலவாகும்? கேட்கறேனேன்னு கோவிச்சுக்காதிங்கோ. திடீர்னு அம்மா ஆயிரத்தைக் கொண்டா, ரெண்டாயிரத்தைக் கொண்டான்னு கேட்பா. அவளுக்குக் காலம் கிடக்கிற இடப்பே புரியாது. சொல்லுங்க. எவ்வளவு ஆகும். ஒரு ரெண்டாயிரம்... போதுமா...''

''என்னைக் கேட்டா எனக்கு என்ன தெரியும்...''

''சரி, இந்தச் செலவு ரெண்டாயிரம். அம்மா, பவித்ராவை சிவகாமி நர்ஸிங் ஹோம்லேதான் அட்மிட் பண்ணணும்கறா... அதுக்கு ஒரு ரெண்டாயிரம். அப்புறம் மருந்து, மாத்திரை, புண்யாகவசனத்துக்கு நாலு பேருக்கு வடை பாயசத்தோட சாப்பாடு. குழந்தைக்கு தங்கக் காப்பு, வெள்ளிக் காப்பு இதுக்கெல்லாம் ஒரு ரெண்டாயிரம். மொத்தம் ஆறாயிரம் ரூபாய்க்குக் குறையாம செலவு இருக்கு. இதையே அறுநூறு ரூபாய்க்குள்ளகூட முடிக்கலாம். ஆனா அம்மா மாட்டா. அம்மாவாலேமுடியாது...''

பிரபாகரன் முகம் சிவக்கிறான்.

''நான் வேணுமானா கிராமத்துல இருக்கற அஞ்சு வேலி நிலத்தையும் வித்துப் பணம் கொண்டு வரேன்...''

''வித்தா எவ்வளவு தேறும்?''

''என்ன, ஆறு, ஏழாயிரம் தேறும்.''

''அதாவது உங்களுக்கு இருக்கற சில்லறைக் கடன் எல்லாம் போக மீதி ஆறாயிரம்னு கணக்குப் போட றீங்க...''

''... ... ... ... ...''

''சரி. அந்தப் பணத்துல குழந்தைக்குத் தொட்டில் போடற வரைக்கும் ஜமாய்ச்சுடலாம். அதுக்கு அப் புறம்?''

அவன் கேள்விக் குறியுடன் அவளைப் பார்க் கிறான்.

''அப்புறம்னா... புரியல்லை.''

''தொட்டில் போட்டதோட குழந்தையோட செலவு முடிஞ்சுடாது, யூ நோ. தொட்டில்லே கிடத் தின குழந்தையை, அதுக்கு அப்புறமா தூக்கிக் கடா சிடப் போறீங்களா? குழி தோண்டிப் புதைச்சுடப் போறீங்களா? இல்லே... அனாதை விடுதி எதிலே யாவது...''

'இந்து!''

''ஸாரி. நான் கொஞ்சம் ஓவராப் பேசிட்டேன் இல்லே... என்னோட கவலை, டென்ஷன் அதான். நீங்க உங்க குழந்தைக்குத் தொட்டில் போடற வரைக்



கும் தான் யோசிக்கிறீங்க. ஆனா நானோ... அதுக்குப் பால் டின் வாங்கறதைப் பத்தி, ஒரு மாசத்துக்கு ரெண்டு டின், குழந்தை வளர வளர நாலு டின் வரைக்கும், அப்புறம் ட்ரிபிள் ஆன்டிஜன், போலியோ டிராப்ஸ், குழந்தைக்கு அப்பப்போ வர்ற ஜுரம், மூணு வயசுல நர்ஸரி, நாலு வயசுல எல்.கே.ஜி. அதுக்கான அட்மிஷன் அலைச்சல், ஃபீஸ், யூனிபார்ம்... பிள்ளையா இருந்தா ஒரு கவலை இல்லே. பொண்ணா இருந்தா பதிமூணு வயசுலேயிருந்து இன்னொரு கவலை.''

''... ... ... ... ...''

''சின்ன விதைக்குள்ள பெரிய விருட்சம் ஒளிஞ் சிருக்கற மாதிரி பவித்ராவோட ஆறு மாசக் கருவுக் குள்ளே இத்தனை கவலை ஒளிஞ்சிட்டிருக்கு. இதுக் கெல்லாம் - ஐ மீன் இந்தச் செலவுக்கெல்லாம் - எதை வித்துச் சமாளிக்கப் போறீங்க? என்கிட்ட விக்கறதுக்கு இனிமே ஒண்ணுமேயில்லே.''

பிரபாகர், சட்டைப் பித்தானைத் திருகியபடி அவளையே இமைக்காமல் பார்க்கிறான். முகம் பரிதாப கரமாய்க் கோணிப் போகிறது.

''பவித்ரா அழறாளேன்னு கையைப் பிசைஞ்சுட்டு நிக்கற நேரத்துல ஏதாவது வேலைக்கு அப்ளை பண் ணுங்க. இப்போதைய இந்தச் செலவுக்கு - நான் மாமா கையைத்தான் எதிர்பார்க்கணும். என் கணக்குல ஒரு மூவாயிரம்... திடீர்னு எனக்குக் கல்யாணம் நிச்சய மானா இருக்கட்டும்னு போட்டு வச்சிருக்கேன்... எப் பேர்ப்பட்ட மாப்பிள்ளையானாலும் - இந்த மூவா யிரத்துக்குள்ளதான் எல்லாச் செலவையும் முடிச்சா

கணும். அந்தப் பணம், இப்ப பவித்ராவோட பிரசவத்துக்கு உதவப் போறது.''

''வேலை கிடைக்க மாட்டேங்கறது இந்து... என் குவாலிபிகேஷனுக்கு...''

''ஏன்? நீங்க பி. ஏ. டிகிரிதானே...''

''இல்லே. உன்கிட்ட சொன்னா என்ன... பி. ஏ. ஃபர்ஸ்ட் இயர்தான் போனேன்... அப்புறம் முடியல்லே...''

''ஓ... அது வேறயா?''

அவள் புருவம் முடிச்சிட அவனையே பார்க்கிறாள். அவன், கைக்குட்டையால் முகத்தை ஒற்றிக் கொள்ளும் சாக்கில், மூடிக் கொள்கிறான்.

அவளுக்கு, தன்னுடன் வேலை பார்க்கும் பெண் - சசியுடன் அவளது கணவன் வேலை பார்க்கும் பழரசத் தொழிற்சாலைக்குப் போய் வந்தது நினைவுக்கு வருகிறது.

தொழிற்சாலை அரும்பாக்கத்திலே இருக்கிறது.

இவன் போவானா...

போகத்தான் வேண்டும்...

அன்று — சிநேகிதியின் கணவர் தொழிற்சாலையின் ஜெனரல் மானேஜரை அறிமுகப்படுத்தியது நினைவுக்கு வருகிறது.

''எனக்கு எல்லாமே நேரப்படி நடந்தாகணும். ஒழுங்கா நடந்தாகணும். ஆபீசுக்கு லேட்டா வர்றவங்களையும், ஷேவ் பண்ணிக்காம தூங்கி வழியற முகத்தோட வந்து நிக்கறவங்களையும் கண்டா ரொம்பக் கோவம் வரும். இருந்தாலும் — இதோ, எங்க வீட்டு ஸ்டெனோ இருக்காளே, அவளுக்கு மாத்திரம் என்னோட விதிகளைக் கொஞ்சம் தளர்த்தியிருக்கேன். ஏன்னா, சின்னக் குழந்தை இருக்கு அவளுக்கு. அதைக் காப்பகத்துல விட்டுட்டுத்தான் வரணும்.''



இப்படி அவர் சொன்னது.

''எங்க ஜி.எம். பெரிய மனோதத்துவ மேதை. ரொம்ப நாளா இதே ஆபீஸ்ல அலுத்துச் சலிச்சுப் போய் - வேலையைச் சரியாக் கவனிக்க முடியாத நிலையில இருந்த ஒரு அம்மாவைப் புதுசா டேபிள், குஷன், நாற்காலி போட்டு எக்ஸிகியூடிவ்னு போர்டு போட்டு உட்கார்த்தி வச்சார். இப்ப அவ சுறுசுறுன்னு வேலை பார்க்கறா. இதே மாதிரி ஒரு பியூன், கொஞ்சம் படிச்சவன். அவனுக்கு ஒரு டேபிள் நாற்காலி போட்டு டெஸ்பாட்ச் கிளார்க்னு போஸ்ட் கொடுத்துட்டாரு. அவன் இப்ப ரொம்பப் பொறுப்பா வேலை செய்யறான்.''

இப்படி சசியின் கணவன் சொன்னது...

அந்த நிமிடமே — இந்தப் பிரபாகரனுக்காக வேலை கேட்டு அரும்பாக்கம்போக முடிவு செய்கிறாள் அவள்.

மாமாவிடம் பர்மிஷன் கேட்க வேண்டும். ஏன், எதற்கு என்று ஆயிரம் கேள்வி கேட்பார்...

எப்படியோ.

இந்த மனிதனுக்கு ஒரு வேலை வாங்கித் தந்து விட்டால் அப்புறம், அவன் பெண்டாட்டி, அவன் குழந்தை... ஒரு சுமை குறையும்...

அவள் பிரபாகரைக் கூர்ந்து பார்க்கிறாள்.

''நான் இப்ப உங்களுக்காக வேலை தேடி ஒரு ஃபாக்டரிக்குப் போறேன். அப்படியே ஆபீஸ் போய் விட்டு வர லேட்டாகும். நீங்க, பவித்ராவையும், அம்மாவையும் அழைச்சுட்டு நர்ஸிங் ஹோமுக்குப் போயிட்டு வாங்க...''

''பணம்...''

''இந்த நூறு ருபாயை வச்சுக்குங்க. நடுவுல நான் பக்கத்து வீட்டுக்குப் போன் பண்ணுவேன். முடிஞ்சா, ஒரு மூணு மணி சுமாருக்கு நீங்க அரும்பாக்கம் வர வேண்டியிருக்கும்.''

''எதுக்கு?''

''வேலைக்காக அந்த ஃபாக்டரி ஜி.எம்மை பார்க்கத்தான்...''

அவன் பெரிசாகத் தலையாட்டுகிறான்.

அவள், அவன் கையில் நூறு ரூபாய்த் தாளைத் திணித்துவிட்டு, அரும்பாக்கத்துக்கு பஸ்ஸில் பறக்கிறாள்.

பஸ் ஜன்னல் வழியே - பிரபாகரன் மசமசவென நகர்வது தெரிகிறது.

சட். என்ன மனுஷன்.

இவன் யார்? ஏழெட்டு மாசங்களுக்கு முன்னால் இவனுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? இவனுக்காக வேலை தேடி, அதிகம் பழக்கமில்லாத ஒரு மனிதர் முன், நான் ஏன் என் உடம்பைக் குறுக்கிக் கொண்டு நிற்க வேண்டும்...



அரும்பாக்கத்தில் இறங்கியவள், அருகேயிருந்த கடையிலிருந்து மாமாவுக்கு போன் செய்ய,

''மத்தியானத்துக்கு மேல வந்துடறேன் மாமா...''

''அடடா, நீ இருந்தாத்தான் நான் பம்பாய் சேட்டோட பேச்சு வார்த்தையே நடத்த முடியும் இந்து...''

''அதான். மத்தியானம் வந்துடறேனே...''

''உனக்கு அரை நாள் தானேன்னு தோணறது. எனக்கு அரை லகரம் போச்சு.''

''ப்ளீஸ் மாமா.''

''சரி, சரி...''

அவர் அரை மனசாய்ச் சொல்ல, அவள் ரிஸீவரை வைத்துவிட்டு, ரூபாயைக் கொடுத்துவிட்டு வேகு வேகென்று வெய்யிலில் நடக்க...

பின்னால் கார் ஹார்ன் ஒலி... காதைத் துளைக்கும்படியாக.

அவள் சட்டெனப் பாய்ந்து நடைபாதை மீது ஏறியபடி திரும்பிப் பார்க்கிறாள்...

வெள்ளைநிற அம்பாஸிடரில் ரவி... அவனருகில் ஃபாரின் பர்ஃபியூம் மணக்க மணக்க அவன் மனைவி... ஜன்னல் வழியே தலையை நீட்டியபடி நாலு வயசு மகள்.

அவள் நடையை எட்டிப் போடுகிறாள். வலது கை கழுத்தில் கிடக்கும் கவரிங் சங்கிலியை ஒரு முறை தன்னிச்சையாய் ஸ்பரிசிக்கிறது.

'அவன் அடையாளம் கண்டு கொண்டானோ...' இன்னொரு முறை திரும்பிப் பார்க்கப் பரபரத்த மன

சுக்குக் கடிவாளம் போட்டு — எதிரே உயரத்தில் தெரிந்த ஆரஞ்சு வர்ணப் பழரச பாட்டிலையே வெறித்தபடி நடக்கிறாள்...

தொழிற்சாலையின் மேல் மாடியில் இரண்டு ஆள் உயரத்துக்குக் கம்பீரமாய் சிமெண்டில் அமைக்கப் பட்ட பழரசப் பாட்டில்...

'இது நிறைய கிரஷ் இருந்தா வெய்யிலுக்கு எத்தனை இதமா இருக்கும்...'

இல்லாத ஒன்றை இருப்பது போலக் கற்பனை செய்து பார்த்தவள், விடுவிடுவென்று தொழிற் சாலைக்குள் நுழைகிறாள்.

## 8

எத்தனை எதிர்பார்ப்புடன் பிரபாகருக்கு வேலை தேடிச் சென்றாள் அவள்! ஒரு முறை, இரு முறை இல்லை, மூன்று முறை அந்த ஜெனரல் மானேஜர், இந்தப் பெரிய மனிதனைச் சந்திக்க, தன் வேலைகளை யெல்லாம் ஒதுக்கி வைத்துக் காத்திருந்தார்...

எல்லாம் யாருக்காக? இதோ, வியர்வை வெள்ள மும், கண்ணீர் வற்றிய கண்களுமாய் வெய்யிலில் ஓடி வரும் இந்தப் பெண்ணுக்காக... இவள் மீது ஏற்பட்ட பச்சாதாபத்துக்காக...

ஆனால் பிரபாகர்...



முதல் தடவை இந்து கொடுத்த நூறு ரூபாயில் ஐம்பது ரூபாயை லேடி டாக்டருக்குக் கொடுத்துவிட்டு நர்ஸிங்ஹோமிலிருந்து அப்படியே அருகிலிருந்த தியேட் டருக்குப் பவித்ராவையும், சங்கரியையும் அழைத்துக் கொண்டு போய் விட்டான்.

''உங்க 'பிரதர் இன்லா'வை இன்னிக்கு மத்யானம் ரெண்டு மணிக்கே வரச் சொல்லுங்கோ.''

ஜி.எம். சொன்னதும் அளப்பரிய சந்தோஷத்துடன் தன் வீட்டுக்கு அடுத்த வீட்டிலிருப்பவளுக்குப் போன் செய்தாள் இந்து.

''என்னம்மா?'' — கிழவி செல்லம்மாதான் பேசி னாள்.

''பாட்டி, உங்க பேத்தி புருஷன் இருக்காரா?''

''பவித்ராவையும், சங்கரியையும் அழைச்சிட்டு நர்ஸிங்ஹோமுக்குப் போனவன் இன்னும் வரல் லையே?''

''எப்ப போனார்?''

''நீ அந்தண்டை போனதுமே கிளம்பிவிட்டாங் களே.''

''அவரை ஒரு வேலைக்காக அரும்பாக்கத்துக்கு வரச் சொல்லியிருந்தேன் பாட்டி. வீட்டுக்கு வந்த வுடனே இந்த ஃபாக்டரிக்குக் கொஞ்சம் வரச் சொல் லுங்களேன்...''

''சரி குழந்தே...''

அவள் மாலை மூன்று மணிவரையில் அவனுக்காக அந்தத் தொழிற்சாலை வாசலிலேயே காத்திருந்தாள்.

நடுநடுவே மாமாவைச் சமாதானப்படுத்தும் வகையில் போன் வேறு.

அவன் வராததால் மறுபடியும் அந்த ஜி.எம்.மின் எதிரில் கைகளைப் பிசைந்தபடி நின்றாள் இந்து.

"ஒய்ஃபை நர்ஸிங் ஹோமுக்கு அழைச்சிட்டுப் போனாராம். இன்னும் வரலையாம்..."

"ஓ. கே... பரவாயில்லே. நீங்க அவரை நாளை மறுநாள் மூணு மணிக்கு என்னை வந்து பார்க்கச் சொல்லுங்கோ."

"தாங்க் யூ சார்..."

அவள் அங்கிருந்து கிளம்பி, நேரே தன் ஆபீசுக்குச் சென்றாள். மாமாவின் முகத்தில் என்றுமில்லாத கடுப்பு.

"இப்ப வா. அந்த சேட் அப்பவே கிளம்பிப் போயிட்டான். மொத்தமா மூணு லட்சம் லாஸ்... வர வர உனக்கு வேலையில அக்கறையே போயிட்டுது."

"ஸாரி மாமா. வேலையில அக்கறை இருக்கு. 'இந்த' வேலைதான் அலுத்துப் போச்சு. என்னாலே முடியல்லே மாமா. அடிக்கடி கண்ணை இருட்டிட்டு வர்றது..."

"அப்ப ஏன் வேலையில இருக்கே? ரிஸைன் பண்ணி தொலைக்க வேண்டியதுதானே? வாங்கின கடனை மொத்தமா அடைச்சுட்டு இந்த வேலைக்கே தலை முழுக வேண்டியதுதானே. வெளியில போய்ப் பாரு. இந்த வேலைக்கு எத்தனை பேர் க்யூவுல நிக்கறாங்கன்னு தெரியும்."



அவர் கத்தினார். அசிங்கமாய் உதடும் முகமும் கோண இரைந்தார். வாயில் வராத வார்த்தைகளில் எல்லாம் இவளை அர்ச்சித்தார். அந்த மாதிரி ஒரு பெரிய மனிதரின் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகள் இல்லை அவை.

"என்னடி முழிக்கறே? உன்னை டைப் அடிக்கச் சொன்னேனா, ஆபீஸ் கணக்கு வழக்கைப் பார்க்கச் சொன்னேனா? ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் மெத்தையில் படுக்கக் கசக்கறதா?"

"கசக்கலை மாமா. வலிக்கிறது..."

"பேசாதே. '——'யா வேலை செய்யறவங்களுக்குப் பேச்சு என்ன? 'போறேன், போறே'ன்னு பயங் காட்டறியா? போயேன். வெளியில போனா ரெண்டே நாள்லே நாறிப் போயிடுவே. எந்த ஆபீஸ்லே உனக்கு வேலை தர்றான்னு நானும் பார்க்கறேன். எக்ஸ்பீரியன்ஸ் என்னன்னு கேட்பான். சொல்லு ஏழு வருஷ எக்ஸ்பீரியன்ஸ் இதுலதான்னு சொல்லு. வேலை கொடுப்பான்."

"எனக்கு இனிமே வேலையே வேண்டாம் மாமா. ஒரு ரிக்ஷாக்காரனைப் பார்த்தாவது தாலி கட்டச் சொல்லுவேன்."

இதைக் கேட்டதும் அவர் ஆத்திரத்துடன், இவள் முகத்திலேயே காறித் துப்பினார்.

"ரிக்ஷாக்காரன் கூட '—'யாப் போனவளைக் கட்ட மாட்டான்டீ. நீ அப்படிப் போனே, நான் பார்த்துட்டு சும்மா இருப்பேன்னா நினைச்சே? முதல்லே—உங்க அப்பன்கிட்ட உன்னைப் பத்திச் சொல்லிட்டுத்தான் மறுவேலை."

''என்னைப்பத்திச் சொல்றப்ப— உங்க சொருபமும் வெளியில வரும் மாமா.''

''மிரட்டறியா? நான் ஆம்பளைடி. என்னைப்பத்தி நீ சொன்னா எவன் நம்புவான்? அதையும்தான் பாரேன்.''

அவள் மௌனமாய் நின்றாள். மாமாவின் கோபம் தணியும் மட்டும் ஜடமாய் நின்றாள்.

பாவம். இந்த மாமாவுக்குமே, தனது ஆத்திரத்தைக் கொட்ட, தகுதியான வடிகால் இவள்தான். பெண்டாட்டியிடம் கூடப் பேசமுடியாத வார்த்தைகளையெல்லாம் - இவளிடம்தான் கொட்ட முடியும்.

அந்தக் கணமே இவளை நீக்கிவிட வேண்டுமெனச் சபேசனும், விலகிவிட வேண்டுமென இவளும் திடமான முடிவுக்கு வந்தாலும், அடுத்து வந்த போன்கால் இருவரையுமே மாற்றிவிட்டது.

''இந்தா. கல்கத்தாவுலேருந்து சௌத்ரி வரானாம். ஆர்டர் எடுக்கணும். கூடவே நீ இருக்கியான்னு கேட்கறான்.''

''எப்போ வரார்?''

''நாளை ஃப்ளைட்ல.''

''நான் சீக்கிரமாவே ஆபீஸ் வந்துடறேன்.''

''வெரிகுட்.''

''மாமா...''

''என்ன?''

''எனக்கு ஒரு மூவாயிரம் வேணும். பவித்ராவோட வளைகாப்பு, சீமந்தச் செலவுக்கு. பிரசவத்தை

6 - FEB 2001



வேற அம்மா சிவகாமி நர்ஸிங்ஹோம்லேதான் வச்சுக்கணும்கறா...''

''அவ ஒரு அசடு. சரி. நீ ரெண்டே நாள்லே சௌத்ரி பிஸினஸை முடிச்சுக் கொடு. உனக்கு ஆயிரம் ரூபா ஊக்க போனஸ். ரெண்டாயிரம் லோன் ஸாங்ஷன் பண்றேன்.''

அவர் சுவரைப் பார்த்தபடி பேச, அவள் விருட்டெனக் கிளம்பி வெளியே வந்தாள்.

அன்று மாலை ஐந்து மணிக்கே அவள் வீடு திரும்பிவிட்டாள். ஏழு மணிக்குப் பிரபாகரன் தன் பெண்டாட்டி, மாமியார் சகிதம் உள்ளே நுழைந்தான்.

இந்துவைக் கண்டதும் கால்கள் பின்னத் தொடங்கிவிட்டது அவனுக்கு. பவித்ராதான் புருஷனைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அவனுக்குக் கவசம் போல முன்வந்து நின்றாள்.

''எங்கே போயிட்டு வராப்பலே?''

''ஏன்? சினிமாவுக்கு.''

இந்து - எல்லா ஏமாற்றங்களையும் சேர்த்து வைத்து, மாமாவின் கேவலமான பேச்சுக்களுக்கெல்லாம் தலைகுனிந்து இப்பொழுது 'படார்' என்று வெடித்தாள்.

''எழவெடுத்த சினிமாவுக்கு அம்மாவும் பொண்ணுமா போய்த் தொலைக்க வேண்டியதுதானே? இந்த மனுஷன்கிட்ட எத்தனை தடவை படிச்சுப் படிச்சு சொன்னேன்? எல்லாத்துக்கும் பூம்பூம் மாடு மாதிரி தலையாட்டிட்டு...''

"ஏய், வார்த்தையை அளந்து பேசு. அவர் நம்ம வீட்டு மாப்பிள்ளை..."

சங்கரி மகளை அடக்குகிறாள். இந்து முகம் சிவக்க அவளைப் பார்க்கிறாள்...

"என்னம்மா சொல்லிட்டேன் இப்ப? அவர்தான் தியேட்டரைப் பார்த்து வாயைப் பொளந்து கொண்டு நின்னார்னா - நீ சொல்ல வேண்டாம்? கையிலிருந்த நூறு ருபாய்லே, டாக்டர் சிவகாமிக்குக் கன்ஸல்டிங் பீஸ் அம்பது ருபாய். மிச்ச ருபாய் எங்கே?"

"சரிதாண்டி ஆவேசம் வந்தவ மாதிரி கத்தாதே. நூறு ருபாய்லே அஞ்சு ருபா மிச்சம் இருக்கு. பவித்ரா தான் அந்தச் சினிமா பார்க்கணும்னு ஆசைப்பட்டாள். மாசம் ஆக ஆக, தியேட்டர்லே மூணு மணி நேரம் உட்கார்ந்து படம் பார்க்க முடியுமா? பிள்ளைத் தாச்சிப் பொண்ணு ஆசைப்படறாளேன்னு நான்தான் மாப்பிள்ளைய டிக்கட் வாங்கச் சொன்னேன். அவர் கூடச் சொன்னார், உங்க பொண்ணு திட்டுவான்னு..."

சங்கரி நீட்டி முழக்க, பவித்ரா கனல் பறக்கத் தங்கையைப் பார்த்தாள்.

"இவ என்ன என் புருஷனைத் திட்டறது? இந்தாடி. சும்மா ஒண்ணும் நீ தரவேண்டாம். அஞ்சு ருபா பணத்துக்கும் கணக்கு வச்சுக்கோ. அவர் வேலைக்குப் போகலைன்னா போறது. குழந்தை பொறந்த மூணாம் மாசத்துலேருந்து நான் வேலைக்குப் போறேன். ஏன், உனக்கு வேலை போட்டுக் கொடுத்த சபேசன் மாமா, எனக்கு ஒரு வேலை போட்டுத் தர மாட்டாரா என்ன... இல்லே, எனக்குத்தான் நீ செய்யற



வேலையைச் செய்யத் தெரியாதா? உன்னைவிட நல்லாவே செய்வேன்டீ..."

"நீயா... நீயா... வேலைக்குப் போன ரெண்டாம் நிமிஷமே திரும்பி வந்துடுவே..."

இந்து அவளிடம் எரிந்து விழ, அவள் மறுபடியும் அழ... அத்தனை நேரம்வரையில் சகித்துக் கொண்டிருந்த சுவாமிநாதன் இந்துவின் கையைப் பிடித்து ஓரமாய்த் தள்ளுகிறார்.

"இந்தா, கல்யாணத்துக்கு இருக்கற பொண்ணுக்கு இத்தனை வாய் கூடாது. ஆயிரம் இருந்தாலும் அவர் நம்ம வீட்டு மாப்பிள்ளை..."

"இனிமே இவ எனக்காக ஒரு பைசா செலவழிக்கக் கூடாதுப்பா, நீங்க மாமாகிட்ட சொல்லி, அஞ்சாயிரமோ, பத்தாயிரமோ கடன் வாங்குங்கோ. மெதுவா திருப்பிக்கலாம். இவ சம்பாத்தியத்துல எனக்கு வளைகாப்பு நடந்தா எதுவுமே உருப்படாது."

பவித்ரா அப்பாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழ, இந்து அந்த இடத்திலிருந்து விருட்டென எழுந்து, பக்கத்து அறைக்குள் சுருட்டி வைக்கப்பட்டிருந்த மெத்தையின் மீது சுருண்டு படுத்தாள்.

வெளியே வெகுநேரம் வரையில் பேச்சுத் தொடர்ந்தது. இந்து அங்கு இல்லை என்கிற தைரியத்தில் பிரபாகர் தன் தொண்டையைக் கனைத்தபடி பேசத் தொடங்கினான்.

"இதையெல்லாம் கேட்டுட்டு நான் இங்கேயே உட்கார்ந்திருக்கணும்னு ஒண்ணும் அவசியமில்லே மாமா. ஒரொரு சமயத்துல, சொல்லாமல் கொள்

ளாமல் சவூதி அரேபியா அங்கே இங்கேன்னு வேலை தேடிட்டுப் போயிடலாமோன்னு கூடத் தோணறது. பவித்ராவோட நிலைமைய நினைச்சாத்தான் கஷ்டமாயிருக்கு. அவ கொஞ்சம் திட மனசா இருந்தா, அஞ்சு வருஷம் அரபி கன்ட்ரியில இருந்து..."

"ஐய்யோ! அது மாதிரி எதுவும் செஞ்சுடாதீங்க. நீங்களும் இல்லாம, என்னால இந்த ராட்சசி கூட இருக்க முடியாது இப்பவே நான் ஒன்டி ஆளா இருந்தா கிணத்துல விழுந்து பிராணனை விட்டிருப்பேன்..."

இவர்கள் திரும்பத் திரும்ப இதையே பேசினார்கள். இடையிடையே கமலா வேறு பேச்சில் புகுந்து கொண்டாள்.

"அம்மாடி! என்ன கத்து கத்தறா! நீ அவளுக்கு ரொம்பத்தான் செல்லம் கொடுத்துட்டேம்மா..."

"வேற ஒண்ணுமில்லே. அவளுக்கு வர்ற வரனெல்லாம் தட்டிப் போறதேங்கற எரிச்சல். வயசாக ஆக, நாம இப்படியே கல்யாணமாகாமலேயே நின்னுடுவோமேங்கற கவலை. இன்னும் பாருங்கோ, நாளாக ஆக, 'அவள் ஒரு தொடர்கதை' சுஜாதா மாதிரி கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணப் போறா." பிரபாகரின் திட்டவட்டமான பேச்சு. இத்தனை தீர்க்கமாய் ஆலோசிப்பவன், உழைக்க அஞ்சுகிறானே!

இதற்குப் பின் வளைகாப்பு, சீமந்தம் வரையில் இந்துஜாவின் கண்ணிலேயே படவில்லை அவன்.

சீமந்தம் முடிந்த கையோடு அவனே மறுபடியும் அவளெதிரில் வந்து நின்றான்.



"நாளைக்கு வேணுமானா - அந்த அரும்பாக்கம் ஃபாக்டரிக்குப் போயிட்டு வரேன்..."

"வேண்டாம். அதெல்லாம் உங்களுக்குச் சரிப்பட்டு வராது."

"இல்லே... போறேன்."

இந்துஜா மறுநாள் ஜெனரல் மானேஜரைப் பார்க்க ஏற்பாடு செய்ய, அவரும் ஒத்துக் கொள்ள, அன்று காலையே தலையைச் சொறிந்து கொண்டு வந்து நிற்கிறான் அவன்.

"பாக்யராஜ் - பூர்ணிமா கல்யாணம் திடீர்னு ஃபிக்ஸ் ஆயிட்டுது..."

"அதுக்கு நீங்க என்ன செய்யப் போறீங்க?"

"நல்லாயிருக்கே! மூணு விதமா இன்விடேஷன் பிரிண்ட் பண்ணப் போறாங்க. ரசிகர்கள் சார்புல வரவேற்பு... அது முடிஞ்சதும் ஏவி.எம் லே இன்னொரு வரவேற்பு. எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கு. பாக்யராஜைப் பேட்டி எடுக்கணும். பூர்ணிமாவைப் பேட்டி எடுக்கணும்..."

"அதெல்லாம் முன்னாடியே நிறையப் பேர் எடுத்துட்டாங்க. இன்னிக்குக் கூட ஒரு பத்திரிகையிலே வந்திருக்கு..."

"நான் இவங்கள்லேருந்து மாறுபட்டவன். இவங்களை மத்த ரிப்போர்ட்டர்ஸ் பேட்டி எடுக்கிற அதே நேரத்துல, நான் இவங்க கல்யாணத்துக்கு மந்திரம் சொல்லி நடத்தி வைக்கிற புரோகிதரைப் பேட்டி எடுப்பேன். அவர் ஆங்கிள்லேருந்து பார்த்தா புதுசா ஏதாவது விஷயம் கிடைக்கும்... அதனால ஒரு மாசம்

வெயிட் பண்ணு. இந்து. இந்த அமர்க்களம் எல்லாம் ஓயட்டும். அதுக்கு அப்புறம் நானே அந்த ஜி. எம்மை பார்த்து, காலிலே விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கறேன்..."

இந்துஜா ஒன்றுமே சொல்லவில்லை.

இதற்குப்பின் பவித்ராவின் பிரசவம்.

"வேலையில சேர்ந்த உடனே லீவு கொடுப் பாரா?"

"நீங்க இருந்து என்ன செய்யணும்?"

"என்ன இந்து இப்படிக் கேட்டுட்டே? ஹாஸ்பிட லுக்கு வேளா வேளைக்கு ஆகாரம் எடுத்துக்கொண்டு ஓட, என்னை விட்டால் இந்த வீட்டுல வேற யாரு இருக்கா?"

பவித்ரா - சுகபோகம் மிகுந்த அந்த நர்ஸிங் ஹோமில் பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுக்க...

"ரொம்பச் சிரமப்பட்டுட்டா குழந்தை. கடைசி யில ஆயுதம் போட்டுத்தான் எடுத்தா... இந்தண்டை அந்தண்டை அசையப்படாதுன்னு டாக்டர் சொல்லி யிருக்கா. ஆறு மாசத்துக்கு வெயிட்டே தூக்கக் கூடாது. தையல்விட்டுப் போச்சுன்னா கஷ்டம்..."

சங்கரி, இந்துவிடம் கற்கண்டுத் தட்டை நீட்டிய படி, பொதுப்படையாகச் சொன்ன வார்த்தைகள்...

அன்றுதான்—அவள் பவித்ராவையும் குழந்தையை யும் பார்க்க நர்ஸிங் ஹோமிற்குப் போகிறாள்.

குழந்தையை விடவும் அந்த ஆஸ்பத்திரியின் பளிங்குச் சுவரும், ஃபோம் மெத்தையும் அவளைக் கவர்ந்ததில் வியப்பில்லை.



இது மாதிரியான வசதிகள் இருந்தால் பிள்ளை பெறக் கசக்கிறதா என்ன?

இந்து, பவித்ரா படுத்திருந்த மெத்தையைச் சுட்டு விரலால் அமுக்கிப் பார்க்கிறாள்.

அவஸ்தைப்பட்ட உடம்புக்கு இதெல்லாம் இதத் தைக் கொடுக்கும்...

பவித்ராவும், இதோ தொட்டியில் 'மெத்'தென்று ரோஜாப்பூ போலத் தூங்கும் குழந்தையும் கொடுத்து வைத்தவர்கள்... எது எப்படிப் போனாலும் இவர்கள் வரையில் எல்லாமே வக்கணையாக நடக்கிறது...

சங்கரி, குழந்தையை எடுத்துப் பவித்ராவின் அருகில் கிடத்துகிறாள். மகளுக்கு, குழந்தைக்குப் புரையேறாமல் பால் புகட்டுவது எப்படி என்பதைச் சொல்லிக் கொடுக்கிறாள்.

"அம்மா..."

"என்னடீ கண்ணு..."

"கால் ரெண்டும் ஏன் இப்படித் துணியாத் துவள்றது..."

"பச்சை உடம்பு இல்லையா... அப்படித்தான் இருக்கும். இந்தா, இந்தத் தலைகாணிய வேணுமானா காலுக்கடியிலே வச்சுக்கோ... மெதுவா... கண்டபடி திரும்பாதே..."

இந்து, அம்மாவையும் பவித்ராவையுமே பார்த்துக் கொண்டிருக்கிறாள். விழிகளில் நீர் திரையிடுகிறது.

முதன் முறையாக மாமாவின் துணையுடன், நர்கீத் தத்திப் படுக்கையில் வந்து விழுந்த காட்சி... இன்னமும் மனசுக்குள் அழியாத சித்திரமாய்...

'நான் மட்டும் என்ன பாவம் செஞ்சேன்?'

'என் உடம்பு மட்டும் எப்படி இத்தனை ரண வேதனைகளையும் தாங்கிக் கொண்டு வளைய வர்றது? இதுவும் எங்கம்மா பெற்ற உடம்புதானே? இதுக்கு மட்டும் இவ்வளவு சகிப்புத் தன்மை எப்படி வந்தது?

ஒரு வேளை — எனக்கும் கல்யாணமாகி, இவளைப் போல தலைச்சனைப் பெத்திருந்தா — நானும் இது மாதிரிதான் அலட்டிப்பேனோ...

'இத்தனைக்குப் பிறகு — எனக்குக் கல்யாணமாகி, குழந்தை பொறந்தா அதைத் 'தலைச்சன்'னு எப்படிச் சொல்ல முடியும்? நாலாவதோ, அஞ்சாவதோ... அதுக்குப்போய் வளைகாப்பு, சீமந்தம் இதெல்லாம் கேலிக்கூத்து இல்லையோ?' பார்த்தவளுக்கு - இது போல பத்து, பன்னிரண்டுநாள் நிம்மதியாய் மெத்தையில் கால் நீட்டிப்படுத்துக் கிடப்பதற்காகவாவது கல்யாணமும், குழந்தையும் அவசியம் என்று தோன்றுகிறது.

இவளுக்கெல்லாம் இப்படிப் படுத்தால்தானே ஓய்வு...

இந்த முறை மறுப்பேதும் சொல்லாமல், அவள் சொன்ன ஜி.எம்.மைப் பார்க்கப்போன பிரபாகர், தலையைத் தொங்கப் போட்டபடி திரும்புகிறான்.

"என்ன சொன்னார்?"

"வேலை ஒண்ணும் காலியா இல்லேன்னு சொல்லிட்டார்..."

"அப்படியா சொன்னார்? என்கிட்ட இன்னிக்குப் பதினோரு மணிக்கு வரச் சொல்லுங்கோ, பார்க்கலாம்னாரே..."



இந்து அவனையே பார்க்க, அவன் தொட்டிலில் கிடந்த குழந்தையையே பார்த்துக் கொண்டிருக்கிறான்...

திடீரென அவளுள் ஒரு சந்தேகம்...

"ஆமா. மணி அஞ்சாறது. நீங்க ஃபாக்டரியிலேயிருந்தா வர்றீங்க..."

"உம்..."

"ஜி. எம். மை எப்ப பார்த்திங்க..."

"இப்பத்தான் நாலு மணிக்கு..."

"அவர் உங்களுக்குப் பதினோரு மணிக்கு அப்பாயின்ட்மென்ட் கொடுத்திருந்தார். நான் சொன்னேனே? மறந்து போச்சா?"

"மறக்கலை இந்து... ஃபாக்டரி வாசல்லே ஒரு ஷூட்டிங். புதுமுகம் இளவரசி, பாண்டியன்... என்ன படம், கதை என்னன்னு விசாரிச்சுட்டு உள்ளே போறச்சே மணி நாலாயிட்டுது..."

அவள் அவனையே வெறித்துக் கொண்டிருந்த நேரத்தில் சங்கரி குலுங்கக் குலுங்க ஓடி வருகிறாள்.

"அடியே இந்து, கோபுவை எதிர்வீட்டு மனுஷன் நாலு ஆளை வச்சு அடிச்சுட்டானாம்டீ... கமலா ஒன்னு போன்லே அலர்றா... என்னன்னு தெரியலையே... என் குழந்தை... ஒரு தப்புத் தண்டாவுக்கும் போகாதே..."

இதைக் கேட்டதும் இந்து, பிரபாகரனிடம் மேற்கொண்டு நின்று பேசப் பிடிக்காமல் வீட்டுக்கு ஓடுகிறாள்.

# 9

ஒரு பெண்ணுக்கு - அதுவும் முப்பது வயசு நிரம்பிய திருமணமான நடுத்தர வயசுப் பெண்ணுக்குக் காதல் கடிதம் எழுதுகிற அளவுக்கா இந்தக் கோபுவுக்கு வயசாகிவிட்டது?

அப்படியென்ன வயசாகிறது!

இந்தத் தை வந்தால் பதினேழு முடிந்து பதினெட்டு ஆரம்பமா... அவ்வளவா... இத்தனை நாளும் இந்த வளர்ச்சி ஏன் இந்துஜாவின் கண்களுக்குப் புலம்படவேயில்லை?

பதினேழு வயசுக்கும் - 'ப்ளஸ் ஒன்' வகுப்பிலேயே இருப்பதனால் வயசாகவில்லை என்று அர்த்தமா?

இன்னமும் பாட்டி சங்கரியிடம் சனிக்கிழமை தவறாமல் வெறும் ஜட்டியுடன் உட்கார்ந்து எண்ணெய் தேய்த்துக் கொள்கிறானே. இதை வைத்துக்கொண்டு, இவனைக் குழந்தை என்று நினைத்துக் கொண்டிருப்பது யாருடைய தப்பு?

எத்தனை நாள், இரவில் தாறுமாறாகப் படுத்துத் தூங்கும் இவனுக்கு ஒழுங்காய்ப் போர்த்தி விட்டிருக்கிறாள் இந்துஜா.

எத்தனை இரவுகள், ஒரே கூடத்தில் படுக்க வேறு இடம் கிடைக்காமல் இவன் பக்கத்தில் படுத்து உறங்கியிருக்கிறாள் அவள்.



இருபத்துநாலு மணி நேரத்தில் எட்டுமணி நேரம் போக, மிச்ச நேரமெல்லாம் இவனுடன் உண்டு, உறங்கி வந்ததில் - இவனுடைய வளர்ச்சியே இவள் கண்ணுக்குத் தெரியவில்லையே...

இந்துஜா அவசர அவசரமாக வீட்டுக்குள் நுழைகிறாள். அவளை எதிர் கொண்டழைக்கிறது கமலாவின் ஓலம்.

"பாருடி. கண்மண் தெரியாம அடிச்சுப் போட்டுட்டான் எதிர்வீட்டுக்காரன். ஏதோ விளையாட்டா செஞ்சதைப் பெரிசு பண்ணி."

இந்து, அவளைச் சமாதானப்படுத்தாமல் கோபுவின் எதிரில் போய் நிற்கிறாள்.

நிஜம்தான். இவன் அபரிமிதமாக வளர்ந்துதான் விட்டான். வீட்டிலுள்ள மிகப் பெரிய தேக்குமரக் கட்டில் கொள்ளாமல்...

மேலுதட்டில் அரும்பு கட்டியிருந்த இளரோமமும் கன்னங்களில் வெடித்திருந்த பருக்களும் இன்றுதான் இந்துஜாவின் கண்களை உறுத்துகிறது. குரல் உடைந்து எத்தனையோ நாட்களாகிறது. நாட்களா, வருஷங்களா தெரியவில்லை.

கோபுவின் கீச்சுக் குரல் மெள்ள மெள்ளக் கனமேறியது கூட, அந்த மாற்றம்கூட, சுற்றியிருந்தவர்கள் அறியாத வண்ணம்தான்.

அவளைப் பார்த்ததுமே முகத்தில் சூரிய கிரணங்கள் பட்டாற்போல, கண்களைச் சுருக்கிக் கொள்கிறான் கோபு.

இவள் தலையைக் கண்டதுமே, மறுபடியும் எதிர் வீட்டுக்காரர், கன உரிமையாய் வாசல் கேட்டைத்

திறந்துகொண்டு உள்ளே நுழைகிறார். கையில், இந்தப் பிரகஸ்பதி எழுதிய கடிதம்.

சுவாமிநாதன், வாசற்படியிலேயே வழிமறித்து நின்றபடி, அவரை அப்படியே திருப்பி அனுப்ப முயலுகிறார்.

"அதான் ஒரு கோர்ஸ் எல்லாம் ஆயிட்டுதே. தயவு பண்ணி இதோட விட்டுடுங்க சார். பயல் ரொம்பவும் பயந்து போயிருக்கான்."

"நீங்க நகருங்க சார். நான் உங்க டாட்டரோட பேசணும். பயப்பட்ற பையனாய்யா அவன்? மத்தப் பொம்மனாட்டிகளைக் கதிகலங்க அடிக்கிற பொலிக் காளைய்யா அவன். பயமாம், பயம்."

அவர் திமிறிக்கொண்டு உள்ளே நுழைகிறார். இந்துஜாவின் முன் கடிதத்தை நீட்டியபடி, குதி குதியென்று குதிக்கிறார்.

"லவ் லெட்டர் எழுதியிருக்காம்மா உங்க அக்கா பிள்ளை. அதுவும் யாருக்கு? என் 'ஒய்ப்'புக்கு. எனக்குப் பதினாலு வயசுல ஒரு பொண்ணு இருக்கு- அதுக்கு இவன் எழுதியிருந்தாலும், 'சிறுசு - வயசுக் கோளாறு'ன்னு மன்னிச்சிருப்பேன். என் பெண்டாட்டிக்கு எழுதியிருக்கான். படிச்சுப் பாரு."

இதற்குள் கமலா ஆவேசமாய் இந்துஜாவின் அருகில் வந்து நிற்கிறாள். அழுதழுது கண்ணும் மூக்கும் நெருப்புத் துண்டு மாதிரித் தணதணவென்று ஜொலிக்கிறது.

"ஏதோ குழந்தை விளையாட்டுச் சுபாவம் போகாம என்னமோ எழுதிப் போட்டுட்டான். அதுவும், அவனுக்கு இதுமாதிரியெல்லாம் எழுதத் தெரியவே தெரியாது. கூடச் சேர்ந்திருக்கிற வானரங்கள்தான் இதையெல்லாம் சொல்லிக் கொடுத்திருக்கும். அதான், அந்தப் பிள்ளை உடம்பை பார்ட், பார்ட்டா சழற்றியாச்சே. போறாதா."

"த்சு. நீ சும்மாயிரு கமலா."

இந்துஜா, அவர் கொடுத்த கடிதத்தை வாங்கிப் பார்க்கிறாள். முழுக்கப் படிக்க முடியவில்லை. பக்கம் பக்கமாய் ஆபாச வர்ணனைகள். அதுவும், தன் தாயைப் போன்ற பெண்மணியைப் பார்த்து—

அவள் கண்களை இறுக மூடிக் கொள்கிறாள்.

"பார்த்தியா, இந்தத் தெருவுல நானும் இருபது வருஷமா இருக்கேன். இதுமாதிரி ஒரு அசிங்கம் இப்பத்தான் நடந்திருக்கு நான் கேட்கறேனேன்னு தப்பா நினைச்சுக்க வேண்டாம். நீ தினமும் என் வீட்டு வாசல் வழியாகத்தான் போறே. உங்க அக்கா, இதோ இந்தப் புத்திசாலியைப் பெத்த அம்மா, ஒரு வீடு விடாம நுழைஞ்சு நுழைஞ்சு வம்படிச்கட்டு வர்றா. அதையும்தான் பார்க்கறேன். உங்கள்லே எவ கையையாவது பிடிச்சு இழுக்கணும்னோ, இல்லே - இதுமாதிரி ஒரு ஆபாச லெட்டர் எழுதணும்னோ எனக்குத் தோணிச்சா. தோணாது. எப்படித் தோணும்? நாலு குழந்தைங்க, அம்மா, அப்பா, பெண்டாட்டி இப்படி இத்தனை பேருக்கும் சம்பாதிச்சுப் போட நாயா அலையறேன். ராத்திரி படுத்தா மறு நாளைய செலவுதான் கண் முன்னாடி. அதுதான் நிக்கணும். அடுத்த வீட்டு எதிர்வீட்டுப் பொம்பளை கண்ணுக்குள்ள வந்து நின்னா என்னைப் பெத்தவங்க ஒழுங்கான வழியில சம்பாதிச்சு எனக்கு சோறு போடலையின்னு அர்த்தம்?

புரியுதா. நாய் வித்த காசு குரைக்குமான்னு கேட்பாங்க. குரைக்கும். நிச்சயமா குரைக்கும். இதோ, உங்க வீட்டுப் பையன் லெட்டர்லே குரைச்சிருக்கானே."

அவர் விழிகள் பிதுங்கக் கத்த, சுவாமிநாதன் முகம் சிவக்க, அவர் முன் கையை வீசுகிறார்.

"திஸ் இஸ் டு மச் சார். நீங்க என் பேரனைத் திட்ட வந்துட்டு, என் பெண்ணோட வம்புக்கு வர்றீங்க. உங்க மேல மான நஷ்ட ஈடு கேட்டு சூட் ஃபைல் பண்ணுவேன்."

"செய்யுமேன். முதல்லே அதைச் செய்யும்கறேன். அதைக்கூட எப்படிச் செய்யப் போறீங்க? உங்க பெண் சம்பாதிச்சுத் தர்ற பணத்துலேயிருந்துதானே? அம்மாடி, உன் பேரென்ன? அதுகூட எனக்குத் தெரியாது. ஆனால் பல பெரிய மனுஷா இருக்கற சபையில உன்னைப் பார்த்திருக்கேன்."

"தட் இஸ் ஹர் பிஸினஸ். இவ ஒரு ரிஸப்ஷனிஸ்ட். இவ மாமா கம்பெனியிலே இவதான் சீஃப் இன்சார்ஜ்."

"பேஷா இருக்கட்டும். ஆனா ஒண்ணு சொல்வேன். நீ இப்ப இந்த வீட்டு ஆம்பிளைங்கள உட்கார வச்சுச் சம்பாதிச்சுப் போடறே பாரு, அதுதான் இவனுங்கள இப்படி உருப்படாம அடிக்கறது. நான் வேலைக்குப் போறேன். சம்பாதிக்கிறேன். வீட்டுக்கு வர்றேன். என் பையன் நேரம் கழிச்சு வீட்டுக்கு வந்தால் விசிறிக் கட்டையை எடுத்து வெச்சுக்கிட்டு, ஹால்லே தயாரா இருப்பேன். அவனும் என் கோபத்துக்கு மதிப்புக் கொடுத்து ஒழுங்கா இருக்கான். இதுதான் — இந்த லைஃப்தான் முறை. புரிஞ்சுதா?



வீட்டுல உட்கார்ந்து நாலு வேளை மூக்குப் பிடிக்கத் தின்னுட்டு, படிக்கவும் முடியாம, படுக்கவும் முடியாம, தெருவுல செட்டு செட்டாக் கும்பல் சேர்ந்து, பார்வையை அலையவிட்டா முப்பத்தைஞ்சு இல்லே, அறுபது வயசுக்காரிக்குக்கூட லெட்டர் எழுதத் தோணும். உடம்புல மதர்த்துக் கிடக்கிற திமிர் — அப்படி எழுத வைக்கும். முதல்லே — இவங்களை வேலைக்கு அனுப்பும்மா. வேலை கிடைக்கலையா, ரிக்ஷா ஓட்டட்டும். ஓட்டல்லே பிளேட் கழுவட்டும். சார், உங்களைத்தான். நீங்களே வீட்டுல ஹாய்யா கிடக்கற சமயத்துல, பேரனைப்பத்திச் சொன்னா எதுவும் ஏறாதுதான். வேலை தேடுங்கோ சார். உழைங்கோ. அப்பத்தான் வீட்டுல இருக்கற விடலைகள் மேல அக்கறை வரும். கோபம் வரும். இப்படி, யாரோ சம்பாதிக்கிறா — எப்படியோ குடும்பம் நடக்கறதுன்னு இருந்தீர், உம்ம குடும்பத்து ஆம்பிளைகளே புருஷத்தனமில்லாம— நபும்ஸகர்களா அலையவேண்டி வரும். இத்தனைதான் சொல்லுவேன்."

அவர், வார்த்தைகளைக் கூடமெங்கும் வாரி இறைத்துவிட்டுப் போய்விட்டார்.

இந்துஜா குனிந்த தலையை நிமிர்த்தாமல் உட்கார்ந்திருக்கிறாள்.

கமலா, அதிசயத்திலும் அதிசயமாய்த் தங்கைக்குக் காப்பியைக் கொண்டு வந்து வைக்கிறாள்.

"குடிடி. ஆறிடப் போறது."

"உம்."

"மனுஷனுக்குத் துளிக்கூட அறிவே கிடையாது."

"நீ யாரைச் சொல்றே."

''சித்த முந்தி நடுக்கூடத்துலே நர்த்தனம் ஆடிட்டுப் போனாரே, அவரைத்தான் சொல்றேன்.''

''அவர் சொன்னதிலே என்ன தப்பு அக்கா?''

''என்னடி நீயும் அப்படியே பேசறே? நம்ம வீட்டுக் குழந்தையைப்பத்தி நமக்குத் தெரியாதா? அவனே அழறான். பசங்க எல்லாருமாச் சேர்ந்து, ஏதோ விளையாட்டுத்தனமாச் செஞ்சுட்டோம்னு... அவன் அதுமாதிரியெல்லாம் செய்யக்கூடியவனே இல்லே. குழந்தை.''

''விளையாடறதுக்கு இவனுக்கு வேறே விளையாட்டா இல்லே? ஸ்கூல் படிப்பைக்கூட ஒழுங்கா முடிக்கல்லே. இதெல்லாம் தேவைதானா? அவர் சொன்ன மாதிரி — ஒரு ரூபாய் — ஒத்தை ரூபாய் — இவன் உழைச்சுச் சம்பாதிச்சுக் கொண்டு வரட்டும். முடியறதான்னு பார்க்கறேன். இன்னிக்கு எதிர் வீட்டு அம்மாவுக்கு லவ் லெட்டர் எழுதியிருக்கானே? அந்தப் பேப்பர்கூட, மாமாவோட கணக்குல கடன் சொல்லிட்டு, நான் வாங்கித் தந்த ஒரு குயர் நோட்டு லேர்ந்து கிழிச்சது. நிஜமாவே நாய் விற்ற காசு — குரைக்கும்தான் போல.''

''என்னடி. அவர்தான் ஏதோ உளறிட்டுப் போனார்னா...''

''இல்லேக்கா. மாமா கம்பெனியிலே அவரோட லாபத்துக்காக, நாங்க ஆயிரம் வேஷம்போட வேண்டியிருக்கு. ஆயிரம் பொய் சொல்ல வேண்டியிருக்கு. அப்படிக் கோல்மால் பண்ணிச் சம்பாதிச்ச காசு இல்லே? அதான் இப்படி எல்லாம் உருப்படாமப் போறது.''



அவள் மீண்டும் போய்க் கோபுவின் அருகில் நிற்கிறாள். கமலாவுக்கு உள்ளூரப் பயம்.

''இவ வேற மறுபடியும் எரியற தீயில எண்ணெய ஊத்தறாப்பல, இவனைத் திட்டிவைக்கப் போறாளே.''

அந்தப் பயத்தின் காரணமாய், இந்துஜாவின் கையைப் பிடித்து இழுக்கிறாள்.

''நீ வா. அவன் தூங்கட்டும்.''

இந்துஜா, ஒரு தலையணையை எடுத்துக்கொண்டு, வெளி வராந்தாவுக்கு வருகிறாள்.

அங்கேயே படுத்துக் கண்களை மெல்ல மூடுகிறாள்.

கோபு பிறந்தது அவளுக்கு இன்னமும் பசுமையாய் நினைவில் இருக்கிறது.

''அக்கா, குழந்தையை என்கிட்ட கொடேன்.''

''உனக்குச் சரியா தூக்கத் தெரியாதுடி. கழுத்துல களுக்கு விழுந்துடுத்துன்னா அவஸ்தை.''

''நான் ஜாக்கிரதையாத் தூக்கறேன் அக்கா. ஆசையா இருக்கு. கண்ணைப் பாரு, கறுப்புத் திராட்சை மாதிரி.''

அந்தக் குழந்தையை எத்தனை ஆசையாய்ச் சீராட்டியிருக்கிறாள் அவள்.

இன்றும் அதே இந்துஜாதான். அதே கோபுதான். இருந்தாலும் மனசு, மரவட்டையை மிதித்த மாதிரி சுருங்கிப்போய் விட்டதே.

யார் மேல் தவறு?

வளர்க்கிற பொழுதே பொறுப்புணர்ச்சியையும் சேர்த்து ஊட்டி வளர்க்காத குடும்பத்தினுடையதா?

குடும்பமே பொறுப்பில்லாமல் — 'கண்ட மாத்திரத்தில் கல்யாணக் கோலம்' என்றிருக்கிறதே. இந்த நிலைமைக்கு யார் காரணம்?

அவள் தானோ?

கண்கள்தான் மூடியிருந்ததே தவிர — கூடத்தில் நடக்கும் எல்லாச் சம்பவங்களும் மனசில் பதியாமலில்லை.

இவள் படுத்த அரை மணி நேரத்தில் — சங்கரி ஆஸ்பத்திரியிலிருந்து ஓடி வந்தாள்.

தாயைக் கண்டதும் கமலா, பெரிசாய் அழுதபடி ஓடிப் போய் அவளைக் கட்டிக் கொள்கிறாள்.

''என்னடி ஆச்சு?''

''......''

''எதிர்த்த வீட்டுக்காரனுக்கே, நம்ம வீட்டுக் குழந்தைகளைக் கண்டா எப்பவுமே ஆகாது. 'தடிப் பசங்க, தடிப்பசங்க'ன்னு என் காதுபடவே நாலஞ்சு தடவை கத்தியிருக்கான். குழந்தைகள் பார்க்கத்தான் வாட்டசாட்டமா வளர்ந்த மனுஷன் மாதிரி இருக்கே தவிர— மனசளவுல இன்னமும் குழந்தைகள்தான்கறது அந்த முட்டாளுக்கு எப்படித் தெரியும்?''

''ஐயோ, என் தங்கத்தை நொறுக்கியிருக்கானே பாவி. அவன் கையைக் கருநாகம் தீண்ட.''

''பொறாமைடி. வேற என்ன? கோபு தெருவுல நடந்தா ராஜா மாதிரி இருக்கு இல்லியோ? அவன்



பிள்ளையும் இருக்கே மூஞ்சூறு மாதிரி, ஆன வயசே தெரியாம. அந்தப் பொறாமை. நாளைக்கே தெரு மண்ணை எடுத்துட்டு வந்து சுத்திப் போடணும். ஆமா, இந்துஜா எங்கே? அவள் வேற விஷயத்தைக் கேட்டுட்டு 'தைதை'ன்னு குதிப்பாளே? நமக்கு நம்ம வீட்டுச் சரக்கே சரியில்லே. அப்புறம்னா மத்தவங்களைச் சொல்ல முடியும்.''

இந்து நீண்டப் பெருமூச்சாக விடுகிறாள்.

அம்மா அடுத்தபடியாக என்ன செய்வாள் என்பது அவளுக்குத் தெரியும்.

பேரனின் பக்கத்தில் போய் உட்கார்ந்து கன்னத்தை, கழுத்தைத் தடவி அழுவாள்; எதிர் வீட்டுக்காரனுக்கு விரல்களை முறித்துச் சாபம் கொடுப்பாள். அவன் பெண்டாட்டியின் யோக்கியதை என்னவென்று தெரியாதா என நீட்டி முழக்குவாள்; முடிந்தால் — அவர்களின் பதினாலு வயசுப் பெண் — தெருவில் நடக்கும்பொழுது எப்படியெல்லாம் தளுக்கி மினுக்குகிறது என்பதைக்கூடச் சொல்லிக் காட்டுவாள்.

எதை, யார் முன்னால் சொல்ல வேண்டும் என்கிற விவஸ்தையெல்லாம் கிடையாது.

கல்யாணத்துக்கு ஒரு பெண் காத்திருக்கிற ஸ்மரணையே இல்லாமல், வாழ வேண்டிய வயசில் ஒருத்தி கைம்பெண்ணாகி வீட்டோடு இருக்கிற சிந்தனையே இல்லாமல் - பவித்ராவின் கல்யாணத்தன்று இரவு, மகளைச் சாந்தி முகூர்த்த அறைக்குள் அனுப்பி விட்டு, கல்யாணச் சத்திரக் கூடத்தில், ஐந்தாறு கிழவிகளுடன் படுத்தவள் - விடிய விடிய அவரவர்களின்

சாந்திக் கல்யாணத்தைப் பற்றியெல்லாம் இரைந்து விமரிசித்துக் கொண்டிருந்தவள்தானே?

''அம்மா, தூங்கேன். நேரமாச்சு.''

''இருடி. இவ வேறே தொண தொணன்னு. எங்க அம்மாஞ்சி ஒருத்தன் இருந்தான். அவன் கல்யாணத்தின் போது என்ன ஆச்சு தெரியுமோ? சாந்தி கல்யாணருமை அழகா ஜோடனை பண்ணிட்டு, சிறுசுகள் பார்த்துடக் கூடாதேன்னு பூட்டி வச்சுட்டு வந்தாள் அவனோட அக்கா. சாவியை எங்கேயோ கை மறதியா வச்சுட்டு - ராத்திரி முழுக்கத் தேடித் தேடி, விடிகாலம்பற நாலு மணிக்குத்தான் சாவி கிடைச்சுது''

''இதைச் சொல்றியே. எங்க ரெண்டு பேருக்கும் சாந்திக் கல்யாணம்னா என்னன்னே தெரியாது. அதெல்லாம் அந்தக் காலம். ஒருத்தரும் சொல்லித் தரவும் இல்லே. ஒண்ணும் தெரியாமலேயே ஒரு வருஷம் வாழ்ந்திருக்கோம்.''

''அடிப் பாவி.''

அன்று இந்துஜா, தலையணையில் முகத்தை அழுந்தப் புதைத்துக் கொண்டாள். கமலா, காரணமில்லாமல் அழுது கொண்டிருந்தாள். காரணம் கேட்டதற்கு - முதல் நாள் ஜானவாசத்தின் போது சாப்பிட்ட ஜீராப் போளி வயிற்றைச் சங்கடப்படுத்துவதாகவும், வயிற்று வலியில் பிராணனே போய்விடும் போல இருப்பதாகவும் சொல்லிக் கொண்டாள்.

வயிற்று வலியில் அரற்றுவது போல, தன் மன எரிச்சலை முணுமுணுப்பிலேயே கொட்டித் தீர்த்தாள்

''சனியன். நாசமாப் போக...''



''என்னடி?''

''பாரேன். ஏதோ உடம்பாவது நேரா இருக்கப்படாதோ. எந்த விதத்துலேயும் எனக்கு அதிர்ஷ்டமே இல்லையே. நானும் பார்த்துட்டேன். நாலு பேரோட சேர்ந்து இலை போட்டுச் சாப்பிட்டா அது கூடத் தெய்வத்துக்குப் பொறுக்காதே. ஆனாலும் இப்படியொரு ஜென்மத்தைக் கடவுள் எனக்குக் கொடுக்க வேண்டாம்.''

இவர்களின் நடுவில் துளியும் சலனமேயில்லாமல் கோபு படுத்திருந்தது.

'சனியன், என்னத்தை எல்லாம் கேட்டானோ...'

இப்பொழுது நினைக்கையில் இந்துஜாவிற்கு வயிற்றைச் சங்கடப்படுத்துகிறது.

பதினேழு வயசுப் பையனுக்கு ஓரளவுக்கு விஷய ஞானம் இருக்கும்தான். இருந்தாலும் அந்தக் கடிதம்...

அப்பப்பா. எத்தனை கொடூரமான, வக்கிரமான பார்வை இந்த வயசுக்குள்.

எப்படி இத்தனை வார்த்தைகளைக் கற்றுக் கொண்டான்? அகராதியில் கூட இல்லையே.

இவனை மிரட்டிப் பயனில்லை. மெதுவாக, நிதானமாக, இதமாக நடந்து கொண்டுதான் இவனது போக்கை மாற்ற வேண்டும்.

இனிமேலும் இவனைச் சின்னப் பையனாக நடத்தக் கூடாது. ஒரு நல்ல சிநேகிதனாக நடத்த வேண்டும். மனசு விட்டுப் பேச வேண்டும். இந்தக் குடும்பமே இவனது எதிர்காலத்தை நம்பித்தான் இருக்கிறது என்று சொல்ல வேண்டும். பவித்ராவின் கணவன் இப்படி வந்த வாய்ப்பையெல்லாம் நழுவ விட்டுவிட்டு வந்து நிற்பதைப் பற்றிச் சொல்ல

வேண்டும். புதுசாய்ப் பிறந்திருக்கும் பெண் ஜீவனின் எதிர்காலத்தைப் பற்றிய தன் கவலையைச் சொல்ல வேண்டும். சீனுவின் படிப்பைப் பற்றிப் பேச வேண்டும். தாத்தாவின் பணம் எப்படியெல்லாம் கரைந்தது என்பதைப் பற்றி அவனுக்குப் புரியும்படி சொல்ல வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக...

இந்தக் குடும்பத்துக்காகவே உழைத்துத் தேய்ந்து கொண்டிருக்கும் தனது நைந்து போன தேகத்தைப் பற்றியும், நொந்து போன இதயத்தைப் பற்றியும் ஓரிரு வார்த்தைகளாவது அவனிடம் சொல்ல வேண்டும்.

இத்தனையையும் சொல்லிய பிறகு - இப்படிப் பட்ட சூழ்நிலையில் பதினேழு வயசு வாலிபனின் பொறுப்பு என்னவென்பதை மிருதுவாகச் சொல்ல வேண்டும்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் அவனது இழி செயலைக் குத்திக் காட்டக்கூடாது என்கிற முடிவுடன் அவள் படுத்திருக்க...

பொழுது அவளைப் பார்த்துக் கைகளைக் கொட்டிச் சிரித்தபடியே விடிகிறது.

கோபு, பட்ட காயங்களைக்கூடப் பொருட்படுத் தாமல், ரணத்துடனேயே கிளம்பி எங்கோ போய் விட்டான்.

ஒரு கடிதம்கூட இல்லை.

எக்கேடோ கெட்டுப் போங்கள் உங்களது வாழ்க்கையில் எனக்கு அக்கறையில்லை என்பதுபோல. எல்லாவற்றையும் ஒரே உதறலாய் உதறித் தள்ளி விட்டு.

# 10

அன்று வீட்டைவிட்டு வெளியேறிய கோபு, ஆறு மாசம் வரையில் வீட்டுப் பக்கம் தலையைக் காட்டவே இல்லை.

கமலாவும் சங்கரியும் அழுத அழுகை கொஞ்ச நஞ்சமில்லை. இந்துஜா இவர்களைச் சமாதானப் படுத்த இயலாமல் தவித்த தவிப்பு... தினசரியில் கொடுத்த விளம்பரங்கள்...

இந்த அமர்க்களத்தில் இந்துஜாவின் திருமண முயற்சிகள் அப்படியே கைவிடப்பட்டன.

ஆறு மாதங்கள் நாய் அலைச்சல். போலீஸ் ஸ்டேஷனுக்கும் கோபுவின் சிநேகிதர்கள் வீட்டுக்கும். ஏன், அரசாங்க மருத்துவமனைச் சவக்கிடங்கையும்கூட விடாமல் அலைந்து விட்டாள்.

எல்லோரையும் ஒரு கலக்குக் கலக்கிவிட்டு, திடீ ரென்று ஒரு நாள் வந்து குதித்தான் கோபு. ஆறு மாதங்களில் எக்கச்சக்க மாற்றம்.

''நான் என் ஃபிரண்ட்ஸோட சேர்ந்து பிஸினஸ் பண்றேன்.''

''என்ன பிஸினஸ்டா?''

''அதையெல்லாம் கேட்காதிங்க. சொல்ல முடியாது. சொன்னாலும் உங்களுக்குப் புரியாது.''

கமலா அவனை உள்ளங்கையில் வைத்துத் தாங் கினாள். இந்துஜாவை, அவனிருந்த பக்கமே போக

விடாமல் கண்குத்திப் பாம்பாகக் கவனித்துக் கொண்டாள்.

"என்ன அக்கா, படிப்புமில்லாம, சரியான உத்தியோகமும் இல்லாம எத்தனை நாள்தான்..."

"இந்தா, சும்மாயிருக்கமாட்டே? அன்னிக்கு இப்படி எல்லாருமா சேர்ந்து கத்திக் கத்தித்தான் அவனை வீட்டைவிட்டு விரட்டியடிச்சீங்க. ஏதோ, இந்த மட்டும் பிள்ளைய உசிரோட பார்த்தேனேன்னு சந்தோஷப்பட்டிட்டிருக்கேன். உனக்கென்ன தெரியும் பிள்ளையோட அருமை?"

என்ன சொல்வாள் இந்துஜா?

கோபு நேரங்கெட்ட நேரத்தில் வீட்டுக்கு வருவதும், நினைத்தபோது ஏழெட்டுச் சிநேகிதர்களை வீட்டுக்கு விருந்துக்காக அழைப்பதும் ஆரம்பத்தில் மறைத்து மறைத்துப் புகை பிடித்தவன் இப்பொழுது தலை கிராப்பை ஒரு முறை சிலுப்பிக்கொண்டு, பெற்றவள், பெரியவர்கள் எதிரிலேயே ஸ்டைலாகப் புகை பிடிப்பதும், வேலை வெட்டியில்லாத பிரபாகரனுடன் நடுக் கூடத்தில் உட்கார்ந்துகொண்டு, தனது பிஸினஸில் ஆயிரம், லட்சம் லாபம் வரும் என்று வாய்ப்பந்தல் போடுவதும், தப்பித் தவறி இந்துஜா ஏதாவது சலிப்புடன் சொல்லிவிட்டால் உடனே வீட்டைவிட்டு வெளியேறி விடுவதாகக் குதிப்பதும், இது கேட்டு கமலா பெரிதாக ஒப்பாரி வைப்பதும்...

"அம்மா, இன்னும் ஒரு வருஷம்... காலண்டரைப் பார்த்துட்டே இரு. உன் பிள்ளை மார்க் ஃபைவ் ஆம்பாஸிடர்லே வந்து இறங்குவான். ஆனா இப்பாதைக்குப் பத்தாயிரம் ரூபா கொஞ்சம் உதைக்



இறது. பிஸினஸ்லே பணத்தைப் பணம்னு பார்க்காமப் போட்டாத்தான் லாபம் பார்க்கலாம்."

கமலா, மாமாவைக் கேட்டு வாங்கித் தரும்படி இந்துஜாவைக் கேட்ட பொழுது மாத்திரம் அவள் இரைந்து கத்தினாள். "வாங்கின கடனை அடைக்கவே என் ஆயுசு போதாது போல இருக்கு. இன்னும் வேற கடனா? பேசாம என்னைக் கொண்டுபோய்த் தெருவுல போட்டு கூறுபோட்டு வித்துக்கோங்க. நான் மாமாகிட்ட இனிமே உங்களுக்காக ஒரு பைசாகூடக் கேட்க மாட்டேன்..."

இதற்கு கமலா சங்கரியிடம் நொடித்துக் கொண்டாள். "உன் பெண்ணுக்கு ஆனாலும் இத்தனை வாய் ஆகாது..."

சொன்னது மாத்திரமல்லாமல் மளமளவெனத் தன் கழுத்தில் கிடந்த இரட்டை வடச் சங்கிலியைக் கழற்றி மகனிடம் கொடுத்தாள்.

புருஷன் தொலைத்தது போக மிஞ்சியிருந்த அற்ப சொற்ப நகைகளையும் மகனின் நாலே மாதங்களில் லட்சக்கணக்கான வருவாய் தரப்போகிற பிஸினஸுக்காகத் தாரை வார்த்தாள்.

'இது உருப்படாது.' இந்துஜா தீர்மானித்து விட்டாள்.

மகனின் செய்கையை வெளியே சொல்லவும் முடியாமல், சொல்லாமல் இருக்கவும் முடியாமல் இளைத்து உருமாறி விட்டாள் கமலா.

சீனுவின் மீதும் நம்பிக்கை வைப்பதற்கில்லை. ஏதோ பள்ளிக்குப் போய் வந்து கொண்டிருக்கிறான்.

அண்ணனின் நடத்தையே அவனுக்குத் தைரியமளிப்பதாய் இந்த வயசிலேயே பிடிவாதமும், எதிர்த்துப் பேசும் சுபாவமும் மேலோங்கி நின்றன.

ஒரு நாளைக்குச் சாப்பாடு சரியாக இல்லாவிட்டால் கூடத் தட்டை விசிறியெறிந்து கத்துவான்.

இந்த நிமிஷம் ஐம்பது ரூபாய் கொடு. பிக்னிக் போகணும்.

புதுச் செருப்பு வேணும். இது பிடிக்கலே.

எனக்குச் சைக்கிள் வேணும். வாங்கித் தர பணம் இல்லேன்னு சொல்லாதே. ஏன், அவன் கேட்டா, சங்கிலியக் கழட்டித் தந்தியோல்லியோ! எனக்கும் எதையாவது கழட்டித் தா.

வீட்டில் எப்பொழுதும் சண்டை இரைச்சல். போதாக் குறைக்கு பவித்ராவின் குழந்தை ரம்யாவையும் சங்கரியே கவனித்துக் கொள்ள வேண்டிய நிலைமை.

பிரபாகர் கையில் ஐம்பது நூறு கிடைக்கும் பொழுதெல்லாம் பவித்ராவையும் அழைத்துக் கொண்டு சினிமாவுக்குக் கிளம்பிவிடுவான்.

குழந்தை மட்டும் வீட்டில்.

“இந்துஜா, சாயந்திரம் ஒரு பால் பவுடர் டின் வாங்கி வாடி.”

“ஏன், பெத்தவர் நேத்து ஊருக்கு உபதேசம் சினிமாவுக்குப் போனாரே, குழந்தைக்குப் பால் பவுடர் வேணும்னு நினைவுபடுத்த வேண்டியதுதானே?”

“சொன்னேன். பால் டின்னே ஸ்டாக் இல்லேன்னு சொல்லிட்டானாம். வேற கடையில கேட்க அவருக்கும் ஒழியலை, பாவம்.”



அம்மா எதற்காக யாருக்காகப் பாவப்படுகிறாள்!

சில சமயங்களில் வெறுப்பு மிஞ்ச, குழந்தை பசியில் கத்தி, பிராணனே போனாலும் தனக்கு ஒன்றும் நஷ்டமில்லை என்பது போல இருக்கத்தான் முயற்சிப்பாள். வேலை முடிந்து வீடு திரும்பும் பொழுது மனசு கேட்காது. கையிலிருக்கும் பணத்தைப் போட்டு, ஒரு பால் டின்னை வாங்கிக் கொண்டுதான் வாசற்படியேறுவாள்.

செல்லம்மா மாத்திரமே இந்தப் பேத்தியின் கூடாகிப் போன தேகத்தைப் பார்த்துப் பெருமூச்செறிவாள்.

“சங்கரி, இந்தப் பொண்ணுக்கு ஒரு வழி தேடணும்னே உனக்குத் தோணலையா?”

“நான் என்னம்மா செய்ய? நேத்து கூட அண்ணா ஒரு வரனைப் பத்திச் சொன்னான். வைரத்தோடு கேட்கிறாங்களாம். அது ஒண்ணுதான் நம்மால் முடியாதுங்கறான்.”

“மத்ததெல்லாம் மாத்திரம் ரெடியா?”

“என்னம்மா இப்படிக் கேட்டுட்டே? அண்ணா இருக்கறப்ப எனக்கென்ன கவலை? பணத்தைப் பத்தியே கவலையில்லே. அண்ணா தந்துடுவான். வரன் கிடைக்கறதுதான் குதிரைக்கொம்பா இருக்கு. வர்றவன் கொஞ்சமாவது நம்ம குடும்ப நிலைமைய அனுசரிச்சு நடக்கறவனா வந்தாத் தேவலை.”

“இன்னும் ஏண்டி, அந்தக் குழந்தையச் சுத்தியே சுமைகளை ஏத்திட்டுப் போறே?”

''எனக்கு மட்டும் என்ன, அவளைச் சிரமப்படுத்திட்டே யிருக்கணும்னு ஆசையா? என்ன செய்ய? அவளுக்கு இன்னும் வேளை வரல்லே.''

சங்கரி துக்கம் தொண்டையை அடைக்கச் சொல்லுவாள். அப்பா சுவாமிநாதனோ மகளின் எதிரில் கல்யாண விஷயங்களைப் பற்றிப் பேசுவதேயில்லை.

ஒரு நாள் சபேசன், வீட்டுக்கு வந்திருந்தபோது அவரிடமே மகளின் கல்யாணப் பொறுப்பையும் ஒப்படைத்து விட்டார்.

''நீதான் பார்த்து அவளுக்கு ஏதாவது செய்யணும். எனக்கு உடம்பு வர வர ரொம்ப மோசமாயிட்டது. தள்ளவே இல்லே. முகூர்த்தத்துக்கு நாள் குறிச்சுட்டு, எனக்குச் சொல்லு. என்னாலே அவளுக்குத் தரக் கூடியது ஆசீர்வாதம் மட்டும்தான்.''

சபேசன் மௌனமாய்த் தலையை அசைத்து வைத்தாரே தவிர, தப்பித் தவறிக்கூட வாய்விட்டு எதுவும் சொல்லவில்லை.

செல்லம்மா ரொம்பவும் நச்சரித்தால் மட்டுமே வெகு நேர யோசனைக்குப் பிறகு பொதுவாய் ஒரு வார்த்தையை உதிர்ப்பார்.

''ஆகட்டும். கல்யாணம்தானே? பேஷா நடத்திடலாம்.''

ஆனால் இவளின் வாழ்க்கையில் இன்னமும் இது போன்ற வைபவமே வரவில்லையே!

இதோ, கண்முன் குழந்தை ரம்யா மூன்றாவது வயதில் அடியெடுத்து வைத்து விட்டாள்.



மாதமொரு தடவையாவது சித்தி இந்துஜாவைப் பெண் பார்க்க எங்கிருந்தோ பிள்ளை வீட்டார் வந்து போகும் பொழுதெல்லாம் மகா ஆச்சரியத்துடன், பெண் பிறவிக்கே உரிய சுவாரஸ்யத்துடன் இவைகளைக் கவனித்து வைத்துக்கொண்டு அவர்கள் போனதும், சற்று முன் நடந்தவைகளையெல்லாம் அப்படியே செய்து காட்டுவாள்.

''ரம்யா, சித்தி எப்படிம்மா நமஸ்காரம் பண்ணினா...''

''எங்கே, அந்த டிரேயை எடுத்துட்டு நடந்து வா பார்க்கலாம்.''

''ஒரு பாட்டுப் பாடு, கேட்கலாம்.''

''அச்சச்சோ! பாட்டுப் பாடலைன்னா அந்த மாப்பிள்ளைப் பையன் இந்தப் பொண்ணு வேண்டாம்னு சொல்லிட்டுப் போயிடுவானே! ஒரேயொரு பாட்டுப் பாடுடி, போதும்.''

''ஆமா, உங்க வீட்டுப் பெண்ணுக்குச் சமைக்கத் தெரியுமோ?''

''எத்தனை ரூபா சம்பாதிக்கறா?''

''இது என்ன இந்தப் பொண்ணுக்கு வெட்கப் படவே தெரிய மாட்டேங்குது...''

''தலையக் குனிஞ்சுக்கோடீ. சித்தி மாதிரியே விறைச்சு விறைச்சுப் பார்க்கிறது பாரு.''

அந்த வீட்டுப் பெண்கள் கல்யாணச் சந்தையில் விட இன்னொரு கன்றுக்குட்டியைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்களே தவிர, வெகு காலமாய்

இந்தச் சந்தையில் நின்று நின்று கால் சலித்து, மூட்டைப் போன மாட்டைப் பற்றிய கவலையே இல்லை.

ஏதோ நாலு பேர், 'இன்னுமா கல்யாணம் ஆகல்லே?' என்று கேட்கிற சமயங்களில் மட்டும் அங்கே யிங்கே அலசி, ஏதாவது ஒரு பையனைக் கொண்டு வந்து நிறுத்துவார்கள். அதில் பாதிக்கு மேல் சங்கரி விடுக்கும் வேண்டுகோளுக்கு முகத்தைச் சுருக்கிக் கொண்டு போய்விடும்.

"அது எப்படி, கல்யாணத்துக்கு அப்புறமும் உங்க பொண் உங்க கூடத் தங்கணும்னா... கேட்கவே நல்லா யில்லையே?"

"ஏதோ கொஞ்ச நாளைக்குத்தான். ரெண்டாவது மாப்பிள்ளை வேலை தேடிட்டு இருக்கார். என் அண்ணாவே அவருக்கு ஒரு வேலை போட்டுத் தரேன்னு சொல்லியிருக்கார். ஆச்சு, அவருக்கு வேலை கிடைச்சிட்டதுன்னா, அவங்க ரெண்டு பேரும் தனியாப் போயிடுவாங்க. பெரிய பொண்ணோட மூத்த பிள்ளை பிஸினஸ் பண்றான். சிறுசுதானே? இன்னும் சூடு பிடிக்கலே. பிஸினஸ் ஸ்டெடியாயிட்டதுன்னா, அவனே ஃபேமிலியப் பார்த்துக்குவான். அதுவரைக்கும் இந்துவும், மாப்பிள்ளையும் எங்களோட இருந்தால் கொஞ்சம் ஒத்தாசையா இருக்கும்."

சங்கரி, வார்த்தைகளைப் பின்னிப் பின்னிப் பேசுவாள். என்னதான் சாமர்த்தியமாகப் பேசினாலும், எதிராளிகள் அத்தனை சுலபத்தில் ஏமாறத் தயாராக இல்லை.

மீதிலெர் மாமியார் வீட்டோடு தங்கத் தயார் என்றாலும் இந்துஜாவுக்குப் பயம் பிடித்துக்



கொள்ளும். ஏனெனில், பிள்ளையோ, பிள்ளையைப் பெற்றவர்களோ சங்கரி கூறும் வசனத்தையே திருப்பிப் போடுபவர்களாக இருப்பார்கள்.

'நான் சொன்னதுக்கெல்லாம் சிரிச்சிட்டே தலையாட்டினார் மாப்பிள்ளைப் பையன். கல்யாணம்னு ஆனதுக்கு அப்புறம் உங்க வீடு வேற, எங்க வீடு வேறயான்னு கூடக் கேட்டார். அப்புறம் என்னை?"

"அது சரி. பையன் எதுல வேலையா இருக்கான்னு சொன்னே?"

"ஒருத்தன் கிட்ட கை கட்டி சேவகம் பண்ற வேலையில்லே"

"அதாவது நம்ம பவித்ரா புருஷன் மாதிரின்னு சொல்லு."

"ச்சீ... இவர் ஏதோ பிஸினஸ் பண்றாராம்."

"அப்ப நம்ம கோபு மாதிரி."

"ஏண்டி இப்படி இடக்காவே பேசறே?"

"பின்னே எப்படிம்மா பேசச் சொல்றே? இத்தனை வயசுக்கு மேல கல்யாணம் பண்ணிட்டு நான் ஹனிமூன் போகப் போறதில்லே. அப்படியே அவன் போகணும்னு சொன்னா, 'இதோ பாருப்பா, எனக்கு ஒரு ரூம்லே படுக்கையும் தலைகாணியும் ரெண்டு வேளைச் சாப்பாடும் ஏற்பாடு பண்ணிட்டு, நீ யார் கூட வேணுமானாலும் போய் ஹனிமூன் கொண்டாடிட்டு வா. நான் கண்டுக்கவே மாட்டேன்'னு சொல்லிடுவேன். எனக்குத் தேவை ஒரு புருஷன். வேலைக்குப் போய்த்தான் சம்பாதிக்கணும்னு இல்லே. பொண்டாட்டியைக் காப்பாத்த வக்கு இருந்தா சரி. நீ இப்ப

சொல்றவனைக் கல்யாணம் பண்ணிட்டா, அவனுக்கு
சேர்த்துத்தான் நான் சம்பாதிக்கப் போடணும். உனக்
கென்ன, பவித்ரா புருஷன் மாதிரி பச்சை மிளகா
வாங்கி வரச் சொன்னா ஓடறதுக்கும், உன்னோட
உட்கார்ந்து சினிமாக் கதை பேசறதுக்கும் இன்னொரு
ஆளு கிடைச்சாத் திருப்திதான். நானில்லே அவதிப்
படப் போறவ?''

சங்கரி மௌனமாய் மகளை வெறித்தபடியே நிற்
பாள்.

ஒரு நாள் இரவு, எல்லாரும் தூங்கி விட்டார்கள்
என்பதை நிச்சயித்துக் கொண்ட பின் செல்லம்மா
பேத்தியின் காதோடு கிசுகிசுத்தாள்.

''ஏண்டிம்மா, நீ யாரையாவது காதலிச்சுக் கல்
யாணம் பண்ணிட்டிருக்கக் கூடாதோ?''

''என்ன பாட்டி இது திடீர்னு...''

''சம்பிரதாயமாப் பெண் பார்த்து, மாப்பிள்ளை
கேட்கற அத்தனை சீர்வரிசையையும் கொடுத்து உன்
அம்மாவும் அப்பாவும் கல்யாணம் பண்ணி வைப்பாங்
கன்னு எனக்குத் தோணலை. இவங்க சொல்ற கண்டிஷ
னுக்கும் மாப்பிள்ளைப் பையன் ஒத்துப்பான்னு
தோணலை. இந்த அவஸ்தைக்கு எவனையாவது நீ
காதலிச்சு வச்சிருந்தா ஏதோ ஒரு கோவில்லே வச்சு
தாலியக் கட்டிட்டு, நீ பாட்டுக்குப் புருஷனோட
போயிருக்கலாமே!''

''பாட்டி, நான்...''

''இப்பத்தான் என்ன குடி முழுகிப் போச்சு?
எவனையாவது...''



மேற்கொண்டு எப்படி வார்த்தையை முடிப்பது
என்று புரியாத ஒருவிதக் கூச்சத்தில் அந்தக் கிழ
சரீரம் நடுங்குவது, இருட்டிலும் இந்துஜாவுக்குத்
தெரியாமலில்லை. அவள் உதட்டை அழுந்தக் கடித்து,
தொண்டையில் பந்தாய் இம்சிக்கும் துக்கத்தை
விழுங்கியபடியே பேசினாள்: ''பாட்டீ, காதலிக்கற
துக்கும் ஒரு வயசு, தகுதி எல்லாம் வேணும். இத்தனை
வயசுக்கு மேல எவனைப் பார்த்தாலும் இவன்
நமக்கு எத்தனை சுகத்தைத் தருவான்னு கற்
பனை செஞ்சு பார்க்க முடியல்லே. இவனுக்கு
ஆபீஸ்லே எத்தனை வருஷம் சர்வீஸ் ஆகியிருக்கும்னு
கணக்குப் போட்டுப் பார்க்கவும், இன்னும் ரிடையராக
எத்தனை வருஷம் இருக்குன்னு கணக்குப் போட்டுப்
பார்க்கவும், அப்படியே ரிடையரானா பிஎஃப், கிராஜு
விடி, இன்ஷூரன்ஸ் எல்லாம் சேர்த்து எவ்வளவு
வரும்னு மூளையைக் கசக்கிக்கவும், அப்படியே இவன்
போய் நான் இருக்கும்படியா இருந்தா சாப்பாடு,
துணிக்குக் கவலையில்லாம காலம் தள்ள முடியு
மான்னு யோசிக்கவும்தான் தோணறதே தவிர,
காதலோ, கவர்ச்சியோ இல்லை. ஏன்னா - நான்
மரத்துப் போயிட்டேன் மனசும் உடம்பும் களைச்சுப்
போயிட்டேன்.''

அவள் சொல்லச் சொல்ல, செல்லம்மா பேத்தி
யின் முகத்தைத் தன் முகத்தோடு சேர்த்து வைத்துக்
கொண்டு அழுதாள். ''என் கண்ணா, உனக்கு என்ன
சொல்லி ஆறுதல் சொல்றதுன்னே தெரியல்லேடீ...''

மறுநாள் பொழுது விடியும் பொழுதே அந்த
வீட்டில், குறிப்பாக சங்கரியிடம் ஒருவிதப் பரபரப்பு.

"இந்தூ…"

"என்னம்மா?"

"சாயங்காலம் கொஞ்சம் பர்மிஷன் போட்டுடு…"

"உம்…"

'வர்றப்ப ஒரு கிலோ காப்பி பவுடர் - பீபரி… அப்புறம் வெத்தலை, பாக்கு, பூ, சந்தனம்…"

இந்துஜா தலையை ஆட்டிவிட்டு ஓடுகிறாள்.

மாலையில் பெண் பார்க்க வந்தவன் - தப்பு, வந்தவர் - கிட்டத்தட்ட ஐம்பதை நெருங்கிக் கொண்டிருந்தார்.

சுவாமிநாதன், அவருக்குப் பின்னால் மாப்பிள்ளை பையன் வருகிறானோ என்கிற எதிர்பார்ப்பில் எட்டிப் பார்த்துவிட்டு, முதுகை விசிறிக் கட்டையால் சொறிந்தபடி உள்ளே வந்தார்.

மையத்தில் மாப்பிள்ளையாக அந்தப் பெரியவரே அமர்ந்திருப்பதைக் கண்டதும், முகத்தில் ஓடிய அதிர்ச்சியை ஓர் அசட்டுப் புன்னகையில் மறைத்துக் கொண்டார்.

"வாங்கோ. சாரை எங்கேயோ பார்த்த மாதிரி…"

"எனக்குக் கூட… போட் கிளப், லயன்ஸ் கிளப் இதுக்கு எல்லாம் வருவீங்களா?"

"அதெல்லாம் முந்தி, இப்ப இல்லே."

"டயபடீஸ் சென்டருக்கு வருவீங்களா?"

"ஆ… ஆ… கரெக்ட். அங்கேதான் பார்த்திருக்கேன். இப்ப உங்க பிளட் ஷுகர் என்ன? என்ன மாத்திரை? இன்சுலின் உண்டா?"



அவர் பரஸ்பர சிநேகிதத்துடன் பேச்சைத் துவங்க, சமையலறையில் இருந்த இந்து, டிபன் தட்டில் இருந்த மைசூர்ப்பாகை, ஒருவித திருப்தியுடன் குழந்தை ரம்யாவின் கையில் வைத்தாள்.

"இந்தா. இதான் மிச்சம், இதையும் நீயே சாப்பிடு…"

அவள், காப்பி தம்ளருடன் வெளியே வந்தாள். மாப்பிள்ளை ஸ்தானத்தில் இருக்கும் பெரியவரின் காலில் வணங்கி எழுந்தாள்.

எழுந்தவளின் கண்களில் தெரிந்த யாசிப்பு.

'என்னை ஏற்றுக் கொள்வாயா? எனக்கு நீ மனைவி ஸ்தானத்தைக் கூடத் தர வேண்டாம். இங்கேயிருந்து விடுதலை வாங்கிக் கொடு, போதும். எனக்கு அலுத்துவிட்டது. உழைத்து… உழைத்துச் சலித்து விட்டது. என்னைப் பாரேன்.'

அவள், சடக்கென எழுந்து உள்ளே போனாள்.

கூடத்தின் பேச்சுக் குரல்கள் இவளது வரவினால் சற்று நேரம் ஸ்தம்பித்து, தடைப்பட்டு, மீண்டும் மெள்ள எழுந்தன…

□□□

# நிழல் வாழ்க்கை

## 1

''இது தனி சுகம்தான்...''

மதுரா, தனக்குள் புன்னகைத்துக் கொள்கிறாள்.

விடிகிற ஒவ்வொரு நாளிலும்- இத்தனை அழகும், இனிமையும் இருக்கிறதா என்ன...

இத்தனை வருஷங்களும் இது தெரியாமலே போய் விட்டதே... எப்படி...

அவள், ஜன்னல் திரையை விலக்கிவிட்டு தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவள் - குழந்தையின் சிணுங்கல் கேட்டு, திரும்பிப் பார்க்கிறாள்...

அதே சமயத்தில் கட்டிலில் படுத்திருந்த சூர்யா, குழந்தையை தன் போர்வைக்குள் இழுத்து அணைத்துக் கொள்கிறான். நிமிஷமாய் சிணுங்கல் அடங்குகிறது.



அது என்னமோ குழந்தை தீபிகா - சூர்யாவிடம் ஒட்டிக் கொண்டு விட்டாள்.

தகப்பனிடம், மகள் ஒட்டிக் கொள்வதில் என்ன அதிசயம் என்று கேட்கலாம்.

தகப்பனிடம் - சரி.

தகப்பனில்லாத, தன் அம்மாவின் கணவனிடம், குழந்தையால் நேசம் பாராட்ட முடியுமோ?

தீபிகா பிறந்து, ஆறாம் மாதத்திலிருந்தே- அவளுக்கு அப்பாவாக அறிமுகப்படுத்தப்பட்டவன், இந்த சூர்யாதான்.

உண்மையான அப்பா பிரேம் - இப்பொழுது நரகத்தில் வசித்துக் கொண்டிருப்பானாயிருக்கும்.

இறந்த பின் - சொர்க்கம், நரகம் என்று இரண்டு இடங்கள், மேலுலகில், இந்த ஆத்மாக்களுக்காகக் காத்திருப்பது உண்மையானால்...

பிரேம் கண்டிப்பகக நரகத்தில்தான் இருப்பான்

மதுரா, பழைய நினைவுகளை உதறிக் கொண்டு படுக்கையறை கதவைத் திறந்து, சமையலறைக்குள் நுழைய...

அங்கே, அவளுக்கும் முன்னாலேயே சூர்யாவின் தந்தை ராகவன்... தொள தொளத்த நைட் டிரஸ் ஸூட்டன் - அவர் பாட்டுக்கு சுறுசுறுப்பாய் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்.

''குட்மார்னிங் மருமகளே!''

''குட்மார்னிங்...நீங்க எதுக்காக சிரமப்படணும்... நான்தான் வந்திட்டேனில்லே?''

ராகவன், கோல்கேட் விளம்பர பற்பசை விளம்பரக் கிழவர் மாதிரி சிரிக்கிறார்.

''காபி போடறது ஒரு சிரமமா... இந்த வீட்டுல இருபத்தஞ்சு வருஷமா நான் செய்யற வேலை தானேம்மா இது...''

''இத்தனை வருஷமா செஞ்சது வேற. இப்ப மருமகள் வந்ததுக்கு அப்புறமாவும் செஞ்சீங்கன்னா, என்னோட காபி பிடிக்கலேயின்னு அர்த்தம்...''

''தப்பும்மா. முன்னாடி ஏனோ தானோன்னு ஒரு காபி கலந்து குடிச்சிட்டிருந்தவன், இப்பத்தான் மருமகள் வாயாலே 'வெரிகுட்' வாங்கணுமேன்னு அக்கறையோட காபி கலக்கறேன்...''

மதுரா சிரிக்க, அவர் - தான் கலந்த காபியை மதுராவிடம் கொடுத்துவிட்டு, தனக்கும் ஒரு கப் காபியை எடுத்துக்கொண்டு ஹால் பக்கம் நகருகிறார்.

''வாயேன்... இன்னிக்கு 'ஸன்டே'தானே... மெதுவா சமைக்கலாம், உட்கார்ந்து நிதானமா, காபியை ரசிச்சுக் குடி...அப்புறம் 'ஸன்டே ஸ்பெஷலா' என்ன சமைக்கலாம்னு யோசிக்கலாம்.''

அவர், வாசற்பக்க கதவில் செருகியிருந்த நியூஸ் பேப்பரை எடுக்கும் போதே - கீழ் போர்ஷனிலிருந்து சிவகாமியின் குரல் ஒலிக்கிறது.

''காபியா இது? கழுநீர் தண்ணி மாதிரி... ஏங்க, இத்தனை வருஷக் குடித்தனத்துல ஒரு காபி போடத் துப்பில்லே... நான் மாத்திரம் உடம்பு நேரா இருந்தேன்னா, உங்களை எல்லாம் ஏவக் கூடியவளா நான்? ஐயோ கடவுளே... எனக்கு ஏன் ஆறு குழந்தைங்களையும் படைச்சு வியாதியையும் படைச்சே...''



ராகவன், மதுராவைப் பார்த்துப் புன்னகைக்கிறார்.

''இவ இப்படிக் கேட்கறதுக்குப் பதிலா - 'என்னையே ஏன் படைச்சே'யின்னு கடவுளைக் கேட்கலாம். இவளுக்கு என்ன வியாதின்னு உனக்குத் தெரியுமோ?''

மதுராவுக்கு சிரிப்பு வருகிறது.

சிவகாமிக்கு உடம்பில் ஒரு வியாதியுமில்லை... நல்ல சரீரம். அளந்து பார்க்க இஞ்ச் டேப் போதாது. இவளது கணவன் சிவராமன், ஒல்லியாக ஒட்டடைக் குச்சி மாதிரி... பெரிய கம்பெனி ஒன்றில் நல்ல வேலை. ஆபீசுக்கு இவரை அழைத்துப் போக, கம்பெனி கார் வரும். இவரது ஃபைல்களை உதவியாளர் ஒருவர் சுமந்து வருவார்.

ஆனால் வீட்டில்...

சகலமும் அவர்தான்.

சமையலுக்கு ஆள் வைத்துக் கொள்ள சிவகாமிக்குப் பிடிக்காது.

''நான் பாட்டுக்கு பிடி மாத்திரையைப் போட்டு தண்ணிய குடிச்சிட்டு, மத்தியான நேரத்துல சித்த கண்ணசருவேன். ராத்திரியிலதான் தூக்க மாத்திரை போட்டாலும் தூக்கம் வர மாட்டேங்குதே...அத்தனை அசதியும் சேர்ந்து, நான் பகல்லே கண்ணை மூடற சமயம் பார்த்து, சமையற்காரி - போற போக்குல என் கழுத்தையும் முறிச்சுப் போட்டுட்டு, உடம்புல இருக்கற அஞ்சாறு நகையையும் உருவிட்டுப் போயிட்டான்னா... வேண்டாம் சாமி... ஒரு ரசம் சாதம்

முடியற அன்னிக்கு - செய்யறதுல எனக்கு ஒண்ணும் வஞ்சனை இல்லே. முடியாத அன்னிக்கு ஏதோ உப்பு காரத்தை கூடவோ, குறைச்சலோ போட்டு, அவரே சமைச்சிட்டுப் போகட்டும்...''

இப்படிச் சொல்வாளே தவிர - குழந்தைகளைக் குளிக்க வைத்து, சமைத்து, சாப்பாடு போட்டு, பெண்டாட்டிக்கும் எல்லாவற்றையும் டைனிங் டேபிளில் எடுத்து மூடி வைத்துவிட்டு, குழந்தைகளுக்கும், தனக்குமாக டிபன் டப்பாக்களில் எதையோ திணித்துக் கொண்டு, பெண்டாட்டியின் புடவையைக் கூட துவைத்து உலர்த்திவிட்டு, இவர் ஆபீசுக்கு கிளம்பும் வரையில், ஏதாவது கட்டளையிட்டுக் கொண்டே இருப்பாள் சிவகாமி.

''சாயந்திரம் வர்றச்சே, எனக்கு ஒரு பாட்டில் 'பி காம்ப்ளெக்ஸ்' மாத்திரை வாங்கிட்டு வாங்க...''

''மத்தியானம் முடிஞ்சா, ஒரு தடவை காரை அனுப்புங்களேன். 'லேடீஸ் கிளப்'லே குக்கரி கிளாஸாம். என்னையும் வரச் சொல்லி 'கம்பெல்' பண்ணாளுங்க. எனக்குத் தெரியாத குக்கரியா... என்னவோ - வரலையின்னா, நாளைக்கு என்னை ராங்கிக்காரியின்னு வாய் கூசாமப் பேசுவாளுங்க...''

''மார்க்கெட் வழியா வந்தா, காய்கறியப் பார்த்து வாங்குங்க. நேத்து வாங்கின முட்டைகோஸே இன்னும் மீதி இருக்கு...''

''என்ன இருக்கோ இல்லையோ... பெரிய ஆபீசர் பெண்டாட்டிங்கற பேருதான் இருக்கு. இங்கே வந்து பார்த்தாத்தானே என்னோட நிலைமை தெரியும்... தினமும் பிராட்வேயில ஆரம்பிச்சு, லஸ் வழியா,



மாடவீதி வழியாத்தானே வர்றீங்க.. தினமும் உங்களுக்கு வெத்தலைப் பாக்கு, புகையிலை வாங்கிக்க மறக்கறீங்களா... தேங்காத் துவையலுக்கு தேங்கா இல்லையின்னு ஞாபகம் வச்சுக்கத் தெரியறது. கட்டின பெண்டாட்டிக்கு ஒரு முழம் பூ வாங்கிட்டு வரத் தெரியறதா...''

''ஆறு பிள்ளை பெத்துட்டேனில்லே... வியாதிக்காரி வேற... நான் அலுத்துட்டேன் அவருக்கு... எனக்குத் தெரியும்... எனக்குத் தெரியுங்கறேன்... என் தலையெழுத்து கடைசி மட்டும் சுகப்படாத ஜென்மமாவே போயிட்டேன். உள்ளே என்ன பண்றீங்க... ரசமா? தினமும் புளியக்கரைச்சுக் கொட்டி ஒரு மிளகு ரசம் வைக்கத்தானே உங்களுக்குத் தெரியும்... நாலு தக்காளிய நறுக்கிப் போட்டு, ஒரு கரண்டி பருப்பை வேக விட்டு, தக்காளி ரசமாப் பண்ணுங்க. நாக்கு செத்துப் போச்சு...''

இவளது இத்தனைப் பிடுங்கல்களையும் சகித்தபடி, கார் வந்ததும், இங்கிருந்து, 'கழன்றால் போதும்' என்பது போல 'தடதட'வெனக் கிளம்பி, கார் அருகில் வரும் சிவராமனுக்கு, பாதி நாள் அவரது செகரட்டரி மென்று விழுங்கியபடி ஞாபகப்படுத்த வேண்டும்.

''சார்... பனியனோடக் கிளம்பிட்டீங்க...ஷர்ட்...''

''எல்லாம் எனக்குத் தெரியும் மேன்... நான் கார் வரைக்கும் வந்தேனே தவிர—கார்லே ஏறிட்டேனா...''

''......''

''டிரைவர், கார்லே இருக்கற வெங்கடாஜலபதி படத்துக்கு பூ வையின்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்...''

இப்படி ஒரு எகிறு எகிறிவிட்டு, மாடியை அண்ணாந்து பார்ப்பார். ராகவன் அங்கே நின்றிருந்தால் லிட்டர் லிட்டராக அசடு வழிவார்.

'சம்சாரத்துல இதெல்லாம் சகஜம்தாம்பா... கேரி ஆன்—' என்பது போல ராகவன் சிரிப்பார்.

இப்பொழுது காபியைக் குடிக்கும் போதுகூட ராகவனுக்கும் மதுராவுக்கும், கீழ் வீட்டு சிவகாமியின் கூச்சல் சிரிப்பைத்தான் வரவழைக்கிறது.

ராகவன் சொல்கிறார்.

"இந்த வீடு கட்டி பதினைஞ்சு வருஷமாறது மதுரா. இதுவரைக்கும் அஞ்சாறு குடித்தனக்காரங்களை கீழ் வீடு கண்டிருக்கு. எல்லாமே புருஷனை, பெண்டாட்டி எகிர்ற ரகம்தானே தவிர, புருஷனுக்கு அடங்கிப் போகிற ரகமில்லை... உன்னைத் தவிர..."

மதுரா தலை குனிகிறாள்.

மதுராவை, புருஷன் அடக்கி மட்டும் வைக்கவில்லை. ஆட்டியும் படைத்தான்.

அப்பப்பா... அதெல்லாம் ஒரு காலம்...

இப்பொழுது அந்த நினைப்பே வேண்டாம்.

மதுரா அவற்றை மறக்க முடியாமல் திண்டாடுவது, அவளது முகத்திலேயே தெரிய...

ராகவன், இதைப் புரிந்து கொண்டவராய் பேச்சை வேறு திசையில் திருப்ப முயற்சிக்கிறார்.

"நேத்து நம்ம தீபிகாவையும், சூர்யாவையும் ஒரு ஸ்கெட்ச் எடுத்திருக்கேன். ஒரு ஆயில் பெயிண்டிங்கா பண்ணலாம்னு இருக்கேன்..."



ராகவன் எழுந்து போய், முதல் நாள் தான் வரைந்த பென்சில் ஓவியத்தை மருமகளுக்கு காண்பிக்கிறார்.

வர்ணம் கூடத் தேவையில்லை. பென்சில் ஸ்கெட்சே அற்புதமாக இருக்கிறது.

ராகவன் மற்ற மனிதர்களிலிருந்து வேறுபட்டவர். வேலையிலிருந்து ரிடையரான பின்—'என்னை யார் இனிமே கவனிக்கப் போறாங்க'— இப்படிப் புலம்பும் ரகத்திலிருந்து மாறுபட்டவர்.

இவர் அரசு மருத்துவமனை ஒன்றில் டாக்டராக இருந்து ஒய்வு பெற்றவர். தனியாக நர்ஸிங் ஹோம் எதுவும் வைக்கவில்லை. அப்பா காலத்து சொத்து ஏழு தலைமுறைக்கு இருக்கிறது. மருத்துவமனை எதுவும் வைக்கவில்லை என்றாலும், இவரைத் தேடி வந்து, 'இவர் கையால் வைத்தியம் செய்து கொண்டால்தான் ஆயிற்று' என்று பிடிவாதம் பிடிக்கும் நோயாளிகள் நிறைய பேர் இருக்கிறார்கள்...

அதற்கென்ன, பணக்கார நோயாளியாக இருந்தால், சிரித்தபடி இப்படிச் சொல்லுவார்.

"என்ன சார், ஃபீஸா... கொடுமேன், உமக்கு நூறு ரூபாயெல்லாம் ஒத்தை ரூபா மாதிரி... இன்கம் டாக்ஸ் காரனுக்கு கொடுக்கறதை எனக்குத்தான் கொடுமேன்..."

இப்படி கேட்டு வாங்கி, ஒரு டப்பாவில் போட்டு வைப்பார்.

ஏழை நோயாளி யாராவது வந்தால் வசனம் வேறு மாதிரியாக இருக்கும்.

''யாரு... முருகேசனா... எப்படியிருக்காப்பலே? என்ன செய்யறது... கபமா... உன்னை இதோட எத்தனை தடவை சொல்லியிருக்கேன்... கொட்டற பனியில ரிக்ஷா ஓட்டாதேன்னு... இப்ப குடும்பத்துல எத்தனை மெம்பர்... புதுசா ஏதாவது ரிலீஸ் பண்ணியிருக்கியா... என்னது, இல்லையா... ஃபேமிலி பிளானிங் பண்ணிட்டியா... போறது போ. ஆறுக்கு அப்புறமாவது புத்தி வந்ததே... மருந்து எழுதித் தர்றேன்... மருந்தைவிட உனக்கெல்லாம் ஆகாரம் தாம்பா முக்கியம்... இந்தா, இந்த நூறு ரூபாயை வாங்கிட்டுப் போய், பாலும், காய்கறியும் வாங்கு. நம்ம செட்டியார் கடையில நான் சொன்னேன்னு சொல்லி மளிகை எல்லாம் வாங்கிக்க... என்ன... இந்த கும்பிடு எல்லாம் வேண்டாம்... பத்திரமா நீயே வச்சுக்க. உங்க தொகுதியில மழையினாலே ஏற்பட்ட சேதத்தைப் பார்க்க எம் எல் ஏ. மந்திரி இவங்கள்ளாம் வருவாங்க. அப்ப பெரிய கும்பிடாப் போடு. உபயோகமா இருக்கும்...''

இந்த ராகவனுக்கு சகல கலைகளும் அத்துபடி. சங்கீத ரசிகர். உடம்பு சரியில்லை என்று வரும் வித்வான்களிடம் சங்கீதத்தைப் பற்றிப் பேசிப் பேசியே உடம்பை குணப்படுத்தி விடுவார்.

''யோவ்... காதல் கோட்டைன்னு ஒரு படம் வந்திருக்கே... போய் பார்த்தேளா...''

''நைன்டீன் ஃபிப்டிக்கு அப்புறம், நான் சினிமாவுக்கே போறதில்லைன்னு ஒரு வைராக்கியம் வச்சிட்டிருக்கேன் டாக்டர்...''

''என்னய்யா வைராக்கியம் இது...அசட்டு வைராக்கியம்... இதனாலே வாழ்க்கையில எவ்வளவு நல்ல



விஷயங்களை மிஸ் பண்றேள் தெரியுமா... போய் பார்த்துட்டு வாரும்...''

''மருந்து...''

''எதுக்குய்யா மருந்து... முதுகுப் பிடிப்புக்குத் தானே... ஜபம் பண்றேன், சகஸ்ரநாமம் சொல்றேன்னு ஒரே இடத்துல உட்கார்ந்திருந்தா எல்லாப் பிடிப்பும்தான் வரும். விஷ்ணு சகஸ்ரநாமத்தை நாபியிலே இருந்து சொல்லிண்டே, வீட்டுத் தோட்டத்துக்கு இருபது வாளி தண்ணி, கிணத்துல இருந்து இழுத்துக் கொட்டும். உங்க சம்சாரத்துக் கிட்ட சொல்லி, நித்ய மல்லி, இருவாட்சியோட, சைடுலே நாலு கீரை விதையையும் தெளிச்சு வைக்கச் சொல்லும். உடம்புக்கு நல்லது...''

''சரி... ஃபீஸ்...''

''அது யாருக்கு வேணும்? ஆமா, உம்ம கிட்ட உன்னி கிருஷ்ணனோட கேசட் எல்லாம் இருக்குன்னு உம்ம மச்சினர் சொன்னாரே... அதையெல்லாம் இங்கே கொஞ்சம் கொடுத்தனுப்பறது. நானும் கேட்டு சந்தோஷப்படுவேனோல்லியோ... அநியாயத்துக்கு ஓர வஞ்சனைய்யா உமக்கு...''

வந்தவர் எழுந்து போகும் போது நிமிர்ந்து நடப்பார். 'மூச்சுப் பிடிப்பு எங்கே' என்று, மறுபடியும் அவரை இழுத்து வைத்துக் கேட்டால் அவருக்கே சொல்லத் தெரியாது... தலையைச் சொறிவார்.

ஒரு பிரபல நடிகையுடைய அம்மா இவரிடம் வைத்தியத்துக்கு வந்திருந்தாள்.

''வலது கண்ணும் தலையும் சொல்லி வச்சாப்பல வலிக்கிறது...''

"இருக்கலாம்... ரெண்டும் பக்கத்துலப் பக்கத்துல தானே இருக்கு... சொல்லி வச்சுண்டிருக்கலாம். வேற என்ன பண்றது..."

"வலது கண் மட்டும் கூசறது... டாக்டர் பத்ரிநாத்துக்கு லெட்டர் தர்றீங்களா... இல்லே— அகர்வாலா... எனக்கு என்ன பயம்னா, இப்படி விடாமத் தலையை வலிக்கறதுனாலே, ஒரு வேளை பிரெய்ன்லே டியூமர் கியூமர்... எதனாலே கேட்கறேன்னா—நடிகை ஸ்ரீதேவி யோட அம்மாவுக்கு இப்படித்தானே ஆரம்பிச்சு..."

"ஸ்ரீதேவியோட அம்மாவுக்கு பிரெயின்லே டியூமர்னா - உடனே உங்களுக்கும் வந்தாகணுமா... முதல்ல மேடம்... அதெல்லாம் பிரெய்ன் இருக்கறவாளுக்குத் தானே கவலை... நீங்க கவலையே படாதீங்கம்மா..."

"மிஸ் கல்பனா தேவியின்னே கூப்பிடலாம் நீங்க..."

"ஓ.கே... ஓ.கே... மிஸ். கல்பனா தேவி... பொண்ணுக்கு இப்ப மார்க்கெட் 'ஓகோ'ன்னு இருக்கு போல..."

"ஹி... ஹி... ஆமா. வேற எவளுக்கு நடிக்கத் தெரியறது... தொண்ணுத்தியெட்டு நவம்பர் வரைக்கும் அப்படி இப்படி நகர்த்த முடியாதுண்ணேன்..."

"தெரியுதே... உங்க மூக்குத்தியோட சைஸ்லே இருந்தே தெரியுதே... போன தடவை சின்னதா ஒரு ஒத்தைக் கல்லு இல்லே போட்டிருந்தீங்க..."

மிஸ். கல்பனா தேவிக்கு முகம் குங்குமமாய் சிவந்து விட்டது.



"அய்யோ... உங்களுக்குத்தான் எத்தனை ஞாபக சக்தி டாக்டர்... இது இப்பத்தான் ரெண்டு மாசம் முந்தி வாங்கினது..."

"உம்... ப்ளூ ஜாகரா..."

"ஆமாங்க..."

"எங்கே, பாபாலால்லே வாங்கினீங்களா..."

"அட, எப்படி கண்டுபிடிச்சீங்க?"

"வேற எங்கே இத்தனை ஜொலிப்பைப் பார்க்க முடியும்... உங்க கண்ணையே கூச வைக்குது... கண்ணு கூசறதாலே கண்ணுல இருந்து தண்ணி வந்துட்டே இருக்கு. கண் வலிச்சுட்டே இருந்தா - தலை வலிக்காம இருக்குமா... தலைவலியும் கண்வலியும் எத்தனை நாளா இருக்கு?"

"இப்பத்தான் ரெண்டு மாசமா..."

"பார்த்தீங்களா... பொண்ணோட செல்வாக்கை இத்தனாம் பெரிய மூக்குத்தியிலாலத்தான் காமிக்கணுமா... முதல்லே அதைக் கழட்டி வச்சுட்டு, சின்ன சைஸ்லே ஒரு மூக்குத்தியப் போட்டுப் பாருங்க. அதுக்கு அப்புறமாவும் தலைய, கண்ணை வலிச்சுதுன்னா, ஐ ஆஸ்பிடலுக்குப் போகலாம்..."

ராகவனின் சாமர்த்தியத்துக்கு இத்தனை உதாரணங்கள் கூட வேண்டாம். சிரிக்கவே தெரியாத கீழ் வீட்டு சிவகாமியைக் கூட, அவர் ஒரு வினாடியில் சிரிக்க வைத்துவிடுவார் என்பது ஒன்றே போதும்...

அவராலேயே சமாளிக்க முடியாத ஒரு மனிதன் இருந்தானென்றால் - அவராலேயே திருத்த முடியாத

ஒரு மிருகம் இருந்ததென்றால்... அவன்... அது... பிரேம்தான்...

இன்றளவும் ராகவனுக்கும் பசுமையாக நினைவிருக்கிறது...

ஆறு வருடங்களுக்கு முன் - இதே ராகவனின் வீட்டு கீழ் போர்ஷனுக்கு - புதுமணத் தம்பதியாய் குடிவந்தவர்கள்தான் மதுராவும் பிரேமும்.

பிரேம் கூட அவனது அம்மாவும்...தம்பியும்.

அப்பொழுது சூர்யா ஊரில் இல்லை.

ஆரம்பத்தில், புதுசாய் கல்யாணமாகி வந்த மருமகளுக்குத் துணையாய், நாலு காரியங்களைப் பாங்காய் - பதவிசாய் - செய்வதற்கு சொல்லித் தருவதற்குத்தான் பிரேமின் தாய் மங்களமும், அண்ணன் வீட்டிலிருந்தபடியே வேலை தேடிக் கொள்வதற்காகத்தான் தம்பி கௌதமும் வந்திருப்பதாக நினைத்தார் ராகவன்.

ஆனால்...

அவர்கள் குடிவந்த ஒரு வாரத்துக்குள்ளேயே - அவர்களது சுபாவம் புரிந்துவிட்டது ராகவனுக்கு.

அவர், காய்கறி வாங்கிக் கொண்டு, பொடி நடையாய் நடந்து வந்து, கீழ் போர்ஷனை ஒட்டினாற் போலிருந்த மாடிப் படியில் கால் வைக்க...

கீழே, மங்களம் தன் மகனிடம் கத்துவது காதில் விழுந்தது...

"அஞ்சாயிரம் ரூபாய்க்கு எவர்சில்வர் பாத்திரம்னு லிஸ்ட் கொடுத்திருக்கான் அந்தக் கிழவன். சமையல் ரூம்லே வந்து பாரு... திடீர்னு உன்



ஃபிரண்ட்ஸ் ஏழெட்டு பேரை நீ கூப்பிட்டுட்டா - காபி தர - அதுக்கு ஏத்த டபரா தம்ளர் கிடையாது. எண்ணி நாலு டபரா - நாலு தம்ளர்... இந்த மாதிரி அநியாயம் எங்கேயாவது உண்டா... அதைத்தான் விடு. பால் காய்ச்சறதுக்கு வாகா ஒரு பாத்திரம் உண்டோ... உன் மாமியார் இது நாள் வரைக்கும் குடித்தனம்தான் செஞ்சிட்டிருந்தாளா... இல்லே - வேற ஏதாவது—"

வார்த்தைகளின் நாராசம் தாளாமல், ராகவன் இரு கைகளாலும் செவியைப் பொத்திக் கொண்டார். டாக்டரான அவருக்கே பிளட் பிரஷர் குபுகுபுவெனத் தலைக்கு ஏறியது...

கையிலிருந்த காய்கறிக் கூடையை, அப்படியே மாடிப்படியில் வைத்துவிட்டு, துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு, கீழ் வீட்டுக்குள் திடீரெனப் பிரவேசித்தார்.

இதோ, இந்த மதுரா - கழுத்தில் புது மங்கல நாணும், கல்யாணத்தின் போது கையிலிட்ட மருதோன்றிச் சிகப்புமாய் - சமையலறை வாசலைப் பிடித்துக் கொண்டு விசும்பிக் கொண்டிருந்தாள்.

"நமஸ்காரம்..."

இவரது குரல், அங்கிருந்த நால்வரையுமே தூக்கி வாரிப் போடச் செய்தது.

# 2

எதிர்பாராமல் உள்ளே நுழைந்த ராகவனை, கடுகடுப்புடன் பார்த்தான் பிரேம்.

"என்ன வேணும்? அட்வான்ஸ் ஆறு மாசத்துக்குத் தான் அப்பவே கொடுத்துட்டேனே... நீங்கதான் இன்னும் ரசீது தரல்லே..."

ராகவன் புன்னகைத்தார்.

"எனக்கு ஞாபகமிருக்கு. ஆறு மாச அட்வான்ஸ்லா பன்னெண்டாயிரம் ரூபா தந்திருக்கீங்க. அதுக்கு ஒரு பைசா குறையாம ஸ்டாம்ப் ஒட்டின ரசீது தர நான் தயாரா இருக்கேன்... ஆனா, இப்ப நான் வந்தது அதுக்காக இல்லே..."

"வேற எதுக்கு... தண்ணிய சிக்கனமா செலவு பண்ணனும், கரண்ட் சார்ஜ் நாங்கதான் கட்டணும், நீங்க மாடியில டி. வி. பார்க்கறச்சே - நாங்க கீழே மிக்ஸியில எதுவும் அரைக்கக் கூடாது. அதானே..."

மங்களம் அடுக்கிக் கொண்டே போக - ராகவனின் புன்னகை இன்னும் விசாலமாகியது.

"உங்களுக்கு தஞ்சாவூரோ..."

'ஆமா... அதுக்கு என்ன இப்ப?"

"இல்லே... பேச்சுலேயிருந்து தெரிஞ்சது. இந்த மாதிரி புத்திசாலித்தனமாப் பேசறது தஞ்சாவூர் மண்ணுக்கே சொந்தமில்லையா...நான்கூட தஞ்சாவூர் காரன்தான்..."



மங்களத்தின் முகத்தில் புன்னகை எட்டிப் பார்க்கலாமா, வேண்டாமா என்கிற யோசனை தெரிந்தது.

"எனக்கு ஒன்பதரைக்கு ஆபீஸ். காலை நேரத்துல நின்னுப் பேச நேரம் கிடையாது..."

—இது பிரேம்.

"எனக்கும் ஆயிரம் வேலை இருக்குப்பா. நானும் உங்க நேரத்தை வீணாக்க விரும்பலை. பனிரெண்டாயிரம் ரூபா... கேவலம்... இதுக்கே ரசீது கேட்கற நீங்க... எவர்சில்வர் பாத்திரம் ஐயாயிரம் ரூபாய்னா... வெள்ளிப் பாத்திரம்..."

இந்த இடத்தில் சற்று நிறுத்தி, மதுராவை ஜாடையாய் ஒரு பார்வை பார்த்தார்.

"சுமார் முப்பது பவுன் நகை... வைரத்தோடு-கட்டில், பீரோ, மெத்தை, ஃபர்னிச்சர் இத்தனைக்கும் மேல தங்க விக்கிரகம் மாதிரி பொண்ணு... எல்லாத்துக்குமா சேர்த்து ஒரு குத்து மதிப்பா எத்தனை லட்சத்துக்கு ரசீது கொடுத்திருக்கே... உங்க மாமனார் ஸாரி— உங்கம்மா சொல்ற மாதிரி சொல்லணும்னா அந்தக் கிழவனுக்கு"

"வாட்?"

கௌதம், நெற்றி நரம்பு புடைக்க முன்னால் வந்தான். இதற்குள், பிரேம்— அவனைப் பிடித்து பின்னுக்குத் தள்ளிவிட்டு சொன்னான்.

"இதெல்லாம் உங்களுக்கு சம்பந்தமில்லாத விஷயம்... உங்க வீட்டுல குடியிருக்கோம்கறதுனாலே, எங்களோட பர்ஸனல் மேட்டர்ஸ்லே நீங்க தலையிடறதை நான் ஒத்துக்க மாட்டேன்...அப்படி உங்களாலே மூக்கை நுழைக்காம இருக்க முடியாதுன்னா...இப்பவே

அட்வான்ஸ்ஸை திருப்பித் தந்துடுங்க. மெட்ராஸ்லே என்ன... வேற எடமா கிடைக்காது..."

ஒரு கணம், ஒரேயொரு கணம்... 'தாராளமாக் கிளம்பு' என்று சொல்லி விடத்தான் நினைத்தார் அவர்.

பயத்தில் மருண்ட விழிகளுடன் கதவோரத்தில் நின்ற மதுராவின் முகம், அவரை என்னவோ செய்தது.

இவள் இங்கிருந்து கிளம்பினால், இத்தனை வசதியாக இல்லாவிட்டாலும், ஓரளவுக்கு வசதியுடன் கூடிய வீடு கிடைக்காமல் போகாது.

ஆனால்—

இந்தப் பெண்ணை எப்படியெல்லாம் கொடுமை செய்வார்களோ...

அவர், மங்களத்தை நிமிர்ந்து பார்த்தார்.

"அட்வான்ஸை திருப்பிக் கொடுக்கற பழக்கம் எனக்கில்லே. ரெண்டாயிரம் ரூபாய்க்கு அம்பது பேர் உட்கார்ந்து சாப்பிடும்படியான ஹால், பூஜை ரூம், அட்டாச் பாத்ரூம்— ஏர்கண்டிஷனோட மூணு பெட்ரூம்... எங்கேயாவது கிடைக்கிறதான்னு பாருங்க..."

"அதுக்கென்ன, கிடைக்கிற இடத்துல முடங்கிக் கறது..."

"ஆகா... உங்க இஷ்டம் - கடைசியா ஒண்ணு... மறுபடியும் உங்க குடும்ப விஷயத்துல தலையிடறதுக்காக மன்னிச்சுக்கணும்... நாலு டபரா, தம்ளர் போதல்லைங்கறதுக்காக, பெண்ணைப் பெத்தவளை- அத்தனை அசிங்கமா பேசியிருக்க வேண்டாம்மா. எதுக்கு சொல்றேன்னா... நாம எல்லாம் தஞ்சாவூர்



காரங்க... பிரியமாப் பேசறதுலேயும் சரி... இடைவெட்டாப் பேசறதுலேயும் சரி... நமக்கு ஈடு இணை யாருமே கிடையாது... இதையும் நீங்க யோசிச்சுப் பார்த்துட்டா சரிதான்... அப்ப நான் வர்றேன்."

ஒரு கும்பிடு போட்டு விட்டுக் கிளம்பியவர், அன்று மாலையே— ஒரு மரப் பெட்டியைக் கொண்டு வந்து இறக்கினார்.

மங்களத்தைப் பார்த்து புன்னகைத்தார்.

"இதுல என் ஒய்ஃப் எவர்சில்வர் வந்த காலத்துலேயிருந்து ஆசை ஆசையா சேர்த்த எவர்சில்வர் பாத்திரமெல்லாம் நிறைய இருக்கு. அவ போனதுக்கு அப்புறம்— அவளை ஞாபகப் படுத்தற எந்தப் பொருளும் வெளியில இருக்க வேண்டாம்னு எல்லாத்தையும் உள்ளே போட்டு வச்சுட்டேன். என் மருமக வந்தா கொடுக்கணும்னு இருந்தேன்... இப்ப என்ன... யாருக்காவது உபயோகப்பட்டா சரிதான்..."

"........."

"திறந்து பாருங்க... கிட்டத்தட்ட ஒரு டஜன் டபரா தம்ளராவது இருக்கும். ஒவ்வொரு தம்ளரும் கணிசமா ஒரு லிட்டர் காபியாவது பிடிக்கும். அதனாலேதான் இவளை எல்லாம் விட்டு வச்சா பூலோகம் தாங்காதுன்னு, கடவுளாப் பார்த்து அழைச்சிட்டுப் போயிட்டார்..."

"........."

"போறுமா பாருங்க. இன்னும் ஏதாவது வேணுமானா கூச்சப்படாம சொல்லுங்க... எங்கே உங்க மருமக..."

"இட்லிக்கு அரைக்கறா..."

''இரைண்டர் ரிப்பேராக்கும்...''

''என் பசங்களுக்கு கல்லுரல்லே அரைச்சாத்தான் பிடிக்கும்...''

''அதுவும் சரிதான்... அவங்க மனசுக்கேத்த மாதிரி தானே இதெல்லாமும்... கல் மனசுக்காரங்களுக்கு கல் லுரல் பிடிக்கறதுதானே நியாயம்?''

''என்னது...''

''ஒண்ணுமில்லேம்மா. நான் ஏதோ— எனக் குள்ளே சொல்லிட்டேன். உங்க மருமகளை ஒரு நிமிஷம் கூப்பிடுங்க''

''எதுக்கு?''

''நல்லாயிருக்கேம்மா... இதெல்லாம் அவளுக்கு சீர் போதல்லேயின்னு நீங்க சொன்னதுனாலேத் தான் கொண்டு வந்து கொடுத்திருக்கேன்...''

மங்களம், அலுத்தபடி குரல் கொடுத்தாள்.

''இந்தாடி... இங்கே வா...'

''பேர் ஒண்ணும் கிடையாதா?''

''பேருக்கென்ன குறைச்சல்... மதுரான்னு பேரு...''

''இவ்வளவு மதுரமானப் பேரை வச்சுட்டிருக்கிற வளையா— 'இந்தாடி'யின்னு கூப்பிட றீங்க... மதுரான்னு நாலு தரம் கூப்பிட்டுத்தான் பாருங் களேன்... சொன்ன நாக்கு தித்திக்கும்—''

''ஓகோ...''

''ஆமாம்மா... மதுரான்னு சொன்ன உடனே எனக்கு மதுரையில இருக்கற மீனாட்சியம்மனும் மதுராபுரி வாசனான கிருஷ்ணனும்தான் நினைவுக்கு வர்றாங்க...''



இதற்குள், மதுரா— சரக்கையைத் துடைத்தபடி கூடத்துக்கும்— சாப்பாட்டு ஹாலுக்கும் இடைப்பட்ட வாசற் படியில் வந்து நிற்கிறாள்.

''இந்தாம்மா, மதுரா... இதையெல்லாம் எடுத்து உள்ளே வச்சுக்க...''

''வேண்டாம்...''

ராகவன் நிமிர்ந்து பார்த்தார். அந்த முகத்தில் ஒரு வைராக்கிய பளபளப்பு.

''ஏம்மா...''

''என்னைக் கல்யாணம் செஞ்சு தர்றதுக்கு முன் னாலேயே— எங்களாலே இவ்வளவுதான் சீர் செய்ய முடியும்னு எங்க அப்பா சொல்லிட்டார். அதுக்கு எங்க மாமியாரும், அவங்க பிள்ளையும் ஒத்துட்டதுக்கு அப்புறம்தான் இந்த கல்யாணம் நடந்தது... இப்ப 'திடீர்'னு எதுவுமே போறாதுன்னு சொன்னா எப்படி.. ஒரு ஸ்கூல் ஹெட்மாஸ்டர், தன் மூத்த பொண்ணுக்கு எவ்வளவு செய்ய முடியுமோ, அவ்வளவுக்கு மேலேயே செஞ்சாச்சு. அதுக்கு மேல எதிர்பார்த்தா...''

''அதைத்தான் நான் தந்திருக்கேன், எடுத் துக்க...''

''நீங்க யார் சார் எனக்குத் தர...''

''அம்மா மதுரா...''

''ஆமா. இதே கேள்வியை, சாயந்திரம் ஆபீஸ் லேயிருந்து வந்ததும் என் கணவரே கேட்பார். இந்த அளவுக்கு நாசூக்கா கூட கேட்க மாட்டார். காதைத் துளைக்கற மாதிரி... அசிங்கமாத்தான் கேட்பார்...''

''என்ன, பேச்சு ரொம்ப நீளுது...''

மங்களம், மருமகளை அடச்கப் பார்க்க, அவள் அதிசயமாய் மாமியாரின் வார்த்தைகளை மீறிக் கொண்டு பேசுகிறாள்.

"இன்னிக்கு இவங்க பாத்திரம் போதல்லையின்னு சொன்னதுனாலே ஒரு பெட்டி நிறைய பாத்திரத்தை கொண்டு வந்து தள்ளிட்டீங்க. நாளைக்கு போட்ட நகை போதல்லையின்னா... வரதட்சணைப் பணம் போதல்லையின்னா... கொண்டு வந்து தருவீங்களா... நீங்க கொடுப்பீங்களாயிருக்கும். ஆனா, நான் வாங்கிக்க மாட்டேன். ஏன்னா, எங்க அப்பாவுக்குத் தெரிஞ்சா அவமானத்துனாலேயே தூக்கு போட்டுக்குவார்... ஏதுடா, தன் பொண்ணு, யாரோ ஒருத்தர் கிட்ட கை நீட்டிட்டாளேயின்னு... ஏற்பது இகழ்ச்சியின்னு எனக்குச் சொல்லித் தந்தவர்..."

"......"

"நீங்க எல்லாத்தையும் எடுத்துட்டுப் போங்க... உங்க அன்புக்கு நன்றி..."

அவள் மின்னலாய் மறைய, அவர், பெட்டியிலிருந்து வெளியே பரத்திய பாத்திரங்களை, ஆச்சரியம் கலையாமல் எடுத்து வைக்க...

"நீங்க வச்சுட்டுப் போங்க. நான், என் பிள்ளைகிட்ட பேசிக்கறேன்..."

மங்களம், அத்தனைப் பாத்திரங்களையும் விட மனசில்லாதவளாகச் சொல்ல...

அவர், அவளை நிமிர்ந்து பார்த்து, ரத்தினச் சுருக்கமாய் சொன்னார்:

"அல்பம்!"



அன்றிரவு—

இமையோடு இமை கொட்டவில்லை ராகவன்.

கீழே, வெகு நேரம் வரையில் பேச்சுக் குரல் ஓயவில்லை.

ராகவனுடைய படுக்கையறைக்கு நேர் கீழ் படுக்கையறைதான் பிரேம் மதுராவின் படுக்கையறை.

வார்த்தைகள் புரியாத வசை மொழிகள்...நடுவில் அவன் அடித்தானோ என்னவோ— அவள் 'வீலெ'ன அலற ஆரம்பித்து 'சட்'டென அடக்கிக் கொண்ட சத்தம்...

ராகவன் தூக்கம் வராமல் புரண்டார்.

மறுநாள் விடிகாலையிலேயே சூர்யா வந்து விட்டான்.

அவன், அப்பாவை விட்டு ஒரு நாள்கூடப் பிரிந்ததில்லை. ஆனால் என்ன செய்வது... அவன் வேலை பார்க்கும் கம்பெனியின் டைரக்டருக்கு இந்தப் பாசமெல்லாம் புரிகிறதோ...

'ஒரு மாதம் பம்பாய்க்கு போய் விட்டு வா' என்று அனுப்பி விட்டார்.

வரும் போதே உற்சாகக் கூவல்...

சந்தோஷத்துக்கும், கலகலப்புக்கும் இன்னொரு பெயர் வேண்டுமானால் சூர்யா என்றே வைத்துக் கொள்ளலாம்...

அப்பாவைப் போலப் பிள்ளை...

"ஏம்பா, என்னைப் பிரிஞ்ச ஏக்கத்துல இளைச்சு, துரும்பாப் போயிருப்பீங்கன்னு பார்த்தா ஒன்னை

யும் காணுமே... லேசா தொந்தி வேற போட்டிருக் காப்பல இருக்கு...''

அவன் தந்தையைப் பார்த்து கண் சிமிட்ட, அவரும் தன் பங்குக்கு விடாமல் சொன்னார்.

''இந்த ஒரு மாசத்துக்காக பாலைக் குறைச்சு வாங்க முடியுமாடா... அதனாலே, உன் பங்கு பாலை எல்லாம் ஃபிரிஜிலே சேர்த்துவச்சு, நாலஞ்சு நாளைக்கு ஒரு தரம் பாஸந்தி, பால்கோவா இப்படி ஏதாவது செஞ்சு சாப்பிட்டுடுவேன்...''

''நிஜமாவா...''

''நிஜம்மா...''

''நீங்க ஒண்டி ஆளாவாத் தின்னீங்க?''

''ஏண்டா, இதுக்காக கையில குங்குமச் சிமிழை எடுத்துட்டு வீடு வீடாப் போய், 'எங்க வீட்டுல பாஸந்தி பண்ணியிருக்கு... என் கூட சேர்ந்து சாப்பிட, நீங்க அவசியம் வரணும்'னு ஒவ்வொருத்தியையும் அழைச்சிட்டு வரச் சொல்றியா... விஷயம் தெரிஞ்சா—தெருவே உங்கப்பனை அடிக்க வந்திரும்டா...''

அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கீழ் வீட்டில் மங்களம் கத்தும் குரல் கணீரென்று...

''வாசல் தெளிச்சு கோலம் போட, ஒருத்தி இத்தனை நேரம் ஆக்கினா, மிச்ச காரியத்தை எல்லாம் எவ பார்க்கறது...''

சூர்யா, தந்தையை ஆச்சர்யத்துடன் வினவினான்.

''கீழ் வீட்டுக்கு குடி வந்தாச்சா?''

''உம்...''



''என்ன, சுவாரஸ்யமாகக் குரல் வர்றது... வழக்கம் போல புருஷனை விரட்டற கேஸா?''

''அப்படியிருந்தாக் கூடப் பரவாயில்லைடா... புருஷனை, பெண்டாட்டி விரட்டற கேஸ்லே, மியூச்சுவல் அண்டர்ஸ்டான்டிங் இருக்கும். பெண்டாட்டி என்னதான் விரட்டினாலும், இவனும் ஒரு லவ்வுலே, பிரியத்துனாலே அதைச் சகிச்சுக்கறான்னு வச்சுக்கலாம். இங்கே அப்படியில்லே...''

''பின்னே...''

அவர், முதல் நாள் நடந்ததைச் சொன்னார்தான், மாடிப்படியில் கால் வைக்கும் பொழுது கேட்ட பேச்சிலிருந்து, மாலையில் தான் பாத்திரங்களைக் கொண்டு இறக்கிய போது அந்தப் பெண் சொன்னது வரை... ஏன், இரவு கேட்ட அலறலைக்கூட விடாமல் சொன்னார்.

''உங்களுக்கு என்னத்துக்குப்பா இந்த அவதி... வழக்கம் போல, பெண்டாட்டிக்கு அடங்கின ஆளாப் பார்த்து வைக்கக் கூடாதா?''

''நான் இதுவும் அப்படித்தான் இருக்கும்னு நினைச்சேன்டா சூர்யா. புதுசாக் கல்யாணமான இளசுகள் வர்றது— அட, அதுங்க 'அப்படி இப்படி' இருக்கறதைச் சாடை மாடையாப் பார்த்தாவது, நம்ம பயலுக்கு கல்யாண ஆசை வர்ராதான்னு பார்த்தேன்...''

''ஐயோ அப்பா... உங்க பிள்ளை, புருஷன் பெண்டாட்டி கொஞ்சலையே முன்னே பின்னே பார்த்திராதவனா...''

''எங்கே பார்த்திருக்கே... எங்கே... சொல்லு பார்ப்போம்...''

"எத்தனை சினிமாவுல பார்த்திருக்கேன்... எத்தனை புக்ஸ்லே படிச்சிருக்கேன்..."

"மடையா... சினிமாவுல ஹீரோவும், ஹீரோயினும் கட்டிட்டுப் புரள்றது எல்லாம் 'டுப்'புடா... அதே மாதிரிதான் நாவல்களிலேயும... ஒருத்தரை யொருத்தர் பார்வையாலேயே விழுங்கிக் கொண்டனர்'னு எழுதுவாங்க... அதெல்லாம் நடைமுறையில ஒத்து வரக்கூடிய காரியமா...?"

"பின்னே?"

சூர்யா, சுவாரஸ்யத்துடன் அவரெதிரில் சோபாவில் குந்துக் காலிட்டு அமர்ந்தான்.

"வீட்டுல மாமனார், மாமியார்னு ரெண்டு கிழம் இருக்கணும்... மச்சினன், நாத்தனார்னு நாலஞ்சு பொடிசுங்க இருக்கணும்... புருஷன்காரன், பெண்டாட்டியக் கொஞ்சலாம்னு போறச்சே, மாமனார் கிழம், 'ஒரு முழுங்கு காபி போட்டுத் தாடியம்மா'ன்னு உள்ளே நுழையணும்... மாமியார்காரி, குறுக்கே விழுந்து மறிக்காத தோஷமா, "வெங்காய சாம்பார்லே போட்டிருந்த கரண்டிய- சஷ்டியும் அதுவுமா- ரசத்துலப் போட்டுட்டியா... உன்னால எனக்கு ஒரு வாய் ரசம் சோறும் போச்சு'ன்னு 'தை தை'யின்னு குதிக்கணும்... இவன் சாயந்திரம் வர்றச்சே பூ வாங்கிட்டு வந்து பெண்டாட்டி கையில கொடுக்க முடியாம, தங்கைக்காரி, 'எனக்குத் தானே...'யின்னு ஓடி வரணும்..."

"ச்சே, ஆனாலும் மோசமான கற்பனைப்பா உங்களுக்கு..."

"கொஞ்சம் பொறுடா. ராத்திரியாவது சீக்கிரமாப் படுத்துடலாம்னு பார்த்தா— தம்பிக்காரன்



பரிட்சைக்கு படிக்க, ராத்திரி பதினொரு மணி வரைக்கும் பெட்ரூமைக் குத்தகைக்கு எடுத்துக்கணும். சந்திப்போமா... ரெண்டு வார்த்தையாவது பேசுவோமா... பெண்டாட்டியோடப் பின்னல் நுனியாவது போற போக்குல தன் மேல விசிறாதான்னு புருஷன்காரன் ஏங்க, இவளுக்கு பெருமை ஒரு பக்கம், பச்சாதாபம் ஒரு பக்கம்னு உடம்பு பதற, இத்தனையையும் மீறி கிடைக்கிறதுதான்டா சொர்க்கம்..."

"ஓஹோ..."

"ஆமா. நீ வேணா பாரேன்... நீ சர்க்கரையையே தொடக் கூடாதுன்னு ஒருத்தன் கிட்ட சொல்லு. அப்பத்தான் அவனுக்கு சாதாரணக் கமர்கட்டைப் பார்த்தாக்கூட சபலம் வரும்... இதுவே, ஒரு தட்டு நிறைய ஸ்வீட்டை வச்சு 'புகுந்து வெட்டுடா'ன்னு சொல்லு... ஒரு விள்ளல்லேயே அவன் ஆசை அடங்கிடும்.."

"இதெல்லாம் எங்கேயிருந்துப்பா கத்துட்டீங்க..."

"வேற எங்கே... உங்க அம்மா கிட்டயிருந்து தான்டா... அப்ப குடும்பம் பெரிசா இருந்தது... வசதி நிறைய நிறைய இருந்தாலும் கூட்டமும் நிறைய... 'உங்களோட நிறைய பேசணும், பேசணும்'னு சொல்லிட்டே இருந்தா... உங்க அம்மா. எங்கே... எங்க அப்பா, அம்மா காலம் முடிஞ்சு, தங்கை, தம்பிங்க அவங்கவங்க கல்யாணமாகி தனியாப் போறப்ப நீ பொறந்தாச்சு. ஒரு வருஷம் உன்னை கவனிக்கவே நேரம் சரியா இருந்தது... அதுக்கு அப்புறம் பேச நேரம் கிடைச்சப்ப, அவ இல்லே..."

ராகவன் இதை சொல்லும் போது கண்களில் நீர் துளிர்த்தது.

சூர்யா, அப்பாவை சமாதானப்படுத்தும் வகையில் ஏதோ சொல்லத் தொடங்கும் நேரத்தில்தான்—

கீழ் வீட்டிலிருந்து கௌதமும், மங்களமும் போடும் கூச்சல் கேட்டது.

"அண்ணாதான் சொல்லிட்டானில்லே... ஊரைப் பார்க்கக் கிளம்பு..."

"நேத்து, மாடி வீட்டுக்காரன் கிட்ட அத்தனை ஜம்பமா பேசினே இல்லே... அதே வாயாலே, உங்க அப்பனைப் போய் கேளு சொல்றேன்..."

"நான்தான் அப்பவே சொல்லிட்டேனில்லே... இதுக்கு மேல செய்ய. எங்க அப்பாவாலே முடியாது... வேணுமானா, என் படிப்புக்கு ஏத்த வேலைய வாங்கித் தாங்க... சம்பாதிச்சு தரேன்..."

"என்ன திமிராப் பேசறா பார்த்தியாடா உன் பெண்டாட்டி?"

இப்பொழுது பிரேமின் குரல் கேட்டது.

"நான்தான் அப்பவே சொன்னேனில்லே... இவளுக்கு தான் நிறைய படிச்சிருக்கோம்கற கர்வம்மா... அதான் இப்படியெல்லாம் பேசறா..."

"சத்தியமா அப்படியெல்லாம் இல்லீங்க..."

நடுவில் மதுராவின் தீனமானக் குரல்...

"எதிர்த்தாடி பேசறே?"

"ஐயோ..."

சூர்யாவும், ராகவனும், தங்களை மறந்து, பால்கனிக்கு ஓடினார்கள்.

இதற்குள்—



கணவனால் எட்டி உதைக்கப்பட்ட மதுரா—முன் வாசலில், தான் போட்ட கோலத்தின் மீதே வந்து விழுந்தாள்...

பெரிய தோட்டத்துடன் கூடிய வீடாதலால் அக்கம் பக்கத்தவர் வேடிக்கை பார்க்கும் அவலம் இல்லை.

விழுந்தவள், நெற்றியில் பொங்கிய ரத்தத்தை ஒரு கையால் அழுக்கியபடி நிமிர...

'மதுரா!!"

பால்கனியில் நின்று கொண்டிருந்த சூர்யா வியப்புடன் கூவினான்.

"இவளை உனக்குத் தெரியுமாடா சூர்யா?"

"தெரியுமாவது... முதல்லே அவ காயத்துக்கு ஏதாவது ஃபர்ஸ்ட் எய்ட் செய்யுங்க. சொல்றேன்..."

சூர்யா, நாலு கால் பாய்ச்சலில் கீழே ஓடினான். அவனுக்கு சற்றும் சளைக்காத வேகத்தோடு ராகவனும் ஓடினார்.

## .3

"இவளை உனக்கு முன்னாலேயே தெரியுமா? பின்னே ஏண்டா சொல்லவே இல்லே?"

ராகவன், அவளது நெற்றிக் காயத்துக்கு கட்டுப் போட்டுக் கொண்டே மகனை வினவினார்.

"நான் இது வரைக்கும், எதையாவது உங்ககிட்ட சொல்லாம மறைச்சிருக்கேனா அப்பா... ஒரு தடவை

நான், டில்லி அத்தை வீட்டுக்குப் போனப்ப என்கூட ஒரு பொண்ணும், அவ தம்பியும் வந்தாங்க... அவங்க அப்பா, டில்லி போய் சேர்ற மட்டும் அவங்களைப் பார்த்துக்க வேண்டிய பொறுப்பை என் கிட்ட கொடுத்தாங்கன்னு சொல்லலே... டில்லியில இவ மாமாவோ யாரோ ஸ்டேஷனுக்கு வந்திருந்தார். அவரைப் பார்த்தவுடனே, சின்னதா ஒரு தாங்க்ஸை வீசிட்டுப் போயே போயிட்டா. அது ஆச்சே மூணு, நாலு வருஷம்... எனக்கு இவ பேருகூட ஞாபகமிருக்கு இவளுக்குத்தான் என்னை ஞாபகமிருக்கோ இல்லையோ... தெரியலே...''

மதுரா, தலை குனிந்து உட்கார்ந்திருந்தாள்... முதலில் நினைவில்லாவிட்டாலும், அவன் கீழே இறங்கி வந்ததும் 'சட்'டென இந்த முகம் நினைப்புக்கு வந்து விட்டது.

நான்கு வருடங்களுக்கு முன்பு— அவள், அப் பொழுதுதான் பள்ளிப்படிப்பை முடித்திருந்த புதுசு. தம்பி ரகு ஏழாவதோ என்னமோ...

மாமாக்காரர் வருந்தி வருந்தி அழைத்ததால் இவர்களை மட்டும் அனுப்பி வைத்தார் இவள் தந்தை... மற்றதெல்லாம் ஆனாலும் பொடிசுகள். அம்மாவின் முந்தானையை விட்டு ஒரு அங்குலம்கூட நகர்ந்து பழக்கமில்லாதவர்கள்.

மேலும் எத்தனைப் பேருக்குத்தான் டிக்கட் எடுக்க முடியும்... பணம் வேண்டாமா?

இவர்களுக்கான கம்பார்ட்மெண்ட்டில் சூர்யா வைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் கலர் கலராய் முண்டாசு கட்டிய பஞ்சாபிக்காரர்கள்.



அதனால் இவனிடம்தான் பொறுப்பை ஒப்படைக்க வேண்டியதாகி விட்டது மதுராவின் அப்பாவுக்கு.

மதுராவுக்கு இன்றளவும் நன்றாக ஞாபகமிருக் கிறது... டில்லி வாசம் முடிந்து, மதுராவும் ரகுவும் ஊர் திரும்பியதும் இவர்கள் தந்தை கேட்ட முதல் கேள்வி ''அந்தப் பையன் எப்படி... ஏதோ நம்பி ஒப்படைச்சிட்டேனே தவிர— அவனும் வாலிப வயசுக் காரன்தானே... ஏதாவது சில்மிஷம் பண்ணாம இருக் கணுமேயின்னு ஒரே கவலையா இருந்தது...''

''சேச்சே... ரொம்ப டீஸன்ட்டா இருந்தார்...'' இது மதுராவின் ஒரு வரி பதில்.

ரகுதான் சூர்யாவைப் பற்றி, ஒரு புராணமே படித்தான்.

''அந்த அங்கிள் நிறைய ஸ்டாம்ப் சேர்த்து வச் சிருக்காராம்பா...''

''கபில்தேவ் கையெழுத்து போட்ட பேட் கூட வச்சிருக்காராம். அப்புறம்... நாம மெட்ராஸ் வந்தா போன் பண்ண சொல்லி ஒரு போன் நம்பர் கொடுத் திருக்கார். போன் பண்ணினா, அந்த அங்கிளே நம்மளை அவர் வீட்டுக்கு அழைச்சிட்டுப் போயிட்டு, தினமும் பீச், ஜூ, மியூஸியம், கிஷ்கிந்தா, கோல்டன் பீச் எல்லாம் சுத்திக் காமிக்கிறேன்னு சொன்னார்...''

''வீட்டுக் கட்டுல புது வித்தையெல்லாம் சொல்லித் தந்திருக்காரே... செஞ்சு காமிக்கட்டுமா...''

''ஏய், வோர்ட்ஸ் பிளே தெரியுமா... ஜோரா இருக்கும். அங்கிளும் நானும் மேல் பர்த்லே ஏறிப்

படுத்துட்ட அப்புறமாக் கூட விளையாடிட்டே இருந்தோம்.. தூக்கம் வர்ற வரைக்கும்...''

''நாக்பூர் ஸ்டேஷன்லே வண்டி நின்னப்ப அவர் எனக்கு நிறைய காமிக்ஸ் புக்ஸ் வாங்கித் தந்தார்டி...''

அம்மாகூட ஒரு முறை செல்லமாகக் கேட்டாள்;

''ஏண்டா, டில்லி வரைக்கும் போயிட்டு வந்திருக்கே... டில்லியிலே என்னெல்லாம் பார்த்தேன்னு ஒரு வார்த்தை சொல்ல மாட்டேங்கறே... பேச்சுக்குப் பேச்சு, துணைக்கு வந்த அங்கிளைப் பத்தியே பேசிட்டிருக்கியே...''

அவன், பெரிய மனுஷன் மாதிரி 'சூள்' கொட்டினான்.

''ஆமா போ... டில்லியில என்ன இருக்கு... மாமா பசங்க, என்னை விளையாட்டுல சேர்த்துக்கற சமயத்துல தமிழ்லே பேசிக்கறாங்க. என்கூட 'டூ' விட்டுட்டா— அவங்களுக்குள்ளேயே இந்தியில பேசிக்கிறாங்க...''

மதுரா, தனக்குள் சிரித்துக் கொள்வாள். எப்பொழுதாவது— கண்ணிமைக்கும் பொழுது அந்த இளைஞனின் முகம் மனசுக்குள் நிழலாடும்.

''பாவம், அவர் கூட ஓரிரண்டு வார்த்தையாவது பேசியிருக்கலாம். அவரும்தான் என்னைப் பேச வைக்க எத்தனை முயற்சி எடுத்துகிட்டார்... என்னமோ பேசிட்டா என் கற்பே பறி போயிடற மாதிரி இல்லே உட்கார்ந்திருந்தேன்...''

இதற்குப் பின் கல்லூரிக்குப் போய், மனசு விசாலமடைந்த பிறகு— இதை நினைத்து, இவள் வருந்தியது கூட உண்டு.



சூர்யாவும் டில்லி போய் வந்ததும், ராகவனிடம் இதுபற்றி சொல்லியிருக்கிறான்.

''என்ன பொண்ணுப்பா அது... நான் அவளை சிரிக்க வைக்கணும்னு அவ தம்பிகிட்ட என்னென்னமோ ஜோக்ஸ் எல்லாம் சொல்லிட்டிருந்தேன்... உதட்டைக் கடிச்சிட்டு, ஜன்னல் வழியா வெளில திருப்பின தலையை உள்ளே திருப்பவே இல்லையே... நான் நினைக்கிறேன், 'பிற புருஷனோடப் பேசினாலே கர்ப்பவதியாயிடுவே'யின்னு அவ அம்மா, அவளை பயமுறுத்தியிருப்பாங்களோ...''

எப்பொழுதாவது அவனுக்கு போன் வந்ததாக அவன் தந்தை சொல்லும்போது, வேடிக்கையாகக் கேட்பது போலக் கேட்பான்...

''யாரு... சின்னப் பையன் வாய்ஸா இருந்ததா... ரகுன்னு சொன்னானா...''

ராகவன், இவனது கல்யாணத்தைப் பற்றிப் பேச்சை எடுக்கும் போதெல்லாம்கூட, கண்களைச் சிமிட்டியபடி சொல்லுவான்,

''ரயில்லே வந்த பொண்ணைத் தேடிட்டு இருக்கேன். ஏம்பா... அதுக்கு அப்புறம், ஒவ்வொரு வருஷமும் நான் டில்லி போறேன். ஒரு தடவைகூட அவளைக் காணுமே. ஒரு தடவையிலேயே அவளுக்கு டில்லி அலுத்துப் போயிருக்குமா என்ன...''

ராகவன் ஒரு முறை விளையாட்டில்லாமல், நிஜமான, அப்பாவிற்கே உரிய ஆதங்கத்தோடு கேட்டார்:

''அந்தப் பொண்ணோட ஊர், பேரையாவது விசாரிச்சியாடா...''

'பேரு மதுரான்னு அந்தப் பையன் சொன்னான். ஊரு திருச்சி பக்கத்துல ஏதோ ஒரு கிராமம். ஏம்பா, போய் பொண்ணு கேட்கப் போறீங்களா... அவங்க ஜாதி என்னவோ...''

''ஜாதியப் பத்தி நமக்கென்னடா கவலை?''

''நமக்கு கவலையில்லே. அவங்க வீட்டுல கவலைப்படலாம் இல்லே? ரயில்லே வர்றச்சேயே தன் தாவணித் தலைப்புகூட என் மேல இடிக்காம, ரொம்ப ஆசாரமா வந்தா அவ...''

□

ராகவன் வியந்து போனார்.

''அவளா இவள்?''

''நேத்து மதுரான்னு சொன்னப்பகூட, என் மர மண்டையில சூர்யா சொன்ன பேரு இதுன்னு தோணவே இல்லையே...''

அவர், அவளது தலையில் கட்டு போட்டபடியே கேட்டார்:

''ஊருலே கொண்டு விடட்டுமாம்மா...''

அவள், சூர்யாவை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்து விட்டு, தலை குனிந்தாள்.

''வேண்டாம்.. அனாவசியமா எங்க அப்பாவுக்கு தொந்திரவு கொடுக்க விரும்பலை. ஏதோ, அவங்களைப் பொறுத்த வரைக்கும், நான் சந்தோஷமா இருக்கறதா நினைச்சிட்டிருக்காங்க.. அப்படியே நினைச்சுட்டு இருக்கட்டும். உங்களாலே முடிஞ்சா— எனக்கொரு வேலை வாங்கித் தாங்க. ரொம்பவும் உதவியா இருக்கும்...''

ராகவன் கண்களை மூடி யோசித்தார்.



''என்ன படிச்சிருக்கே?''

''பி.எஸ்ஸி. கெமிஸ்ட்ரி... தவிர டைப், ஷார்ட் ஹாண்ட் தெரியும்...''

அவர், உடனே தனக்குத் தெரிந்த மருந்துக் கம்பெனிக்கு கடிதம் எழுதித் தந்தார். பிறகு, ஏதோ நினைத்துக் கொண்டவராக அவளிடம் சொன்னார்.

''நானே என் கார்லே உன்னை அழைச்சிட்டுப் போய், அந்த கம்பெனி டாக்டர்கிட்ட அறிமுகப்படுத்த றேனே... அப்படியே ஏதாவது ஒரு ஒர்க்கிங் உமன்ஸ் ஹாஸ்டல்லே தங்கிடு... மறுபடியும் இந்த ராட்சஸ கும்பலோட சேராதே!''

முதல் தடவையாக மதுரா சிரித்தாள்.

''இந்தக் கல்யாணத்துக்காக எங்க அப்பா எத்தனையோ ஆயிரம் ரூபாய் செலவு பண்ணியிருக்கார். இப்ப நான் வேலையைத் தேடிட்டு ஒர்க்கிங் உமன்ஸ் ஹாஸ்டல்லே தங்கினா, என் கணவரும், மாமியாரும்- 'உங்க பொண்ணு எவன் கூடவோ ஓடிப் போயிட்டான்னு ஒரு தந்தி கொடுத்தாலும் கொடுத்திடுவாங்க... எங்க அம்மா ஒரு ஹார்ட் பேஷண்ட்...'

''ஓ...''

''வேலை கிடைக்கட்டும். நான் இந்த வீட்டுல என்னால எவ்வளவு நாள் பொறுத்திட்டு இருக்க முடியுமோ இருக்கேன். மிஞ்சி, மிஞ்சிப் போனா, இவங்களாலே என்ன செய்ய முடியும்? அடிக்கத்தானே முடியும்? சகிச்சுகிட்டே இருந்தா, ஒரு நாள் - இல்லையின்னா ஒரு நாள்— இவங்க மனசு மாறிடாதா...''

சூர்யா ஜன்னல் வழியே வெட்ட வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தான். கண்களில் ஈர மினுமினுப்பு.

கையில், ராகவன் எழுதித் தந்த கடிதத்துடன் கிளம்பிய மதுராவிடம் சூர்யா, ஒரேயொரு கேள்வி கேட்டான்.

''ரகு இப்ப என்ன படிக்கிறான்?''

''இன்ஜினீயரிங். ஃபர்ஸ்ட் இயர்... அப்பாவோட நிதி நிலைமையில அவனை, அத்தனைப் பெரிய படிப்பெல்லாம் படிக்க வைக்க முடியாது... ஸ்காலர்ஷிப்லே படிக்கிறான். இப்பக்கூட அடிக்கடி உங்களைப்பத்தி பேசுவான்... மறக்கலே...''

''நீதான் மறந்துட்டே இல்லே?''

அவன், இதை தன் மனசுக்குள்தான் கேட்டுக் கொண்டான். வாய்விட்டுக் கேட்கவில்லை.

ராகவன் சூர்யாவைப் பார்த்து பெருமூச்செறிந்தார். மெதுவாக அவனது தோளைத் தட்டிக் கொடுத்தார்.

''கண்ணா, இந்த விஞ்ஞான யுகத்துல என்னென்னவோ சாகசங்களைப் பண்ண முடியறது... ஆனாலும் இந்தக் கல்யாண விஷயம் மட்டும் நம்ம கையிலே இல்லேடா... இதுக்குத்தான் பெரியவங்க சொல்லுவாங்க... 'ஒருத்தன் பொண்டாட்டிய இன்னொருத்தன் கட்ட முடியாது'ன்னு... டேக் இட் ஈஸி...''

''நான், அவ கிடைக்கலையேன்னு வருத்தப் படறதைவிட, கொஞ்சம்கூட மனுஷத்தன்மையே இல்லாத ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டிருக்காளேயின்னுதான் கவலைப்படறேன்...''

''கொஞ்சம் பொறு. அவனை மனுஷனா மாத்த முடியறதான்னு பார்க்கலாம்...''



ராகவன் எத்தனையோ நம்பிக்கையோடுதான் சொன்னார். முடியவில்லையே!

மதுராவிற்கு வேலை கிடைத்ததும், அவளை பிரேமும், அவன் தாயும் ஓரளவிற்காவது பரிவுடன் நடத்துவார்கள் என்று ராகவன் நினைத்தது பொய்யாய் போயிற்று.

முதல் தேதி. சம்பளம் வந்ததும் அதை அப்படியே புருஷன் கையில் கொடுத்து விடுவாள் மதுரா.

அதற்குப் பின் பஸ் சார்ஜ்ஜுக்குக்கூட அவள், அவன் கையைத்தான் எதிர்பார்த்து நிற்க வேண்டும்...

வீட்டில் சமையலை முடித்துவிட்டு, அவசர அவசரமாய் ஆபீசுக்கு ஓடுவாள். மாலையில் வீடு திரும்பியதும், சமைத்த பாத்திரங்களிலிருந்து அத்தனை வேலைகளும் இவள் வரவுக்காக காத்திருக்கும். மங்களம் டி.வி. பார்த்துக் கொண்டிருப்பாள், இரவு ஏழரை மணிக்கே கௌதம், 'சாப்பாடு ரெடியா' என்பான்.

ஒரு முறை அவள் வாசலில் கோலம் போட வந்தபோது சூர்யா ரோஜாச் செடிக்குப் பதியன் போட்டுக் கொண்டிருந்தான்

இவளைப் பார்த்ததுமே அவன் முகம் பூவாய் மலர்ந்தது...

''குட்மார்னிங்...''

அவள் ஒரு கணம் தயங்கினாள். சுற்றும் முற்றும் பார்த்தபடியே அரைப் புன்னகையோடு மெள்ளச் சொன்னாள் :

''குட்மார்னிங்...''

அவள் கோலத்தைப் போட்டுவிட்டு உள்ளே செல்ல திரும்ப— சோபாவில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த பிரேம், தலையைத் திருப்பா மலேயே அவளது கையை இறுகப் பற்றினான்.

"ஐயோ... விடுங்க!"

"எவனுக்குடி குட் மார்னிங்..."

"மாடி வீட்டிக்காரர் பிள்ளை. ஏதோ காலை நேரத்துல 'விஷ்' பண்ணினார். பதிலுக்கு நானும் 'விஷ் பண்ணினேன். அது ஒரு தப்பா?"

"மாடி வீட்டுக்காரன் பிள்ளை முத்தம் கொடுப் பான் நீயும் பதிலுக்கு முத்தம் கொடுப்பியா?"

"ச்சீ... என்னங்க பேச்சு இது?"

அவன், அவளை வீசிய வேகத்தில் சுவரில் போய் மோதினாள் அவள்.

அந்த நேரத்தில் இந்தக் காட்சியை பார்த்தபடி தோட்டத்தில் பிரமை பிடித்தாற் போல அமர்ந் திருந்த சூர்யா பதறி எழ, கையில் ரோஜா முள் கிழித்து ரத்தம் கசிய...

அவன், அவர்கள் வீட்டை நோக்கி அடியெடுத்து வைக்கும் முன் மாடியிலிருந்து ராகவன் அழைத்தார்.

"சூர்யா... இங்கே வா..."

"அப்பா..."

"இங்கே வாடா..."

அவன் அவசரமாய் மாடிக்குப் போக, ராகவன் கலங்கிய கண்களுடன் சொல்கிறார்.



"நான் எல்லாத்தையும் பார்த்துட்டுதான் இருந் தேன்..."

"நான் குட்மார்னிங் சொன்னது தப்பா... அந்த ஆள் இவளை வேணும்னே டீஸ் பண்றான்பா—"

"நீ குட் மார்னிங் சொன்னதே, அவளுக்கு பேட் மார்னிங்கா போயிடுத்து போ..."

"அப்பா..."

இதற்கடுத்த சில நாட்களில்— மதுரா ஒரு மாலை நேரத்தில், தன் வீட்டுப் புழக்கடையில் தலையை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு வாந்தியெடுப்பதும் மங்களம் கத்துவதும் ராகவன், சூர்யா காதுகளில் விழுகிறது.

"கல்யாணமாகி வந்து ஆறு மாசம்கூட ஆகல்லே. இப்பத்தான் வேலையின்னு ஒண்ணு கிடைச்சு, மாசம் ரெண்டாயிரம் ரூபாயைக் கொண்டு வந்து கொடுக் கறே... அதுக்குள்ள இது வேற கல்யாணமாக்கும்... எத்தனை நாளாறது..."

"அம்பத்தஞ்சு..."

"குளிச்சு முப்பது நாளுலே— குனிஞ்சு உப்பெடுக்க முடியல்லையின்னாளாம் ஒருத்தி... அந்த மாதிரி இன்னும் ஒரு வாரத்துலேயே, நீ— 'ஹா ஹு'-ன்னு அலட்டிப்பே... என்னால வீட்டு வேலை ஒண்ணையும் செய்ய முடியாது. இந்த விஷயத்தை, உன் புருஷன் காரன் கிட்ட சொல்லு, 'முன்னாடி சனியனை கலைச் சிட்டு வாடி'யின்னு சொல்லுவான்..."

"என்னது?"

"ஆமா... உங்களுக்கென்ன வயசாயிடுச்சு... பிள்ளைக்கு இப்ப என்ன அவசரம்?"

அன்றிரவே— மீண்டும் யுத்தம் ஆரம்பமாயிற்று.

"நாளைக்கு காலையில ரெடியா இரு... நர்ஸிங் ஹோமுக்குப் போய் கலைச்சிட்டு வந்துடலாம்..."

—இது பிரேம்.

"வேண்டாம்... ப்ளீஸ்... முதல் குழந்தை... அதை வளர்க்கற சிரமம் எதையுமே நான் உங்ககிட்ட காட்ட மாட்டேன்..."

"என்னடி, அழுது மாய்மாலம் பண்றே... என் அனுமதி இல்லாமப் பெத்துக்கற குழந்தைய— என் குழந்தையின்னு கூட நான் வெளியில சொல்ல மாட்டேன்... யார் கிட்ட வாங்கிட்டு வந்தாளோன்னு தான் சொல்லுவேன்..."

"ஐயோ!!"

"இந்த வீட்டுல என்னிக்குமே என் பேச்சுக்கு எதிர் பேச்சு கிடையாது. கிளம்பு..."

மறுநாள் முழுவதும் மதுராவை வெளியில் பார்க்கவே முடியவில்லை..."

இது போல எத்தனை முறை... குறைந்தது மூன்று முறையாவது இருக்கும்.

நாலாவது தடவைதான்— இதோ, இந்த தீபிகா.

பிரேமிடம் அடியும் உதையும் பட்டுப் பட்டு, மதுராவின் நெஞ்சம் உடலும் காய்த்துப் போய் விட்டதென்று ராகவன், சூர்யாவிடம் சொல்வார்...

ஒரேயொரு முறை அவளைத் தனியே சந்திக்க நேர்ந்த போது— ராகவன் கேட்டார்.



"ஏம்மா, நான் கேட்கறேனேன்னு தப்பா நினைக்காதே... இந்த மனுஷன் கிட்ட ஒவ்வொரு தடவையும் பிள்ளைய வாங்கிட்டு, அப்புறம் அதைக் கலைச்சு கலைச்சு, உன் உடம்பைப் புண்ணாக்கிக்கறதை விட— பேசாம, குழந்தையே வேண்டாம்னு ஆபரேஷன் பண்ணிட்டு வந்துடேன்..."

மதுரா, அவரைப் பார்த்து மெள்ளச் சிரித்தாள்.

"உங்களுக்குப் தெரியாது... ஏன், எங்க மாமியாருக்கே கூடத் தெரியாது... என் வயித்துல இப்ப மூணு மாசக் குழந்தை இருக்கு... இத்தனை நாள் மறைச்சுட்டேன். எப்படியும் இனிமே மறைக்க முடியாது..."

"என்னம்மா இது விபரீத விளையாட்டு... அவன் சுபாவம் தெரிஞ்சும்..."

"தெரிஞ்சுதான் சுமக்கறேன்... பிரசவத்தை சாக்கு வச்சிட்டு ஊருக்குப் போறவ திரும்பி வரப் போறதில்லே!"

"மதுரா..."

"தப்பா எதுவும் நினைக்காதீங்க... நான் தற்கொலை பண்ணிக்க மாட்டேன்... இவர் கிட்டயிருந்து எனக்கு விடுதலை வேணும்னு கேஸ் போடப் போறேன்..."

"குழந்தை இருந்தா - கேஸ் ரொம்ப சிக்கலாயிடும்மா... குழந்தைய அது வளர்ற வரைக்கும்தான் உன்கிட்ட ஒப்படைச்சு வைப்பாங்க. அப்புறம், அது பெத்தவனுக்குத்தான் சொந்தம்னு கோர்ட் தீர்ப்பு சொல்லிட்டா..."

"பெத்தவனே— யார்னு நானில்லே சொல்லணும்?"

''மதுரா...''

''நான் எதுக்கும் துணிஞ்சிட்டேன்... குழந்தையக் கொடுன்னு கேட்க அவங்களுக்கு உரிமையில்லே... அப்படியும் மிஞ்சிப் போச்சுன்னா—இந்தக் குழந்தைக்கு அப்பா— மிஸ்டர் பிரேம் இல்லையின்னு அடிச்சு சொல்லுவேன்...''

உண்மையிலேயே பிரேமும், மங்களமும்— மதுரா கருவுற்றிருந்த விஷயம் தெரிந்ததும் அதிர்ந்துதான் போனார்கள்.

''ஏண்டீ இதை அப்பவே சொல்லலே?''

''அவசியமில்லையின்னுதான் சொல்லலே... சுமக்கறவ நான் என் வயித்துல குழந்தை வளர்ற விஷயம் எனக்குத் தெரிஞ்சாப் போதும்னுதான் சும்மா இருந்துட்டேன்...''

''பாருடா... பாருடா...என்ன ஒரு திமிர் இருந்தா இப்படி அவ பேசுவா... நீயும் கேட்டுட்டிருக்கியே... வெட்கமாயில்லே?''

''ஏய், இந்தக் குழந்தையப் பெத்துட்டா அதை வளர்க்கற பொறுப்போ, பாதுகாக்கற பொறுப்போ என்னுதில்லே... ஏன், குழந்தையே என்னுதில்லையின்னு நாலு பேரறிய சொல்லுவேன். என் இனிஷியலைக் கூடத் தரமாட்டேன்...''

''ஸாரி மிஸ்டர் பிரேம்... இதுக்கெல்லாம் இனிமே கலங்கி அழ நான் ஒண்ணும் பழைய மதுரா இல்லே... கொஞ்ச நேரம் முன்னாலே சொன்னதையே வெளியே தாராளமா சொல்லுங்க... அதனால வெட்கப்படப் போறவ நானில்லே... கோர்ட்லே வேணுமானாலும்



வந்து சொல்லக் காத்துட்டிருக்கேன். ஏன்னா, இது நிஜமாவே உங்க குழந்தை இல்லே!''

''ஐயய்யோ... என்னடா சொல்றா இவ?''

மங்களம் அலற...

அவளை அடிக்க பாய்ந்து வந்தவனை, எங்கிருந்தோ அப்பொழுதுதான் வீட்டுக்குள் நுழைந்த சூர்யா தன் வலுவான கரத்தினால் தடுத்து நிறுத்தினான்.

''ஓ... நீதான் என் பெண்டாட்டிக்கு கர்ப்ப தானம் செஞ்சவனோ...''

பிரேமின் கேள்வி, சூர்யாவை அதிரச் செய்தது.

## 4

''என்னடா சொன்னே...''

கொதித்துப் போய் விட்டான் சூர்யா. மதுரா தான் அவனிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறாள்.

''தயவு செஞ்சு, இங்கிருந்து போயிடுங்க. அவருக்கு கோபத்துல இப்படித்தான் அப்பப்ப புத்தி புரண்டு போயிடும்...''

''என்னை பைத்தியம்கறயாடீ?''

அவன், மதுராவின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

"இல்லே... மிருகம்னு சொல்றேன். மிருகத்துக்கு கூட பாசம் தெரியும்... நன்றி இருக்கும்... உங்களுக்கு அது கூட இல்லையே..."

திடீரென கௌதம், சூர்யாவின் பக்கம் பாய்ந்தான்.

"எங்க வீட்டுச் சண்டையில தலையிட நீ யாருடா?"

"கண் முன்னாடி ஒரு பொண்ணைக் கொடுமைப் படுத்தறதை பார்த்துட்டு சும்மா போற அளவுக்கு என் மனசு கல்லாயிடல்லே..."

"ஆமா... அவன் மனசு பஞ்சு மெத்தை... அதான் இவ புரண்டுட்டு வந்திருக்கா. இங்கே பாருடி... இன்னிக்கே ஒரு தந்தி அடிக்கப் போறேன் உங்க அப்பனுக்கு உடனே வரச் சொல்லி..."

"எதுக்கு... எங்க ஊருக்குப் போக எனக்குத் தெரியும்..."

"அப்ப கிளம்பு..."

"எப்ப கிளம்பணுமோ அப்பத்தான் கிளம்புவேன். அதுக்கு முன்னாலே, இத்தனை வருஷமா நான் உங்க கிட்ட கொடுத்த சம்பளத்துலேயிருந்து எங்க வீட்டுல எனக்கு சீராகக் கொடுத்த வெள்ளிக் குத்துவிளக்குல இருந்து— மணைப்பலகை வரைக்கும் அத்தனையையும் என் கிட்ட ஒப்படையுங்க... போறேன்..."

அன்றிரவு சூர்யாவும், ராகவனும், மதுராவின் திடீர் துணிச்சலை நினைத்து வியந்து போனார்கள்.

மறுநாள்—



மதுரா ஆபீசுக்குக் கிளம்பி விட்ட பின் அப்பாவியான அவளது அப்பாவும், இன்ஜினியரிங் படிக்கும் அவளது தம்பியும் எதேச்சையாக வந்து சேர... மங்களமும், கௌதமும் அவர்களை ஒரு பிடி பிடிக்கிறார்கள்.

"நல்ல குடும்பம், நல்ல குடும்பம்னு சொல்லி தரகர் ஒரு '——'ளை எங்க தலையிலக் கட்டிட்டான். நாங்க எல்லாரும் வயித்துக்கு இல்லையின்னாலும், ஒரு ஈரத் துணிய வயித்துல சுத்திட்டு, கம்முனு படுப்போம். உம்ம பொண்ணு என்னடான்னா எவன் கிட்டேயோ போய், வயித்துல வாங்கிட்டு வந்து நிக்கறா."

"அம்மா!"

"அது மட்டுமில்லே ஓய், இந்த அவமானத்தை கோர்ட் படியேறிச் சொல்லச் சொன்னாலும் சொல்லுவாளாம்... அவளுக்கு என்ன ஒரு நெஞ்சழுத்தம் இருந்தா இப்படியொரு வார்த்தையச் சொல்லுவா... கல்யாணமாகி இத்தனை நாளா— ஒரு நாள் கிழமைக்குக்கூட பொறந்த வீட்டுக்குப் போக மாட்டேன்னு அழிச்சாட்டியம் செஞ்சதெல்லாம்— இப்படியொரு தொடர்பை வச்சிட்டிருக்கறதுனாலத்தான்னு தெரியாமப் போயிடுச்சே."

மதுராவின் தம்பி பிரமித்து நின்றான்.

அப்பாவோ, முகமெங்கும் முத்து முத்தாய் வியர்க்க ஆத்திரத்தில் உடல் அதிர நிற்கிறார்.

"எங்கே அவ?"

"யாருக்குத் தெரியும்? ஆபீசுக்குப் போறேன்னு சொல்றா... அவ ஆபீசுக்குத்தான் போறாளோ... இல்லே வேற எங்கேயாவதுதான் போறாளோ...

யாரோ, இவளை சம்பளம் கொண்டு வந்தாத்தான் வீட்டு வாசப்படி மிதிக்கலாம்னு கண்டிஷன் போட்ட மாதிரி... உடம்பை வித்து கொண்டு வர்ற பணம் யாருக்கு வேணும் சுவாமி?''

அந்த மனிதர் 'சட்'டென வெளியே வந்துவிட, ராகவன் மாடி பால்கனியிலிருந்து கையைத் தட்டினார்...

''யாரு...''

''நான், இந்த வீட்டு சொந்தக்காரன். ஒரு நிமிஷம் சார், மேல வந்துட்டுப் போகணும்.''

''எதுக்கு...''

மனிதர் இன்னமும் பதட்டத்திலிருந்து விடுபட வில்லை என்பது தெரிந்தது. சின்ன சூட்கேஸ்ஸைத் தூக்கிக் கொண்டு அவரது நிழலாய் தொடர்ந்த பிள்ளையின் முகத்திலும் பதற்றம்.

சூட்கேஸ்ஸின் ஒரு பக்க பூட்டு வரும் வழியில் பிய்ந்து விட்டது போல...

பல்லில்லாக் கிழவனின் கோணல் சிரிப்பு மாதிரி அந்த இக்கட்டான நேரத்திலும் ராகவனின் மனசுக்குள் அந்த சூட்கேஸ்ஸின் வாய் பிளப்பு— சிரிப்பை உண்டு பண்ணியது.

''ஒரு நிமிஷம் வந்துட்டுப் போங்க சார்... ப்ளீஸ்...''

''தாங்க்ஸ். நாங்க இப்பவே ஊருக்குக் கிளம்பிட் டிருக்கோம்.''

அப்பாவுக்கு ஒரு படி மேலேயே மகன் பிடிவாத மாய் பதிலளித்தான்.



''அம்பி... உன் பெயரென்ன?''

''ரகு... ரகுராமன்.''

''டில்லிக்கு நீயும், உங்க அக்காவுமா போனப்ப சூர்யான்னு ஒரு பிரகஸ்பதிய நம்பி, உங்க அப்பா உங்க ரெண்டு பேரையும் அனுப்பினாரே, ஞாபக மிருக்கா?''

இளைஞனின் முகத்தில் கோடி சூர்ய பிரகாசம்.

''சார் நீங்க?''

''அந்த பிரகஸ்பதியோட அப்பன்காரன்தான் நான் — இப்பவாவது உன் அப்பாவை அழைச்சிட்டு மேலே வர்றியா.''

''அப்பா, நான் சொல்வேனில்லே?''

பையன் அதற்கு மேல் காத்திருக்கவில்லை. சூட்கேஸ்ஸின் கனத்தையும் பொருட்படுத்தாமல் இரைக்க இரைக்க மாடியேறி வருகிறான். பெரிய வருக்கு வேறு வழியில்லை... மகனைப் பின் தொடர்ந்தார்.

ராகவன், முதலில் அந்த இளைஞனின் கையி லிருந்த பெட்டியை வாங்கி ஒரு பக்கமாய் வைத்தார். பெரியவரைப் பார்த்து, இரு கைகளையும் குவித்தார்.

''உங்களைப் போன்ற பெரிய மனுஷன் கால் படறதுக்கு என் வீடு கொடுத்து வச்சிருக்கணும்.''

''பெரிய மனுஷனா... நானா புழுவைவிடக் கேவல மாயிட்டேன், சித்த நேரத்துக்கு முன்னாலே இருந்து.''

அவர் பொல பொலவென அழுதே விட்டார்.

''இங்கே... கொஞ்சம் நான் சொல்றதையும் காது கொடுத்து கேட்கணும். நானும் இதோ இந்த மாடியிலதான் இருக்கேன். கீழே நடக்கறது முழுக்க எனக்குத் தெரியும். ஒரே வார்த்தையில சொல்லப் போனா— உங்க பொண்ணை கோவில்லே வச்சுக் கும்பிடணும். உண்மையிலேயே அவளைப் பெற, நீங்க தபஸ் பண்ணியிருக்கணும் சார்.''

வந்த மனிதர் ஒன்றும் புரியாதவராய் மிரள மிரள விழித்தார்.

''நான் ஒரு மடையன். வந்தவங்களை பல் தேய்ச்சாச்சா, காபி குடிச்சாச்சான்னு கேட்காம...

''அப்ப காபி கொண்டு வர்றேன்— அம்பீ, காபி குடிப்பே இல்லே?''

''அதைத் தவிர வேற எதுவும் குடிக்க, எங்க அப்பா அனுப்பற பணம் போதாது சார்...''

ராகவன், நின்று அவனைப் பார்த்துப் புன்னகைத்தார்.

''வெரிகுட். இப்படித்தான் எல்லாத்தையும் ஸ்போர்ட்டிவ்வா எடுத்துக்கணும். உனக்கு ஸ்டிராங் காபியா?''

''எஸ்...''

''அப்பாவுக்கும் ஸ்டிராங்க். ஆனா, சர்க்கரை இல்லாம... ஏன்னா டயபடீஸ் பேஷண்ட் போல இருக்கே...''

பெரியவர் முகத்தில் மெல்லிய புன்னகை.

''சார், சொன்னாக் கோவிச்சுக்க கூடாது... இந்த காலை நேரத்துல— இன்னும் வெய்யில் உச்சிக்கே வரல்லே... அதுக்குள்ளே வியர்வை வெள்ளமாய்



பெருகறது... கை ரெண்டும் தவுல்காரருக்கு உதர்ற மாதிரி உதர்றது... எல்லாத்துக்கும் மேல, வேஷ்டிய டப்பா கட்டு கட்டிட்டிருக்கீங்களா.. ஆடு சதையில பச்சை நரம்பெல்லாம் பந்து பந்தா சுருட்டிட்டு இருக்கு. சாதாரணமா தினமும் ஊசி போட்டுக்கறவங்களுக்குத்தான் அப்படி ஆகும். நிச்சயமா நீங்க பெதிடின் போட்டுக்க மாட்டீங்க. ஹெட்மாஸ்டர் சம்பளத்துல தையல் ஊசி வாங்கறதே பெரிய விஷயம். இத்தனை செலவுலேயும் நீங்க ஊசி போட்டுக்கறீங்கன்னா அது இன்சுலினாத்தான் இருக்கணும்...''

''ஆமா...''

''நீங்களே போட்டுக்கறீங்களா...''

''அத்தனைக்கு ஏது தைரியம். கம்பவுண்டர்தான் போடறார்...''

''டயபடீஸ் ஒண்ணும் பெரிய வியாதி இல்லே சார்... அதை நாம ஒரு கட்டுக்குள்ள அடக்கி வச்சிருக்கற வரைக்கும் நாமதான் அதுக்கு ராஜா. கொஞ்சம் நாக்கை அலைய விட்டுட்டோமோ .. அப்புறம், அது நமக்கு ராஜாவாயிரும். நீங்க கவலையே படாதீங்க. என்கிட்ட வந்தாச்சு இல்லே... உடம்பு, மனசு எல்லாத்துக்கும் தரோவா செக் பண்ணி ட்ரீட்மெண்ட்டை ஆரம்பிச்சுடறேன்.''

ராகவன், கீழ் வீட்டுக்கு ப்ரேம், மதுரா வந்த நாளிலிருந்து, அன்று காலை வரையில் நடந்த விவரத்தை சொல்ல—

பெரியவர்— பார்க்கத்தான் பெரியவராக இருந்தாரே தவிர— ரொம்பவும் இளகின மனசு. மேல் துண்டால் கண்களை ஒற்றியபடியே கேட்டார்:

"என் குழந்தை இத்தனை கஷ்டப்படறாளா... இதையெல்லாம் எனக்கு ஏன் அவ எழுதலே?"

"அநாவசியமா உங்களையும் கலங்கடிக்க வேண்டாமேன்னு தான்."

"இப்ப அவ என்ன பண்ணப் போறா..."

"தன் நகை, பண்டம், பாத்திரம் எல்லாத்தையும் திருப்பித் தரச் சொல்றா.. அத்தனையையும் வாங்கி, என் வீட்டுலப் போட்டுட்டு, பிரசவத்துக்கு ஊருக்குப் போகப் போறா...இவங்க தர மாட்டேன்னு சொன்னா கேஸ் போடப் போறா... டைவர்ஸ் கிடைச்சாலும் குழந்தைய யார் வளர்க்கறதுங்கற பிரச்னை வரும்... வீம்புக்காகவாவது உங்க மாப்பிள்ளை குழந்தைய தன் கிட்ட கொடுக்கனும்னு சொல்வான். அதுக்காகத் தான் அவ, தலைக்கு மேல வெள்ளம் போயாச்சு; இனிமே சாண் போனா என்ன முழம் போனா என்னன்னு துணிஞ்சிட்டு... 'குழந்தையோட அப்பா நீ இல்லையின்னு நான் எங்கே வந்து சொல்லணும்னாலும் சொல்றேன்... இப்ப என்ன செய்வே'ன்னு கேட்கறா..."

"ராம... ராம..."

"ராமனை எதுக்காக கூப்பிடறீங்க... அவன், அசோக வனத்துல தன்னையே நினைச்சு உருகின சீதையையே அக்னி பிரவேசம் செய்யச் சொன்னவன் தானே... அதுக்கு பதிலா சீதையோட பேரைச் சொல்லுங்க..."

அன்று முழுக்க அவர்களுக்கு குளியல் சாப்பாடு எல்லாம் மாடியில்தான். சூர்யாவைக் கண்டதும் ஓடிப் போய் கட்டிக் கொண்டான் ரகு.



மதுரா ஆபிசிலிருந்து வந்ததும், ரகு போய் அவளை மாடிக்கு அழைத்து வர...

"நீ இருடி... அந்தக் கிழவன் என்னைத் தேடி என் வீட்டுக்கு வரட்டும்..."

-இப்படி பிரேம் கத்த...

"பார்த்தியாடா... பார்த்தியா... நீ சொல்லச் சொல்ல கேட்காம ஓடறா பார்த்தியா..."

மங்களம் அலற...

"அடுத்த அடி எடுத்து வச்சா... இங்கே கொலை விழும்..."

கௌதம், மதுராவின் மணிக்கட்டை இறுகப் பிடிக்க...

ரகு, தானும் ஓர் ஆண் பிள்ளைதான் என்பதை நிருபிக்க - கௌதம் கையில் தனது புறங்கையினால் ஓங்கி ஒரு தட்டு தட்டினான்...

"தாலி கட்டின அயோக்யன் அங்கே உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையாம கத்தறான். நீ யாருடா எங்க அக்கா கையைப் பிடிக்க..."

அன்று வெளியே வந்தவள்தான் மதுரா, அப்போதே அவளுக்கு ஏழு மாதம்.

அவள், அப்பாவிடம் தீர்மானமாகச் சொன்னாள்.

"இனிமேல் நான் இங்கே வரப் போறதில்லே. வந்தாலும், அந்த வீட்டுக்குள்ளே நுழையப் போறதில்லை. என்னோட நகை, பண்டம், பாத்திரமெல்லாத்தையும் வாங்கித் தாங்க... நாளைக்கு என் குழந்தைய படிக்க வச்சு ஆளாக்க - அந்தப் பொருள் எல்லாம் உபயோகப்படும்..."

''டைவர்சுக்காக அப்படியொரு பொய்யைச் சொல்லப் போறியா குழந்தை?''

''வேற வழியில்லே... நான் அந்தப் பொய்யை சொல்றதாலே நம்ம குடும்பமானம், தங்கைகளோட எதிர்காலம் எல்லாமே வீணாயிடும்னு நீங்க கவலைப் பட்டா இப்பவே டாக்டர் சாரைக் கேட்டு, ஏதாவது விஷத்தை வாங்கி சாப்பிட்டுடறேன்...''

''என் கையாலே எதைக் கொடுத்தாலும் ஏற்பது இகழ்ச்சிங்கற மாதிரி 'வேண்டாம், வேண்டாம்'னு சொல்லுவியே... இப்ப இதுக்கு மட்டும் வேணு மாக்கும். நான் தரமாட்டேன்...''

ராகவன், சிறு குழந்தை மாதிரி முறுக்கிக்கொண் டவர், மதுராவின் தந்தையிடம் சொல்கிறார்.

''சார், உங்களோட மத்த பொண்ணுங்களுக்கும் கல்யாணம் ஆகணும். உங்க மானம் கப்பலேறாம இருக்கணும். அவ்வளவுதானே... எல்லாம் தன்னாலே நடக்கும். என்கிட்ட பொறுப்பை விட்டுட்டு, மதுராவை பிரசவத்துக்கு ஊருக்கு அழைச்சிட்டுப் போங்க. ஏற்கனவே அவ பலஹீனமா இருக்கா... வீட்டுலகூட இதைப்பத்தி இப்ப சொல்ல வேண்டாம். எனக்கென்னவோ, விஷயம் கோர்ட்டுக்கே போகாமத் தீர்ந்துடும்னுதான் தோணறது...''

''எப்படி...''

''எப்படியோ... குறளி சொல்றது...''

ராகவன் புன்னகைத்தார்.

அன்று, அவள் பிறந்த வீட்டுக்குப் போவதாக மாமியாரிடம் கூடச் சொல்லிக்கொள்ளாமல்தான் சென்றாள்.



மறுநாள் காலையில்தான் பிரேமிற்கே விஷயம் தெரியும்...

வீட்டு வாசலில் வந்து நின்று, மாடியைப் பார்த்து கத்தினான்.

''கீழே இறங்கி வாடீ!''

சூர்யாதான், பால்கனியில் நின்றபடி அவனுக்கு பதில் குரல் கொடுத்தான்.

''அவ நேத்தே, அவங்க அப்பாவோட ஊருக்குக் கிளம்பிப் போயாச்சுடா...''

''யாரைக் கேட்டுட்டுப் போனா அவ?''

''மிருகங்கள்கிட்ட எல்லாம் சொல்லிட்டுப் போற அளவுக்கு அவ பைத்தியமில்லே!''

''யூ... யூ... பிளடி... உனக்கும் அவளுக்கும் இருக் கற கள்ளக் காதலை, உன் ஆபீஸ்லே வந்து சொல் றேன் பாரு...''

''என்னிக்கு எங்க ஆபீசுக்கு வர்றேன்னு சொல்லு. நான் ஸ்வீட் வாங்கிட்டுப் போகணும்... இல்லை யின்னா எங்க ஆபீஸ்லே என்னை அல்பமா நினைச்சுப் பாங்க...''

சூர்யா விஷமமாய் பதில் சொல்லிக் கொண்டிருக் கும்போதே - ராகவன், மகனை ரகசியமாய் அழைத் தார்!

''அவனோட அதிகமாப் பேச்சு வச்சுக்காதே சூர்யா... இன்னும் கொஞ்ச நாளைக்காவது உயிரோட இருக்கட்டும்!''

சூர்யா திடுக்கிட்டான்.

''என்ன சொல்றீங்க?''

''ஏற்கனவே நிறைய குடிக்கிறவன்... மதுரா சம்பாதிச்சு தந்த பணத்தையெல்லாம் குடிச்சே தீர்த்திருக்கான்னு நினைக்கிறேன்... பத்து நாள் முந்தி, வயித்தை வலிக்கிறதுன்னு டாக்டர் கிருபா சங்கர் கிட்ட போயிருக்கான். 'லிவர் ரொம்ப வீங்கியிருக்கு... குடிப்பியா'ன்னு அவர் கேட்டிருக்கார்... 'ஏதோ கொஞ்சம்... அப்பப்ப'ன்னு பொய் சொல்லியிருக்கான். பேச்சு வாக்குல, 'எங்கே இருக்கே'யின்னு டாக்டர் கேட்டதுக்கு, நம்ம வீட்டு அட்ரஸ்ஸை சொல்லியிருக்கான்... 'அட, அது டாக்டர் ராகவன் வீடில்லையா'ன்னு இவர் கேட்கப் போக, அவன் என்னைப்பத்தியும், உன்னைப்பத்தியும் கண்டதையும் சொல்ல...''

''கண்டதையும்னா...''

''அதான், இப்ப சித்த முந்தி சொன்னானே... அதே வார்த்தை... 'என் பெண்டாட்டியத்தான் டாக்டர் பிள்ளை வச்சுட்டிருக்கான் .. அந்த வெட்கக் கேட்டை மறக்கத்தான் குடிக்கிறேன்'னு...''

''ஐயய்யோ... என்னப்பா இது?''

''என்ன, என்னப்பா... கிருபா சங்கர், அவனை அனுப்பிய கையோட எனக்கு போன் பண்ணி, 'என்னங்க இதெல்லாம்'னு கேட்டார். நான் 'பளிச்'சுனு சொல்லிட்டேன்... 'அதெல்லாம் ஒண்ணுமில்லே... ஒரு குடிகாரனுக்கு வாழ்க்கைப்பட்ட தேவதை... கூடிய சீக்கிரம் என் மருமகளாகப் போறா'ன்னு சொன்னேன்... அதெல்லாம் கிருபா புத்திசாலி - 'சட்'டுனு புரிஞ்சுப்பார். அப்பத்தான் சொன்னார். 'ஆளை டெஸ்ட் பண்ணிப் பார்த்தா - உடம்புல ரத்தத்துக்குப் பதிலா ஆல்கஹால்தான் ஒடுதோன்னு சந்தேகமாயிருக்கு... லிவர் ரொம்ப வீங்கியிருக்கு. யூரின் ஆரஞ்ச்



கலர்லே போறதுன்னான்... கொஞ்ச நாளைக்கு பாட்டில் பக்கம் போகாம, ஏதாவது ஆஸ்பிடல்லே படு... இப்படியே விட்டா, மஞ்ச காமாலையிலக் கொண்டு விட்டுடும். குடிகாரனோட மஞ்சக் காமாலை அவன் கழுத்துல விழற தூக்குக் கயிற்றுக்கு சமம்'னு சொல்லிப் பார்த்தேன்... மருந்து எழுதிக் கொடுத்தேன்... ஆனா, நான் சொன்னபடி கேட்டானான்னுதான் தெரியல்லேயின்னு சொன்னார்...''

''என்னப்பா இது... ரொம்ப சாதாரணமா இதைச் சொல்றீங்க?''

''இருக்கட்டும்பா. கலியுகத்துல நாமும்தான் நரகாசுரவதத்தைப் பார்ப்போமே...''

சூர்யா சீறினான்.

''இதைச் சொல்ல வெட்கமாயில்லே உங்களுக்கு? ஒரு டாக்டர், ஒரு பேஷண்ட் சாகறதை சந்தோஷமாப் பார்த்திட்டிருக்கறதாவது... 'மெடிகல் கிட்'டை எடுத்திட்டு வாங்க... கீழே போய் பார்ப்போம்...''

ராகவன், ஒரு கணம் இமைக்காமல் மகனையே பார்த்தார்.

''என்ன இருந்தாலும் என் பிள்ளை தங்கம்தான். நானே கிளம்பிட்டுத்தான் இருக்கேன். நீ என்ன சொல்றேயின்னு பார்க்கத்தான் விளையாட்டா...''

''எதுல விளையாடறதுன்னே இல்லையாப்பா...''

அவர்களிருவரும் கீழ் வீட்டிற்குள் நுழையும் போதே - புழக்கடையில் ப்ரேம் வாந்தியெடுக்கும் சத்தம் கேட்டது.

மங்களம், வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு, மகனைத் தேடி ஓடினாள்.

''எங்கே வந்தீங்க...''

கௌதம், கையிலிருந்த புத்தகத்தை விட்டெறிந்து விட்டு எழுந்து வந்தான்.

இதற்குள், மங்களத்தின் கைத்தாங்கலில் பிரேம் உள்ளே வர...

ராகவன், குரலில் நட்பைக் குழைத்துக் கொண்டு அவனிடம் சொன்னார்.

''டாக்டர் கிருபாசங்கர் எல்லாத்தையும் சொன்னாரிப்பா... நீ ட்ரீட்மெண்ட்டுக்கே போகல்லையின்னு நினைக்கிறேன்... அதான்—''

''நான் இருக்கேனா - செத்துட்டேனான்னு பார்த்துட்டு வரச் சொன்னாரா...''

''உன் கோபத்தை எல்லாம் அப்புறம் வச்சுக்க. இப்பவே, நீ ஏதாவது ஒரு ஹாஸ்பிடல்லே சேர்றதுதான் நல்லது...''

''ஐயய்யோ... என் பிள்ளைக்கு என்ன...''

மங்களம் அழ—

''அது வந்தும்மா...''

ராகவன் தயங்கியபடி விவரிக்கத் தொடங்க, பிரேம், வயிற்றை ஒரு கையால் பிடித்துக் கொண்டே கத்தினான்.

''எல்லாம் எனக்குத் தெரியும்டா... என் பெண்டாட்டி மூலமாவே எனக்கு சோத்துல கொஞ்சம், கொஞ்சமா விஷத்தைக் கலந்து கொடுத்துட்டு, இப்ப குடிச்சு, குடல் விங்கிப் போச்சுன்னு கதைக்கிறீங்களா... நான் எல்லார் கிட்டயும் சொல்லுவேன். ஒண்ணு மட்டும் நினைப்புல வச்சுக்குங்க. என்னதான்



மதுராவுக்கு நீங்க எல்லாரும் சேர்ந்து மறுவாழ்வு கொடுத்தாலும் - என்னோட ஒரு வார்த்தை - அவ வாழ்க்கையையே அழிச்சிடும். நான் போனாலும் பழி வாங்காம இருக்க மாட்டேன். பார்த்துட்டே இருங்க... என்னை நினைச்சு, நினைச்சு கதறி கதறியே சாகப் போறா அவ...''

பேசும் போதே மூச்சு வாங்குகிறது அவனுக்கு.

# 5

மதுராவுக்கு பெண் குழந்தை பிறந்து இருபது நாட்கள் ஆகியிருக்குமா... அவ்வளவுதான் இருக்கும். அதற்குள் பிரேம் இறந்துவிட்ட செய்தி வந்துவிட்டது.

'போவதா, வேண்டாமா...'

பெற்றவருக்கும், மகளுக்கும் ஒரே குழப்பம்.

''உடலை தகனம் செய்வதற்கு முன் - ஒருமுறை வந்து எட்டிப் பார்த்து விடவும்...''

ராகவன்தான் மதுராவுக்கு தந்தியடித்திருந்தார். இருபது நாளையக் குழந்தையை எடுத்துக் கொண்டு, மதுரா அப்பாவுடன் வந்தாள்.

குழந்தையை மாடியிலேயே வைத்துக் கொண்டார் ராகவன்.

இதற்குள் கௌதமும் மங்களமும் - 'இது கொலையோ' என்கிற சந்தேகம் இருக்கிறது என்கிற புரளியைக் கிளப்பி, பிரேமின் உடலை, பிரேத பரிசோ

தனைக்கு போலீஸ் அனுப்பி - கடைசியில் இது அபரிமிதமானக் குடியினால் வந்த சாவுதான் என டாக்டர்கள் அறிவித்து...

மதுரா, வீட்டுக்குள் நுழைந்த போது மங்களம், தன் உறவினர்களிடமெல்லாம் சொல்லி அழுது கொண்டிருந்தாள்.

''அவன் செத்ததே இந்தப் பாவியாலேதாண்டி... அவளுக்கு இன்னொரு புருஷன் கிடைப்பான்... எனக்கு போன பிள்ளை வருமா?''

''அவன் குடிக்கறான்கறதே எனக்குத் தெரியாது... ராத்திரி எல்லாம் ஏதோ பாட்டிலை எடுத்து வாயிலே கவுத்துட்டு கிடப்பான்... என்னடான்னா - வயித்து வலிக்கு மருந்துன்னே சொல்லிச் சொல்லி ஏமாத்திட்டான்...''

மதுராவைக் கண்டதும் அரக்கப் பரக்க எழுந்து ஓடி வந்து, அவளைக் கட்டிக் கொண்டு அழுதாள் மங்களம்.

மதுரா, கல்லாய் அமர்ந்திருந்தாள்.

பிரேமின் உடலை எடுக்கும் வரையில்... அதற்குப் பின் ஒருத்தரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பி விட்டாள்.

மங்களம், துக்கம் விசாரிக்க வந்தவர்களிடமெல்லாம் இதுபற்றி சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தாள்.

ஆனால்—

பிரேம் இறந்து இரண்டு, மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் குடும்பத்தின் பயங்கர சூழ்நிலையே மங்களத்துக்குப் புரிந்தது.



பிரேம், தான் சம்பாதித்த பணத்தை எல்லாம் குடித்தே தீர்த்திருக்கிறான்... போதாக்குறைக்கு முறைகேடான பெண்கள் சகவாசம் வேறு... மதுராவின் சம்பளத்தில் தான் அவ்வப்பொழுது பால், மளிகை முதலியன... பல மாதங்களாக வாடகை கொடுக்கப்படவே இல்லை. ராகவனும், மதுராவுக்காக அது பற்றி எதுவும் கேட்கவே இல்லை.

இது பற்றி மதுரா - கணவனிடம் கேட்கும் போதெல்லாம் அடி உதையைத்தான் கண்டிருக்கிறாள்.

மங்களத்துக்கு குடும்பச் செலவுகளைப் பற்றி ஒன்றுமே தெரியாது...

அவள்தான் சமையலறைப் பக்கம் வருவதே இல்லையே... பணம் போதாத சமயங்களில் மதுரா ஓவர்டைம் செய்து விட்டு வந்தால், 'எவன் கூட சுத்திட்டு வர்றாப்பல' - இப்படி திட்டத்தான் தெரியும்.

பிரேம், தன் சம்பளத்தில் மட்டுமல்லாது, தனது சினேகிதர்களிடமும் கடன் வாங்கியிருந்ததெல்லாம், செத்த பிறகுதானே தெரிய வந்தது?

அலுவலகத்திலிருந்து அவனுக்குச் சேர வேண்டிய பிடிப்புத் தொகை வந்த போது - கடன் அடைக்கவே சரியாக இருந்தது.

அப்பொழுதுதான் மங்களத்துக்கு இளைய மகன் கௌதம் - வேலைக்குப் போகாமல், தீவட்டித் தடியனாக வீட்டிலேயே சுற்றுவது கண்களில் பட்டது...

அவனிடம் கத்தினாள்...

"ஒரு வேலைக்கும் போகாம சோறு போடுன்னா - சோறு எங்கேயிருந்து வரும்?"

"இந்தா, சும்மா கத்தாதே... இந்த காலத்துல வேலை கிடைக்கிறது குதிரை கொம்பு... மளிகை சாமான் வாங்கப் பணம் இல்லையின்னா ஏதாவது நகை, நட்டை கொடு... வித்து பணம் வாங்கிட்டு வரீறேன்..."

"என்கிட்ட என்ன நகைடா இருக்கு... பெரியவன் தன் பெண்டாட்டியோட நகைங்க எல்லாத்தையும் என்ன பண்ணினான்னு தெரியல்லே..."

"அப்ப, அவளையாவது போய் கூட்டிட்டு வா... வேலைக்குப் போய் சம்பாதிச்சுப் போடட்டும்..."

"அவதான், அவனோட பத்து நாள் சடங்குக்குக் கூட இருக்க மாட்டேன்னு போயிட்டாளே..."

"வா... ரெண்டு பேருமா ஏதாவது சொல்லி, அவளைக் கூட்டிட்டு வர பார்ப்போம்..."

மங்களம், குழந்தைக்கு பதினைந்து ரூபாயில் ஒரு சட்டையும், சின்னதாய் ஒரு சர்க்கரைப் பொட்டலத்தையும் கட்டிக் கொண்டு, மகனுடன் மதுராவின் பிறந்த ஊருக்குச் சென்றாள்.

"ஆயிரம்தான் நமக்குள்ளே இருந்தாலும் தண்ணி அடிச்சு, தண்ணி விலகுமா சொல்லு... கண்ணுக்குக் கண்ணா வளர்த்த பிள்ளைதான் போயிட்டான்... பேத்தியையாவது பார்த்துட்டு..."

"நான்தான் அப்பவே சொல்லிட்டேனே... இது உங்க பேத்தி இல்லே..."

"போறும்டி. இப்படிச் சொல்லி, அவன் வயித்தெரிச்சலைக் கொட்டிட்டது போதும். நீ சொன்



னாப்பல ஆச்சா... இவதான் அச்சு, அவதாரம் எங்க மாமியார் சாடையாவே இருக்காளே... எனக்குத் தெரியாதா?"

"சரி. இப்ப எதுக்கு வந்திருக்கீங்க?"

"நல்லாக் கேட்டே போ ஒரு கேள்வி... உன்னையும், குழந்தையையும் ஒரு நல்ல நாள் பார்த்து, அழைச்சிட்டுப் போகத்தான். இதப் பாரு... என் தங்கம்... என் ராசாத்தி... என் மகன் போனதுக்காக, எங்கே நீ பாட்டுக்கு பொட்டை எடுத்து, பூவை எடுத்து. வெள்ளைப் புடவை கட்டிட்டு இருக்கப் போறியோ... இந்தக் கண்ணால, அந்தக் கண்றாவிக் காட்சிய எப்படிடாப்பா பார்க்கிறதுன்னு சொல்லிட்டே வந்தேன்... நல்ல வேளை... அந்த மாதிரி அலங்கோலம் எதுவும் பண்ணிக்கலே... நீ இப்படியே இரும்மா... அப்பத்தான் எனக்கும் கொஞ்சம் தெம்பா இருக்கும்... மார்கழி பொறக்கறதுக்குள்ள உன்னையும், குழந்தையையும் அழைச்சிட்டுப் போயிடலாம்னு பார்க்கறேன்.. நீ எப்பவும் போல வேலைக்குப் போ... பேத்திய நான் பார்த்துக்கறேன்..."

கௌதம், இத்தனைக்கும் அதிகம் பேசாமல், குனிந்த தலை நிமிராமல் கிழங்கு மாதிரி உட்கார்ந்திருந்தான்...

இதற்குள் மதுராவின் தாய், சம்பந்தி அம்மாளுக்கும், கௌதமுக்கும் காபியைக் கொண்டு வந்து வைத்து விட்டு, மௌனமாய் உள்ளே போனாள்.

"இருக்கட்டுமே... நேரம் கெட்ட நேரத்துல காபி என்னத்துக்கு..."

மங்களம் ஏதோ சொல்லிக் கொண்டே இருக்கையில், மதுரா, காலை பூஜையில் இருந்த தன் தந்தையைக் கூப்பிட்டாள்.

"அப்பா ஒரு நிமிஷம்..."

"என்னம்மா?"

அவர் சிவப்பழமாக வெளியே வந்தார்.

"இவங்க என்னமோ கேட்கறாங்க... கொஞ்சம் பதில் சொல்லிட்டு, உங்க வேலைய கவனியுங்களேன்..."

"என்ன..." என்பது போலப் புருவத்தை உயர்த்துறார் பெற்றவர்.

"ஒண்ணுமில்லே... குழந்தையையும், மதுராவையும் அழைத்துப் போக நீங்களே ஒரு நல்ல நாள் பார்த்து சொல்லிட்டீங்கன்னா..."

மங்களத்துக்கு உள்ளூர எதுவோ உறுத்தாமல் இல்லை...

"தை மாசம் ரெண்டாவது புதன்கிழமை முகூர்த்த நாள்..."

"அவ்வளவு தள்ளிப் போகணுமா என்ன... இந்த கார்த்திகையிலேயே..."

"என்ன பண்றதும்மா... அப்பத்தான் ரெண்டு பேர் நட்சத்திரத்துக்கும் பொருந்தறது..."

"அதுவும் சரிதான்... புறப்படற நேரம்... தாய் குழந்தை ரெண்டு பேருக்குமே சரியா இருக்கணுமில்லையா..."

"நீங்க தப்பா அர்த்தம் பண்ணிட்டிருக்காப்பல இருக்கு... நான் சொல்றது - மதுராவுக்கும், டாக்டர்



ராகவனோடப் பிள்ளை சூர்யாவுக்கும் கல்யாணம் குறிச்சிருக்கற நாளை... வாழ்க்கையின்னா என்னன்னு தெரியாமலேயே என் பொண்ணை ஒரு விதவையா வீட்டுல உட்கார்த்தி வச்சுக்க நான் விரும்பலே..."

"ஐயோ... நம்ம வழக்கத்துல இல்லாத வழக்கமா என்னது இது..."

மங்களம் பெரிசாய் கத்தத் தொடங்கினாள்...

"உங்க கருத்தை வரவேற்கிறேன் சார்... அம்மா ஒரு பழங்காலத்து மனுஷி... ஆனா, உங்க பொண்ணுக்கு சூர்யாவைத் தேர்ந்தெடுக்கறதுக்கு முன்னாடி, என்னை ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம் இல்லையா.. அண்ணனாலே தர முடியாத வாழ்க்கைய தம்பி தரலாம் இல்லையா... மேலும், புதுசா வர்றவனுக்கு உங்க பொண்ணு மேல வேணுமானாப் பிரியம் இருக்கும்... அவ குழந்தை மேல பாசம் இருக்கும்னு என்ன நிச்சயம்?"

கௌதம் பணிவையும், குழைவையும் கலந்து பெரியவரிடம் சொல்ல—

மதுரா அழுத்தமாகச் சொல்கிறாள்—

"இந்தக் குழந்தைய அழிக்க, உங்க அண்ணா எவ்வளவு முயற்சி எடுத்துகிட்டார்னு எனக்குத் தெரியும்... மேலும், எனக்கும் என் குழந்தைக்கும் ஒரு நல்ல மனுஷனோட சகவாசம்தான் தேவையே தவிர— எனக்கு, என்கூட படுத்துக்க ஒரு துணையே தேவையில்லே..."

"......"

"இங்கேயிருந்து மெட்ராசுக்கு அடுத்த ரயில் எப்பன்னு அவங்களுக்கு சொல்லுங்க அப்பா..."

"ரயில் என்னத்துக்கு? அரை மணிக்கு ஒரு பஸ்ஸே இருக்கு... இப்ப நீங்க புறப்பட்டா— பதினொரு மணி பஸ்ஸை பிடிக்கலாம்..."

இதற்கு மேலும் அங்கே நிற்க பைத்தியமா என்ன... கௌதமிற்கு உடம்பு முழுக்க மிளகாயை அரைத்துப் பூசினாற் போல எரிகிறது...

"கிளம்பேன்... இன்னும் ஏன் இங்கேயே உட்கார்ந்திருக்கே..."

அவன், தாயை அதட்டி எழுப்பிக் கொண்டு போனான்.

மதுரா, சூர்யாவின் திருமணம் பதிவுத் திருமணம் தான்... மாலை மாற்றி, தாலிகட்டி, கையெழுத்து போட்டு விட்டு மதுராவின் பெற்றோரும், ராகவனுமாய் வீட்டுக்கு வர...

கீழ் போர்ஷனைக் காலி செய்து எல்லாச் சாமான்களையும் வண்டியிலேற்றிக் கொண்டிருந்தான் கௌதம்..."

"மிஸஸ் சூர்யா..."

கௌதமின் குரல் கேட்டு நின்று திரும்பிப் பார்த்தவளிடம் எரிச்சலை அடக்கிக் கொண்டு சொன்னான் கௌதம்...

"இந்தப் பெட்டி, மர பீரோ இதெல்லாம் எங்களோடது... இதுல எதெல்லாம் உங்களோடது?"

மதுரா, ராகவனைத் திரும்பிப் பார்த்தாள்...



அவர் சிரித்தபடி சொன்னார்.

"அந்த காட்ரெஜ் பீரோ, கட்டில், எவர்சில்வர் பாத்திரம், வெள்ளிப் பாத்திரங்கள், இருபது பவுன் நகை... வைரத்தோடு... இதெல்லாமே உங்களோடது தான்... எங்களோடது இதோ இந்தப் பொண்ணும், இவ கையில இருக்கற குழந்தையும்தான்..."

"மாமா..."

மதுராவின் குரல் தழுதழுக்க— ராகவன் மேலும் விடாமல் சொன்னார்.

'மங்களத்தம்மா உங்க ரெண்டாவது பிள்ளைக்கு கல்யாணம் பண்றப்ப, ஒரு படி பிடிக்கற மாதிரி டபரா, தம்ளர் ஒரு டஜன் வைக்கணும்னு கறாராச் சொல்லிடுங்க..."

கௌதம், கையில் காகிதத்தால் சுற்றப்பட்ட ஒரு டைரியைக் கொண்டு வந்து மதுராவிடம் தந்தான்.

"கடைசி நிமிஷத்துல அண்ணா, இதை உங்ககிட்ட கொடுக்கச் சொன்னான்... கொடுத்துட்டேன். வரேன்..."

சூர்யா, மதுராவின் கையிலிருந்த டைரியையே கவலையுடன் பார்த்தான். ஏன், ராகவனும்தான்.

ஆனால்—

மதுராவின் பெற்றோர்கள் வந்திருந்ததாலும், வீட்டில், கல்யாணம் விசாரிக்க ராகவன், சூர்யாவின் நண்பர்கள் வந்து போய் கொண்டிருந்ததாலும், அந்த டைரியைப் பற்றி மறுபடி விசாரிக்கவே முடியவில்லை.

திடீரென ஒரு நாள் சூர்யா கேட்ட போது— அப்பொழுதுதான் நினைவு வந்து மதுராவும் தேடினாள்.

"இங்கேதானே எங்கேயோ தூக்கிப் போட்டேன்... காணுமே..."

சூர்யா, இது பற்றி ராகவனிடம் சொல்ல அவரும் தேடிப் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்க...

கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாகக் கிடைக்காத அந்த டைரி...

ஞாயிற்றுக் கிழமைதானே என்று நிதானமாகச் சமையலைக் கவனித்தபடி, ஸ்டோர் ரூமில், பரணில் ஏறி, இடியாப்ப நாழியைத் தேடி எடுத்தவள் கண்களில் பட்டுத் தொலைக்க வேண்டுமா...

எடுத்தவள்— கடைசியாய் கௌதம் சொன்னது நினைவுக்கு வர... நடுக்கத்துடன் பிரித்துப் புரட்டுகிறாள்.

கடைசியாய்... அப்படி என்னதான் எழுதியிருப்பார் அவர்?

ஒவ்வொரு தாளாய் புரட்டிப் பார்க்கிறாள்... சில தாள்கள் வெறுமையாய்... ஒரு சில தாள்களில் பிரேமின் வழக்கமான சாய்ந்த— கிறுக்கலானக் கையெழுத்து...

"என்னருமை மதுரா...

பாவம். அவ, என்னைப் பத்தி, எத்தனையோ மட்டமா, கேவலமா நினைச்சிருப்பா. அவ மேல நான் உயிரையே வச்சிருக்கறது அவளுக்குத் தெரியாது... என் கல்யாணத்துக்கு முன்னாலேயே எனக்கு பிளட் கேன்சர்ங்கற விஷயம் எனக்குத் தெரியும். எங்க அம்மா, தம்பி ரெண்டு பேருக்கும் தெரியும்... எப்படியும் என்னோட ஆயுசு, மிஞ்சிப் போனா ரெண்டு

...MARA PUBLIC LIBRA...



வருஷம்கூட இல்லேயின்னு டாக்டர் சொல்லிட்டார். இதுக்காக ஒரு கல்யாணத்தைப் பண்ணிட்டு, வர்றவ வாழ்க்கையையும் பாழடிக்க மாட்டேன்னு எத்தனையோ பிடிவாதமா அம்மாகிட்ட எடுத்துச் சொல்லியும்— அவ ஒப்புக்கலை... டாக்டர் ஒரு முட்டாள்— உனக்கு தீர்க்காயுசுன்னு புலம்பினா... எனக்காகவாவது நீ ஒரு கலியாணத்தை செஞ்சுட்டுத் தான் ஆகணும்னு புலம்பினா... வேற வழியில்லாம தலையசைக்க வேண்டியதா போச்சு..."

"என் விதி இப்படிங்கறதுக்காக, ஒண்ணுமே தெரியாத மதுராவை பலியிட நான் விரும்பலே... அதனாலத்தான் ஆரம்பத்திலிருந்தே அவ மேல வெறுப்பைப் பொழிஞ்சேன்... ஆனா, ஒவ்வொரு தடவையும் தனிமையில அழுதேன்... அவளை எட்டி உதைச்ச காலுக்கு தண்டனையா - எத்தனையோ நான் பாத்ரூம்லே சுவத்தை எட்டி உதைச்சு, அவ பட்ட வலியை நானும் அனுபவிச்சிருக்கேன்..."

'ஆரம்பத்திலிருந்தே என் மேல ஒரு வெறுப்பு விழுந்தாச்சுன்னா - நான் செத்தாலும், அவ சந்தோஷப்படுவாளே தவிர - அழமாட்டா இல்லையா... ஏன் வேற ஒரு ஆரோக்யமானவனைக் கல்யாணம் செஞ்சிட்டு, நிம்மதியாககூட இருப்பா..."

"முதல் தடவை, அவ வயித்துல என் குழந்தை வளர்றதா சொன்னப்ப, நான் அப்படியே பெருமையில பூரிச்சுப் போனேன்... அப்புறம்தான் உறைச்சது - ஐயோ, என் ரத்தம்... என் ஜீவ அணு... அது மட்டும ஆரோக்யமா இருக்கும்னு என்ன நிச்சயம்னு உடனே, மதுராவை 'தரதர'ன்னு இழுத்துட்டுப்போய் கருவைக் கலைச்சேன்... அதற்கப்புறம் ரெண்டு, மூணு தடவை

என் குழந்தைகளை இந்த உலகத்துக்கே வரவிடாத பாவியாய் நானே மாறின அவலம்...''

''எப்படியாவது அவனோட படுத்து, அவளை ஆளணும்னு வெறியான்னு எனக்கு நானே பல தடவை எரிச்சல் பட்டிருக்கேன்... என்ன செய்யறது... உடம்புக்கு மரணம் நிச்சயம்னு தெரிஞ்சும் மனசுல இளமை வேகம் தீர்க்காயுசா இருக்கே...''

''இந்த தடவை கருவுற்றதை அவ, எங்கிட்ட சொல்லவே இல்லே... என் பக்கத்துலேயே வர்ற தில்லே... நான்தான் குடிக்கிறேன்; அடிக்கிறேனே... பாவி, இதையாவது சொல்லியிருக்கலாம்... கடைசியில சண்டை முத்தி, இதுக்கு அப்பன் நீங்க இல்லேன்னு சொல்லிட்டுப் போயிட்டா...''

''ஒரு நிமிஷம் திகைச்சு நின்னாலும், அடுத்த கணம் மனசுக்குள்ளே 'குப்'புனு சந்தோஷம். கடவுளே-அவ கோபத்துலே சொன்னாளோ, இல்லே நிஜமாத் தான் சொன்னாளோ - தெரியல்லே... அவ சொன்ன மாதிரி - அது என் குழந்தையா இருக்கக் கூடாது... ஏற்கனவே கஷ்டங்களையும், சோகங்களையுமே அனு பவிச்ச அவளுக்கு-என் கண்மணிக்கு-பெத்த குழந்தை யாலே வேற கஷ்டம் வரக் கூடாது...''

''கடைசி கடைசியா... என் பிரியமான மதுரா வுக்கு என் அன்பான முத்தங்கள்... பிரேம்...''

ஸ்டோர் ரூமில் தடாலென்று எதுவோ, விழுந்த சத்தம் கேட்டு ஓடி வந்த ராகவன் திகைத்து நின்று விட்டார்.

பரணுக்கு ஏற வேண்டிய ஏணி ஒருபுறமிருக்க-மதுரா, பரணியிலிருந்து கீழே விழுந்து மயங்கிக்



கிடக்க... அந்த டைரி ஒருபுறம் தரையில் கிடக் கிறது.

முதலில் மதுராவின் மயக்கத்தைப் போக்க, தண்ணீர் தெளித்து முதலுதவி செய்த ராகவனும், சூர்யாவும், அவள் கண் விழிப்பதற்காகவே அருகே நிற்க—

முதலில் அவள் கேட்டது அந்த டைரியைத்தான்.

''எங்கே அந்த டைரி...''

''டைரியா...''

இதற்குள் அவளே எழுந்திருக்க முயற்சிக்கிறாள்.

''இரும்மா. கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்க...''

''இல்லே. இப்ப எனக்கு ரெஸ்ட் வேண்டாம்...''

பாய்ந்து ஸ்டோர் ரூமுக்குச் சென்றவள், அங்கே ஒரு பக்கம் கிடந்த டைரியை எடுத்துக் கொண்டு நேரே படுக்கையறைக்குப் போய், பொம்மைகளுடன் விளையாடிக் கொண்டிருக்கும் மகளைத் தூக்கி வருகிறாள். இதற்குள் துக்கம் பொங்கிவர - ராக வனிடம் சொல்லும்போதே பெரிசாய் அழத் தொடங் குகிறாள்...

''என் குழந்தைய இப்பவே கேன்சர் இன்ஸ்டிடி யூட்டுக்கு அழைச்சிட்டுப் போகணும்...''

''என்ன உளர்றே மதுரா...''

''உளறலே இந்த டைரியப் படியுங்க... அவர் மஞ்சக்காமாலையாலே மட்டும் சாகல்லே... ஏற்கனவே அவருக்கு பிளட் கேன்சர் இருந்திருக்கு... எங்கே, தான் திடீர்னு செத்துட்டா - பெண்டாட்டிக்கு ஷாக்

ஆயிடுமோன்னு மனசைக் கல்லாக்கிட்டு நடிச்சிருக்கார். ஐயோ, அவரோட அவஸ்தை புரியாம, நானும்தான் அவரை என்னவெல்லாம் பேசியிருக்கேன்... இப்படியொரு நல்ல மனுஷனை எத்தனை தப்பா எடை போட்டுட்டேன்... கடவுளே... கடவுளே..."

அவளை எப்படி தேற்றுவதென்றே புரியாமல் சூர்யா நிற்க—

ராகவன், மதுரா நீட்டிய டைரியைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறார்.

மதுராவோ தீபிகாவின் கன்னத்தைத் தடவி, இறுக அணைத்து, முத்தமிட்டபடி கதறுகிறாள்.

"என் குழந்தை... அவரோட ரத்தத்துல உதிச்சது இவளுக்கும் அந்த... ஐயோ, சீக்கிரமா ஏதாவது பண்ணுங்களேன்..."

ராகவன், மதுராவின் கரத்தைப் பரிவுடன் பிடிக்கிறார்.

"அம்மா மதுரா... சத்தியமா சொல்வேன்... உன் புருஷன் கேன்சராலே சாகல்லே..."

"எப்படி எதை வச்சு சொல்றீங்க... அவர் கைப்பட எழுதியிருக்காரே..."

"சரி... அப்படியே இருக்கட்டும். உனக்கு தீபிகா நார்மலா இருக்காளான்னு தெரிஞ்சுக்கணும்... அவ்வளவுதானே... சூர்யா, முதல்லே - இவளையும் குழந்தையையும் எடுத்துட்டுப் போய், நான் எழுதித் தர்ற பிளட்டெஸ்ட் எல்லாத்தையும் பண்ணிட்டு வா..."

"சரி... வா, மதுரா..."



அவன் குழந்தையைச் சுமந்தபடி முன்னால் நடக்க, மதுரா அவனைப் பின் தொடருகிறாள்.

ராகவன், அந்த டைரியையே மறுபடி மறுபடிப் படிக்கிறார். புருவத்தை விரலால் தேய்த்துவிட்டுக் கொண்டு யோசிக்கிறார்...

எப்படியும் பிளட் டெஸ்ட் ரிசல்ட் எதுவும் உடனே கிடைக்காது...

அதுவரையில் மதுராவை சமாதானப் படுத்துவது எப்படி...

எப்பொழுதும் சிரித்தபடி வளைய வரும் ராகவனுக்குக்கூட கவலை, முகத்தில் கோடுகளை இழுக்கிறது...

மனசுக்குள் - பிரேம் குடும்பத்தினர் வந்ததிலிருந்து காலி செய்து கொண்டு போனது வரையில் ஒவ்வொரு சம்பவமாய் நினைத்துப் பார்க்கிறார்.

'உம்.. என்ன செய்யலாம்...'

அவருக்குத் தெரியும்... தீபிகா ஆரோக்ய நிலையில் உள்ளது... ஆனால், இப்பொழுது அது மட்டும் பிரச்னையில்லையே...

மதுரா... செத்துப் போனவனையே நினைத்து நினைத்து இப்பொழுது வாழும் வாழ்க்கையைப் பாழடித்துக் கொண்டால்?

# 6

ராகவன் நினைத்தது சரிதான்.

தீபிகாவின் - 'பிளட் டெஸ்ட்' ரிசல்ட் அவள் நல்ல நிலையில் இருப்பதை அறிவித்தும்கூட - மதுரா எதையோ பறி கொடுத்தவள் போலத்தான் இருக்கிறாள்.

சூர்யாவின் கரம், இயல்பாக அவள் மேனியில் பட்டால்கூட, ஏதோ நெருப்பைத் தீண்டினாற்போலத் துள்ளி விலகுகிறாள்.

அடிக்கடி அந்த டைரியை எடுத்து வைத்துக் கொண்டு, மாலை மாலையாகக் கண்ணீர் உகுக்கிறாள்.

மதுரா ஊருக்குப்போன மறுநாள் - பிரேம் சத்தி னானே...

அதைப்போய் இப்பொழுது மதுராவிடம் எப்படிச் சொல்வது... சொன்னாலும், தன் வார்த்தையை நம்பாதது மட்டுமின்றி, செத்துப் போனவனைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்வதாக நினைத்துக் கொள்ள மாட்டாளோ...

அவன், ராகவனிடம் தன் கலக்கத்தை மிக ரகசியமாய் கூற...

அவரும் தன்னால் இயன்ற முயற்சிகளை செய்கிறார்.



''அதான் தீபிகா நல்ல ஹெல்தியா இருக்கிறதா... எல்லா டெஸ்ட்டும் சொல்றதேம்மா... அப்புறமென்ன...''

''ஒண்ணுமில்லே மாமா...''

''ஒண்ணுமில்லாததுக்கா வருத்தப்படறே... டேய் சூர்யா, மதுராவுக்கு என்ன வேணுமோ, அதையெல்லாம் வாங்கித் தர வேண்டியதுதானேடா... ஒண்ணுமில்லையாமே...''

ஊம்ஹூம்... அந்த முகத்தில் சின்ன சிரிப்பைக் கூடக் காணும் - ராகவன் பேச ஆரம்பித்தால் எப்படி சிரிப்பாள் இவள்... அந்த சிரிப்பும், உற்சாகமும் எங்கே போயிற்று...

மறுபடியும் இவள் சிரிப்பு வீடு முழுதும் ஒலிக்க வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்...

அவர் சூர்யாவிடம் தனிமையில் சொல்கிறார்.

''அந்த டைரியில இருக்கறது சத்தியமா பிரேமோட கையெழுத்து இல்லேயின்னு எனக்குத் தோணறதுடா...''

''அவன்தான் என் முன்னாடியே அப்படியொரு விஷயம் சொன்னானேப்பா...''

''இங்கே பார்ரா... மஞ்சக் காமாலையினாலே தான் செத்துப் போயிடுவோம்கற நினைப்பு கொஞ்சம் கூட பிரேமுக்கு கிடையாது... ஏதோ, பேச்சு வாக்குல சொல்லியிருக்கான். அதை கௌதம் அழகா உபயோகப் படுத்திட்டிருக்கான்...''

"டைரியில இருக்கறது பிரேமோடக் கையெழுத் துன்னு மதுரா தீர்மானமாச் சொல்றாளே..."

ராகவன், மகனை 'அட முட்டாளே' - என்கிறாற் போலப் பார்க்கிறார்.

"ஏண்டா அண்ணனைப் போல தம்பியாலே கையெழுத்துப் போட முடியாதா என்ன... ஒவ்வொ ருத்தன் கள்ள நோட்டு அச்சடிக்கறப்ப கவர்னர் கையெழுத்தையே அழகாப் போடறானாம்... கூடவே இருந்த அண்ணனோடக் கையெழுத்தையா காப்பி பண்ண முடியாது? பத்து வயசுப் பையன், அப்பா கையெழுத்தை பிராகரஸ் ரிப்போர்ட்லே தானே போடறதில்லையா..."

ஏதோ சொல்ல வந்தவர், 'சட்'டென நிறுத்து கிறார். முகம் திடீரெனப் பூவாய் மலருகிறது.

"டேய் சூர்யா... எனக்கு என்னென்ன ஆர்ட் எல்லாம் தெரியும்னு மதுரா கிட்ட சொல்லியிருக்கே?"

"திடீர்னு இது என்னப்பா கேள்வி..."

'கேட்டதுக்கு பதில் சொல்லு..."

"மியூசிக்... பெயிண்டிங்... எல்லா வாத்தியங்களும் வாசிப்பார். அருமையா சமைப்பார்... ரெண்டு மூணு டிராமாவுல கூட ஆக்ட் பண்ணியிருக்கார்..."

"அவ்வளவுதானா?"

"ஆமா..."

"ஃபிரண்ட்ஸ் மாதிரி மிமிக்ரி பண்ணுவார்னு சொல்லலையா?"



"மறந்துட்டேம்பா... உங்க கிளப்லே அதுக்காக உங்களுக்காக வெள்ளி கப் கூட கொடுத்தாங்க இல்லே?"

"உன் மறதி வாழ்க. தப்பித் தவறிக்கூட இதை அவகிட்ட சொல்லாதே..."

"ஏம்பா..."

"எனக்கு இத்தனை ஆர்ட் தெரியும்கறதே ஏகமா திருஷ்டி விழுந்துரும் போல இருக்கு. சொல்லாதே டான்னா... ஏன், எதுக்குன்னு எல்லாம் என்ன கேள்வி... உனக்கு கல்யாணம் ஆனதுக்கு அப்புறம் நிறைய கேள்வி கேட்க ஆரம்பிச்சுட்டே..."

அவர் சந்தோஷமாய் சங்கராபரணத்தை ஒரு இழுப்பு இழுத்துக் கொண்டே தன் அறைக்கு போய், கதவை உட்பக்கமாய் தாழிட்டுக் கொள்கிறார்...

தனது கேஸட் பெட்டியைக் குடைந்து ஒரு கேசட்டை எடுத்துப் போட்டுப் பார்க்கிறார்.

கீழ் வீட்டில் பிரேம் குடும்பத்தினர் வருவதற்கு முன்னால் இருந்த தம்பதியின் குரல்... கூடவே ஒரு கிழவியின் குரல்...

கிழவி - வீட்டுக்காரரின் அம்மா.

"என்ன இருந்தாலும் நீங்க நேத்து, நாலு பேர் முன்னாடி என்னை விட்டுக் கொடுத்திருக்கக் கூடாது..."

இது மருமகள்.

"நான் என்னடி பண்ண - நீதானாகட்டும்; பஸ்லே அத்தனை பேர் முன்னாலே அவனை அவமானப் படுத்தலாமா..."

"அவமானம் என்ன அவமானம்... கண்டக்டர் சில்லறை இருந்தா ஏறுங்க... இல்லையின்னா இறங்குங்கன்னான்... இவர் சில்லறை எடுத்துட்டு வரல்லையின்னா அதுக்கு யார் என்ன செய்ய... கண்டக்டர் இறங்குய்யான்னு கடுப்படிச்சான். அவன் எவனோ... நமக்கும் அவனுக்கும் ஸ்நான ப்ராப்தி கூட இல்லே... 'தேமே'ன்னு இறங்கினார். நான், 'ஏன்னா வர்றப்ப கொஞ்சம் சில்லறை எடுத்துப் போட்டுண்டு வரக் கூடாதா'ன்னு கேட்டது பெரிய தப்பாப் போச்சு இந்த துர்வாசருக்கு...'என்னை நாலு பேர் முன்னாடி எதிர்த்தாப் பேசறே... நீ என்னைவிட புத்திசாலியோ'ன்னு ஏகப்பட்ட பேச்சு... ஒரு வார்த்தை... ஒரேயொரு வார்த்தை... எனக்கு 'சப்போர்ட்டா' நீங்க பேசினா என்ன... நானென்ன, கேட்க கூடாததையா கேட்டுட்டேன்..."

இதற்குள் புருஷன்காரனின் குரல்...

"இத்தனைப் பேசறாளே... போற இடத்துக்கு ஒழுங்கா அட்ரஸ்ஸை எடுத்துண்டு வந்தாளான்னு கேளு... ஏறுமாறுன்னா நடுரோடுலே அகமுடையானை விரட்டத் தெரியும்... ஒருத்தன் வேலை மெனக்கெட்டு, ரெண்டு ஜடங்களையும் இழுத்துண்டு கிளம்பியிருக்கேன்... அந்த பஸ்ஸைக் கோட்டை விட்டு, அடுத்த பஸ்லேயும் இதே தகராறு வரக்கூடாதுன்னு, போற இடத்துக்கு அரை டஜன் பச்சைப் பழத்தையும் வாங்கி, சில்லறை மாத்திண்டு, பஸ் ஏறி இங்கே வந்தா - அட்ரஸ் எங்கேடியின்னா எனக்கென்ன தெரியும்கறா..."

"ஆமா எனக்கென்ன தெரியும்... நீங்க எடுத்து வச்சுண்டேளாக்கும்னு..."



மருமகள் பிழியப் பிழிய அழுகிறாள்.

ராகவன் புன்னகைத்தபடியே 'டேப்'பை வேறு பக்கம் திருப்பிப் போடுகிறார்.

இப்பொழுது மங்களம், பிரேம், கௌதம் மூன்று பேருமாக மதுராவை நிற்க வைத்து ஆயிரம் கேள்வி கேட்கிறார்கள்.

மதுரா அழுகிறாள்...நடுவில் ஓரிருமுறை எதிர்த்து பேசுகிறாள். கடைசியில் பிரேம் அவளை எட்டி யுதைக்க, அவள் 'ஐயோ'வென்று அலறுகிறாள்.

இது போல, இன்னும் நாலைந்து பேச்சுக்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது.

ராகவனின் நோக்கம், இவைகளைப் பதிவு செய்து கேட்டு ரசிப்பது அல்ல...

இந்தக் குரல்களை உன்னிப்பாகக் கேட்டு வித விதமாய் குரலை மாற்றி, அவர்களைப் போலப் பேசுவது... நண்பர்களைப் போல, பெருந்தலைவர்களைப் போலப் பேசி, மற்றவர்களைச் சிரிக்க வைப்பது...

கிட்டத்தட்ட ஒரு வாரம் போல மங்களத்தின் குரலையும், கௌதமின் குரலையும் உன்னிப்பாக கேட்ட ராகவன், அவர்களைப் போலவே பேசிப் பார்க்கிறார்.

குரல்தான் வெண்ணையாய் இழுத்த இழுப்புக்கு வருகிறதே...

அடுத்தாற்போல கீழ் வீட்டு சிவராமனை சந்தித்து ஒரு சில வார்த்தைகள் ரகசியமாய் பேச்சு...

சூர்யாவிடமும் தன் திட்டத்தைச் சொல்கிறார்...

"கொஞ்சம் ஹெல்ப் பண்ணுடா..."

"இது எந்த அளவுக்கு சக்ஸஸ் ஆகும்னு எனக்குத் தெரியல்லேப்பா..."

"நீ பார்த்துட்டே இரேன்..."

மறுநாள்—

ராகவன் குளித்துக் கொண்டிருக்க - சூர்யா அலுவலகத்துக்கு அவசரமாய் கிளம்பிக் கொண்டிருக்க—

கீழ் வீட்டு சிவராமன் வருகிறார்.

மதுராதான், தீபிகாவுக்கு தலை சீவியபடி கூடத்தில்...

"நமஸ்காரம்..."

"வாங்க. மாமா குளிச்சிட்டிருக்காரே..."

"ஒண்ணுமில்லே. இதைக் கொடுக்கத்தான் வந்தேன்..."

"என்னது..."

"கேஸட்... உங்க மாமனாருக்கு ஒரு பழக்கம். கீழ் போர்ஷன்லே நடக்கற சண்டையெல்லாத்தையும் டேப் பண்ணிடுவாரு. அப்புறம் நிதானமா அவங்களுக்கே போட்டுக் காட்டுவாரு. சண்டை முடிஞ்சதுக்கு அப்புறம் இதைக் கேட்கறப்ப, அவங்களுக்கே, 'ஐயோ, இத்தனை அசிங்கமாவா நாம சண்டை போட்டோம்'னு தோணும்... என் ஒய்ஃப் சிவகாமியே



எத்தனையோ தடவை இப்படிப் பேசிட்டு, டேப்லே அதைக் கேட்டு சிரிச்சிருக்கா... அது மாதிரி இது... இதுக்கு முன்னிருந்த குடித்தனக்காரங்களோட பேச்சு போல இருக்கு... போன மாசம் என் பையன் இதை விளையாட்டா அவர்கிட்டே இருந்து பிடுங்கிட்டு வந்துட்டான். இந்தாங்க..."

மதுரா வியப்புடன் வாங்கிக் கொள்கிறாள்.

அவர் போன பின்—

கேசட்டை, டேப் ரிகார்டரில் போட்டு, பட்டனைத் தட்டி விடுகிறாள்.

முதல் பக்கம் முழுக்க திட்டு வாங்கிய மருமகள். மருமகளைச் சமாதானப்படுத்திய மாமியார்... இவர்களின் பேச்சு, மதுராவை அந்த நிலையிலும் புன்னகைக்க வைக்கிறது...

மறு பக்கம்—

பிரேம் - கௌதம் - மங்களம் கத்துவது... நடுவே மதுராவின் குரல்... மதுராவின் கண்கள் கலங்குகிறது.

திடீரென—

கௌதம், மங்களத்தின் குரல் மட்டும்—

"ஏண்டா, வேற கல்யாணம் பண்ணிக்கப் போறாளாமே... அவ நல்லா இருப்பாளா..."

"கண்டிப்பா அவளாலே சந்தோஷமா வாழ்க்கைய அனுபவிக்க முடியாதும்மா. அதுக்கான வழிய நான் பண்ணியாச்சு..."

"என்னடா பண்ணினே..."

"அவ கல்யாணமாகி வர்றப்ப, இந்த டைரிய கொடுக்கப் போறேன்... பிரேமோடக் கையெழுத்து அப்படியே..."

"அப்படியே?"

"அப்படியே, அச்சா அவன் எழுதற மாதிரி நான் எழுதியிருக்கேன்... அவ கண்டிப்பா துடிதுடிச்சு சாகப் போறா பாரு..."

மதுரா பதறிப் போய் டேப்ரிகார்டரின் பொத்தானை அமுக்குகிறாள்.

"என்னங்க, இங்கே வாங்களேன்... மாமா... இந்த டேப்பைப் பத்தி என்கிட்ட ஏன் இத்தனை நாளும் நீங்க சொல்லவே இல்லே?"

"என்னதும்மா..."

ராகவன் ஒன்றுமே புரியாதவர் போல் கேட்க—

அவள், மறுபடியும் கேசட்டை ஒலிக்கச் செய்கிறாள்.

ராகவனின் முகத்தில் சிரிப்பு விரிய, சூர்யாவைப் பார்த்து சொல்கிறார்—

"நான் ஒரு டேப்பைக் காணும் காணும்னு சொல்லிட்டிருந்தேன் இல்லே... இதுதாண்டா. கடைசியில கீழ் வீட்டுப் பொடியன் தூக்கிட்டுப் போயிட்டான்... மதுரா கிட்ட போட்டுக் காமிக்கறதுக்கு முந்தி, நானே கடைசி டயலாக்கை கேட்கணும்னு இருந்தேன்... ஏதோ, வீட்டை விட்டுப் போனாங்களே... என்னதான் பேசிக்கப் போறாங்கன்னு 'டேப்'பை ஆன் பண்ணி வச்சேன்..."



மதுரா, கண்களைத் துடைத்துக் கொண்டு, தனது அறைக்கு ஓடி, அங்கிருந்து குரல் கொடுக்கிறாள்.

"என்னங்க... இங்கே சித்த வாங்க..."

அவள் எதற்காக அழைக்கிறாள் என்பது ராகவனுக்கா தெரியாது... அதற்கு மேலும் அங்கே நிற்க பைத்தியமா என்ன...

"டேய்... ஹேவ் எ நைஸ் டே..."

அவர், தீபிகாவைத் தூக்கிக் கொண்டு, தனது அறைக்கு ஓடுகிறார்.

□□□